# வள்ளுவர் நெறியில் வாழ்வது எப்போது?



மெய்யப்பன் பதிப்பகம்

தமிழண்ணல்

# வள்ளுவர் நெறியில் வாழ்வது எப்போது?

அறப்புரட்சி தோன்றாமல் அறநெறி வாழ்வியல் தொடங்காது!

தமிழண்ணல்

மெய்யப்பன் பதிப்பகம்
53,புதுத்தெரு,சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : ஏப்ரல், 2008
திருவள்ளுவர் ஆண்டு : 2039
உரிமை : ஆசிரியர்க்கு
**விலை : ரூ. 30.00**
மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 246

நினைவில் வாழும்
நிறுவனர்



## ச. மெய்யப்பனார்

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச் செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :
**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, **சிதம்பரம்** - 608001. ✆:**230069**
31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை** - 600108. ✆:**25361039**
6, சிவஞானம் தெரு, **தி. நகர், சென்னை** - 600017. ✆:**24357832**
110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை** - 625001. ✆:**2622853**
15, ராஜ வீதி, **கோயமுத்தூர்** - 641001. ✆:**2397155**
78, செரி சாலை, **சேலம்**-636001. ✆:**3207722**
28, நந்தி கோயில் தெரு, **திருச்சி** - 620002. ✆:**2706450**

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

# வைதிகம் வேறு! வள்ளுவம் வேறு!

- குறள்வழி வாழ்வில், கோயில்களில் வழிபாட்டுச் சீர்திருத்தம் தேவை.

- காசி விசுவநாதர் கோயிலில் போல் அவரவர் ‘பூவும் நீரும் கொண்டு’ வரிசையில் சென்று வழிபட, வழிவிடவேண்டும்.

- மன ஓர்மை மண்டபத்தில் மனத்தினுள் தமிழ்ப் பதிகம் - பாசுரம் - பாடல்களைப் பாடியும் மனஓர்மை (தியானம்) வழி மனத்தை ஒருவழி நிறுத்தப் பயின்றும் வழிபட வேண்டும்.

- திருக்கோயில்களில், அவற்றைப் பாதுகாத்தற்குரிய அளவு தவிர, நிதி குவிய விடக் கூடாது.

- யக்ஞம் (வேள்வி) ஹோமம் கோவில்களில் வேண்டாம். மக்களுக்குப் பயன்படுவனவற்றை, எந்தப் பெயரிலும் எந்த வகையிலும் வீணாக்க விடக் கூடாது. வள்ளுவம் வேள்வியை ஏற்கவில்லை

- ‘பரிகாரம்’என்ற பக்திப் புண்ணிய வாணிகமும், அதைத் தூண்டும் ‘இராசிபலன்’ எழுதுதலும் தவிர்க்கப் படவேண்டும். பணம் கொடுத்தால் பரிகாரம் கிடைத்திடுமா? வருந்துவதும் திருந்துவதும் மீண்டும் நல்வழிக்குத் திரும்புவதுமே ‘பரிகாரம்’. இந்திய நூல்களிலேயே பரிகாரப் பலன் கூறாத ஒரே நூல் திருக்குறளே.

- குறள் நெறியில் நற்பண்புகளை வளர்க்குமிடமாக - அவற்றை நோக்கி வழிபடுமிடமாகக் கோயில்கள் மாற்றப்படவேண்டும்.

- வேத வைதிகம் கோயில்களை விட்டு வெளியேற வேண்டும். தமிழ்நெறியே தழைக்கவேண்டும்.

- தமிழர்களின் சமயங்களாகிய சிவனியம், மாலியம், அம்மனியம் மூன்றும் புதுப்பிக்கப்படவேண்டும். இடைக்காலத்தில் ஏற்பட்ட சமற்கிருதக் கலப்படத்தைக் களைந்து, அவை தூய நெறிகளாதல் வேண்டும்.

- இவற்றுக்கு ஒரு பெரும் புரட்சி தேவை! அறப்புரட்சிக்கு அணி வகுப்பீர்! அவ்வாறு செய்யாமல் திருவள்ளுவர் நடைமுறைக்கு ஒவ்வாத நூலெழுதியவர் என்பதுபோன்ற தோற்றத்தை ஏற்படுத்துவது பிழை! நம் குறையை அவர்குறையாக்குவது பெரும்பிழை! ‘போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத் தேரோட்டம் இல்லை தெளி!’ (மாணிக்கக்குறள்).

ஏரகம்,
சதாசிவ நகர்,
மதுரை – 625 020.

**தமிழண்ணல்**

# உள்ளுறை

1. வள்ளுவர் காட்டும் வாழ்வியல் 5

2. திருக்குறள் வாழ்க்கை நூல் ஆவது எப்போது? 9

3. திருக்குறள் தமிழரின் அடையாளம் 50

4. திருக்குறள் மூலபாடத்தைச் சிதைப்பது கொடுமை 58

5. தமிழர் திருமறையைச் சிதைப்பது அறமாகுமா? 65

6. எந்தத் திருக்குறளை இந்தியத் தேசிய நூலாக்குவது? 70

7. கீதை நம் வழிகாட்டி நூலாகுமா? 75

# பின்னிணைப்பு

1. ஆல்பர்ட்டு சுவைட்சரின் திருக்குறட் சிந்தனைகள் 88

# 1. வள்ளுவர் காட்டும் வாழ்வியல்

திருக்குறள் வாழ்வுநூல். நீதிநூல் என்பதற்கும் வாழ்வுநூல் என்பதற்கும் வேறுபாடு உண்டு. வாழ்க்கை பலபடிநிலைகளை உடையது. எவ்வளவு கீழ்நிலையிலுள்ளவனையும் முன்னேற்ற வழிகாட்டுவதே திருக்குறள். 'கற்க' என்பார். கற்க வசதியில்லையே, காலங்கடந்து விட்டதே என்பவனைப் பார்த்து, 'கற்றிலனாயினும் கேட்க' என்பார். 'ஐயகோ எனக்குக் கண்கெட்டதே, காது கேட்கவில்லையே' என அலமருவானைப் பார்த்து, 'பொறியின்மை யார்க்கும் பழியன்று' என்பார். இவ்வாறே எண்ணிப் பார்த்தால், எத்தனை கீழ்ப்படியில் நிற்பவனையும் படிப்படியாக அவர் வழி காட்டும் அழகு புலப்படும். ஈதல் வேண்டுமா வேண்டாமா எனத் தயங்குபவனைப் பார்த்து 'ஈதல் இசைபட வாழ்தல் வேண்டும்' என்பார். 'ஈத்துவக்கும் இன்பம்' என அதிலுள்ள மகிழ்வைச் சுட்டுவார். ஈயும் பழக்கமுடையவனைப் பார்த்து, 'ஆற்றின் அளவறிந்து ஈக' என்பார்.

நாம் திருக்குறளுக்கு உரை கூறியும் நயம் பாராட்டியும் ஆராய்ச்சி செய்தும் மகிழ்கிறோம். திருவள்ளுவர் இதைக்காண நேர்ந்தால், மிகவும் வருத்தப்படுவார். ''அப்பா இதற்கெல்லாம் நான் திருக்குறளை எழுதவில்லை; நான் சொன்ன குறளை உன் வாழ்வில்வைத்து உரைத்துப்பார்! அதை வழிகாட்டியாகக் கொண்டு முன்னேறு!'' என்பார். ஒரு குறளுக்கு வாழ்வுரை பார்ப்போம்.

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் (533) அரசியல்

இது 'பொச்சாவாமை' என்ற அதிகாரத்தில் வருகிறது. பொச்சாத்தல் என்றால், வெறும் மறதி அன்று. எழுதுதூவலை வைத்துவிட்டுத் தேடும் மறதி அன்று; அது கடமையை மறப்பது. இன்று ஒருவர் பல வாக்குறுதிகளைக் கொடுத்து ஒரு பதவிக்கு வருகிறார்;வந்தபின் சொன்னவற்றை மறந்து விடுவாராயின், அதுதான் பொச்சாத்தல் என்ற மறதி ஆகும். தமிழ் மொழியைநாம் எவ்வளவு புகழ்கிறோம். மேடை ஏறினால், ''சாவில் தமிழ் படித்துச் சாகவேண்டும், சாம்பல் தமிழ் மணந்து

வேகவேண்டும்" என்று முழங்காமல் இறங்குகிறோமா? இல்லையே. ஆனால், அங்ஙனம் நாம் புகழ்ந்த தமிழுக்காக ஒரு சிறுபணியைக்கூடச் செய்யாமல் விட்டுவிடுகிறோம். அப்போதுதான் குறள் நினைவுக்கு வரவேண்டும். ''புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்''. செய்ய முடியாவிட்டால், புகழாமலாவது இருக்க வேண்டும். அல்லாமல் புகழ்ந்து விட்டுச் செயல் செய்யாதிருந்தால் எழுமையும் நன்மை இல்லை என்று கூறுகிறார். இப்பிறவி பயனின்றி ஒழியும் என்பது உறுதிப்படுகிறது. இதுபோல் வாழ்க்கையில் வைத்து, உரைத்து உரைத்துப் பார்த்துச் செயற்படுத்துவதற்குத்தான் திருவள்ளுவர் திருக்குறளை யாத்துள்ளார். இனி நாம் அந்த நோக்கிலும் போக்கிலும்தான் திருக்குறளைப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் வள்ளுவன்தன்னை உலகினுக்குத் தந்தவர் என்ற பெருமை நம்மைச் சேரும்.

உரைவிளக்கம் என்பது கைவிளக்குப் போன்றது. உரைகளை வைத்துப் படித்துத் திருக்குறளின் உள்பொருளை – உயிரை – உயிரான கருத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் பிறகு உரையை விட்டுவிடவேண்டும். 'உரை' ஆற்றைக்கடக்க உதவும் படகு போன்றது. உடனே நாம் அக்கரைக்குப் போய் விடவேண்டும். அதற்குரிய கருவிதான் அது. கைவிளக்கின் பயன் யாது? கைவிளக்கால் நாம் பிறிதொரு பொருளைக் காணமுயல்கிறோம். கண்டதும் கைவிளக்கின் பயன் முற்றுப் பெறுவதால் அதை அணைத்துவிடுகிறோம். அதுபோல் நாம் உரையைப்பயன்படுத்தி, உண்மைகண்டதும் அந்த உண்மையை மட்டுமே பற்றிக் கொள்ளவேண்டும். உரையை வைத்துக் கொண்டு விளையாடுவதும் நயம் காண்பதும் ஆராய்ச்சியில் திளைப்பதும் கைவிளக்கைப் பயனின்றி, அதை ஒளிவீச்சு ஒன்றே கருதி அடித்து அடித்து மகிழும் சிறு குழந்தையின் செயல் போன்றதாகும். திரிதீய்ந்து போகும் எனக் குழந்தையை அதட்டி ஆத்திரப் படுகிறோம் அல்லவா? நாம் மட்டும் அவ்வாறு விளையாட்டுகளில் மகிழலாமா?

'தவம்' என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் இருவகைத் தவங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். துறவறத்தவம் என்பது நாம் முன்பே அறிந்தது. கண் மூடித் தியானத்தில் அமர்வது. திருவள்ளுவர் புதிதாகக் கூறுவது இல்லறத்தவம். உலகில் இல்லறத்தவம் செய்பவர்கள் பெருகவேண்டுமென்பதையே அவர் பத்துக் குறள்களிலும் விளக்குகிறார்.

'இல்லறத் தவம்' என்பது என்ன? ஒருதாய் தன் குழந்தைகளை வளர்ப்பதற்காக உண்ணாது. உறங்காது அரும்பாடு படுகிறாள். தன் குடும்பத்தில் மகளுக்கு ஒரு திருமணத்தை முடிப்பதற்கு, ஒருதந்தை படும்பாடு எல்லாம் தவம் இல்லையா? தம் சுகத்தை இழக்கிறார்கள். பல நாள் பட்டினி கிடக்கிறார்கள். எத்தனை இரவுகள் தூங்காமல் கழிகின்றன. கடன்காரர் கூறும் கடுஞ்சொற்களைப் பொறுத்துக்கொண்டு, மாறாகப் புன்னகைகாட்டி மழுப்பி மானங்காத்து உரிய நாளில் கடன்தவணை கட்டி, அப்பா! அவர்கள் இழக்க இருந்த சொத்துக்களை மீட்டால் – அத்தனை நாளும் அவர்கள் செய்தது தவமில்லையா?

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு (261)

என்றார் அவர். தவத்திற்கு உருவம் கண்களை மூடி அமரும் காட்சிமட்டுமன்று. வருகிற துன்பங்களை எல்லாம் எவனொருவன் பொறுத்துக் கொண்டு – தாங்கிக்கொண்டு முன்னேறுகிறானோ, அதுவே தவத்தின் திருக்காட்சியாம். யாருக்கும் எவ்வுயிர்க்கும் துன்பம் செய்தல் கூடாது. மற்றவர்க்குத் துன்பம் தராமல் பணம் சேர்க்கமுடியாது என்றல்லவா பலர் நினைக்கிறார்கள். நாம் ஏற்கும் கடமைகள் பல. இளமையில் படித்துப் பட்டம் பெறவேண்டும் என்ற கவலை, பதவி பெறவேண்டுமென்ற கடும் முயற்சி, திருமணமான பின் மனைவி, குழந்தைகள், குடும்பம் எனத்தாங்கவேண்டிய கடமை வரிசைகள் – அவைதான் உற்ற நோய் என்பன. நமக்கு வந்தமையும் கடமைகள் அவை. ஏனைய துறவறத்தவத்தை அவர் வெறுக்கவில்லை; மறுக்கவுமில்லை. ஆனால், அதுவும் அத்துறவுத் தவத்தைத்தம் கடமையாகக் கொண்டு, புத்தர்போல, அத் தவத்தாலாம் பயனை உலகிற்கு அளிக்க முயல்வோர்க்கே ஆகும்.

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது (262)

எனக்கு ஆசிரியத் தொழில் தவம்; அவருக்கு மருத்துவத்துறையில் தவம்; மற்றவர்க்குப் பொதுத் தொண்டுத்தவம்; மிகச் சிலருக்கோ முற்றத்துறந்து ஞானத்தில் அமரும் தவம். இல்லற வாணர் பலருக்கு அக்குடும்ப வாழ்வென்பதுவும் ஒருதவம். இவ்வாறு அவரவர் தத்தமது கடமையில் தவறாது – வரும் துன்பங்களை எதிர்த்துப் போராடி வென்று முன்னேறுவதே அவரவர்தம் தவமாகும். தவம் செய்து ஐம்புலன் அடக்குவானுக்கு, அவ்வாறு அடங்காமல் போக இச்சைகளைத் தூண்டும்

எத்தனை சோதனைகள் வரும்? அவற்றை வென்று அவன் தவமாம் தன்கடமையை விடாது பற்றுவனேல், அதுவே அவனது தவமாகும்.

நான் ஆசிரியனாக இருந்துகொண்டு அதைச் சரிவரச் செய்ய மிக உழைக்கவேண்டியிருக்கும். அல்லாமல் நான் வாணிகத்தில் ஈடுபட்டால், ஒன்று ஆசிரியப் பணி கெடும்; அல்லது வாணிகம் பாழ்படும்.

எனவேதான்,

தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு (266)

என்றார் திருவள்ளுவர். உலக நாடக மேடையில் ஒவ்வொருவருக்கும் ஒருபாத்திரம் தரப்பட்டுள்ளது என்பதை, சேக்சுபியர் நன்கு கூறுவார்; அவ்வப் பாத்திரத்திற்கேற்பவே அவரவர் நடிக்க முடியும்; நடிக்கவேண்டும். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பது சமத்துவத்திற்காகச் சொல்லப்பட்ட ஒரு சொல்நடை. அதைவிடுத்து இன்று நாம் எல்லோருமே ஒன்றைவிட்டு ஒன்றுக்கு ஆசைப் படுகிறோம். அவரவர் கடமையை நாம் செய்ய மறந்துவிடுகிறோம் நம்மைப் பார்த்துத்தான் திருவள்ளுவர், "தவம் செய்வார் தம்கருமம் செய்வார்" என்றார். உனக்கு, உன் மன நிலைக்கு, உன் பண்புக்கு, இயல்புக்கு ஏற்றதொரு கடமையைத் தேடிப் பிடித்துக்கொள். அதில் நீ மன்னனாக உயர் – அதில் வரும் இடர்ப்பாடுகளைக் கடந்து முன்னேறு. அத்துறையில் யாவரினும் மேம்பட்டவன் என்று பெயர்பெறுக. அல்லாமல் உனக்கு உகந்ததல்லாத பிறிதொன்றற்கு ஆசைப்பட்டு, இருந்த இடத்தையும் கெடுத்து, ஆசைப்பட்ட அதையும் கெடுத்து அலையாதே என்பதுதான் தொனிப்பொருள்.

"தவம்செய்வார் தங்கருமம் செய்வார்"

இன்று நம் அலுவலகங்கள் தோறும் எழுதித் தொங்க விடத்தக்க வாழ்க்கை வாசகம், "தவம் செய்வார் தங்கருமம் செய்வார்" என்றால் மறுப்பவர் உண்டா?

## 2. திருக்குறள் வாழ்க்கைநூல் ஆவது எப்போது?

**1. தமிழர்களாகிய நாம் உண்மையிலேயே திருக்குறளை நம் வேதமாக – அன்றாட வாழ்க்கை நூலாகக் கொண்டு வாழ்கிறோமா?**

இல்லை; இல்லவே இல்லை, நாம் குழம்பிப் போய்க் கிடக்கிறோம். திருக்குறளிலிருந்து இங்குப் பல வினாக்கள் தொடுக்கப்படுகின்றன. இதற்கான விடைகளும் இதில் தரப்படுகின்றன. இதுபற்றி மனம்திறந்து விவாதிக்கத் தமிழின மக்களை அழைக்கின்றோம். இதனை ஒரு வழக்காடு மன்றமாகக் கொண்டு, சிந்திப்போம்; செயற்படுவோம்; இனியேனும் தமிழின மக்களாகிய நாம் அனைவரும் வள்ளுவர் காட்டிய வழியில் வாழ்வோம்.

**2. இதுவரை திருக்குறளுக்காக எவ்வளவோ செய்துள்ளோம். அவை போதாவா?**

✪ திருவள்ளுவர் தம் நூலுக்கு உரை எழுதுவதற்காக, எழுதவில்லை; இலக்கிய நயங்கண்டு சொற்பொழிவு நடத்தவும் தம் நூலை எழுதவில்லை.

✪ திருவள்ளுவர் தமக்குச் சிலை எழுப்ப வேண்டும் என்றோ, மண்டபம் கட்டவேண்டும் என்றோ, தம் பெயரால் கழகம் மன்றம் போல்வன நடத்த வேண்டுமென்றோ, தமது புகழ் பாடவேண்டுமென்றோ நூல் எழுதவில்லை.

✪ திருக்குறளைப் பற்றித்தான் மிகக் கூடுதலான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. திருவள்ளுவர் அதற்காகமட்டுமே, தமது நூலை எழுதியதாக, நினைப்பது பிழை.

**3. திருள்ளுவர் எதற்காகத் தம் நூலை எழுதினார்?**

ஆரியர்கள் நுழைவால், வேத வைதிக மதம் தென்னாடுவரை பரவிற்று. தமிழக மூவேந்தர்களும் வடநாட்டை வென்றதுண்டு; ஆனால், அங்கிருந்த வேதியர்களின் ஆசை வார்த்தைகளில் அகப்பட்டு, வேள்விகள் செய்வதில் பேரார்வம் கொண்டார்கள். வேள்வி செய்வதற்கென்றே, வேத வேதியர்களை இங்கே குடியேற்றினார்கள். சங்க காலத்திலேயே வைதிக மதச் சார்பு இங்கிருந்த சிவனியம், மாலியம், கொற்றவைத் தாயியம் மூன்றையும் வருமானம் கருதி, ஏற்கத் தொடங்கிவிட்டது.

வடநாட்டுத் திராவிடர்களான புத்தரும், மகாவீரரும் வேத வைதிகம் பரப்பிய வேள்விகளையும் வருணாசிரம தருமத்தையும் பிற பல கேடுகளையும் எதிர்த்துப் போர்க்கொடி எழுப்பினார்கள்.

அதன் பிறகு தெற்கே அவ் வேத வைதிக வருணாசிரம, வேள்வித் தீமைகள் பரவ முற்பட்டபோது, தமிழக மன்னர்கள் அவர்கள் நிறத்திலும் அழகிலும் நல்லவர்போல் நடிக்கும் சூழ்ச்சித் திறத்திலும் அகப்பட்டு, நிலை தடுமாறினர். இந் நிலையில், அவற்றை எதிர்த்து, தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்தத் திருவள்ளுவர் தமது நூலை யாத்தார்.

திருவள்ளுவர் தமிழ்மக்கள், அவ் வேத வைதிகத்தினின்றும் தப்பித்துத் தமிழ்ப் பண்பாட்டைப் போற்றி வாழ வழிகாட்டவே தமது நூலைப் படைத்தார். புத்தரும் மகாவீரரும் கடுந்துறவுகள், உலக வாழ்வு வெறுப்பு என இவை போலச் செய்துவிட்ட, சில இயற்கைக்கு முரண்பாடானவற்றைத் திருவள்ளுவர் தவிர்த்துப் பாரத நாடு முழுவதும் பின்பற்றத்தக்க, ஒரு பொது அறநூலைத் தந்தார்.

## 4. திருக்குறள் தோன்றிய காலப் பின்னணி எது?

இன்று 'சுனாமி' என்பது, நம் முன்னோரால் 'கடல்கோள்' எனப்பட்டது. தெற்கே குமரிக்கண்டத்தில் 49 நாடுகள் இருந்தன. குமரிமலை, குமரியாறு, அதற்கும் தெற்கே பன்மலை அடுக்கம் – மலைத்தொடர், அதிலிருந்து பாய்ந்த

பஃறுளியாறு எல்லாம் இரண்டு (சுனாமி) ஆழிப்பேரலைகளால், கடலாற் கொள்ளப்பட்டன.

தொல்காப்பியர் இம் முதற் கடல் கோளுக்குத் தப்பிவந்து, மொழியையும் இலக்கியத்தையும் இடையறவுபடாமல் காக்க, ஒப்பற்ற நூலைத் தந்தார்.

சங்கப் புலவர்கள், அழிந்து போனவைபோக, மீந்தவற்றோடு, தாமும் பாடி, திட்டமிட்டுத் தமிழ் இலக்கிய மரபை மீட்டுருவாக்கம் செய்தனர்.

திருவள்ளுவர், வடக்கிலிருந்து வந்த பண்பாட்டுப் படையெடுப்பை, தமிழக வேந்தர்களும் அறியாமை வயப்பட்ட மக்களும் ஏற்ற நிலையில், அதனைத் தடுத்து, தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் மீட்டு, நிலைபெறுத்த எழுதியதே திருக்குறள்.

இளங்கோவடிகள் தமிழரின் இசைக்கலை, நாட்டியக்கலை, நாடகக்கலை பற்றிய நுணுக்கங்களை எழுதிவைத்து, இயற்கையாலும் எதிரிகளாலும் அழிக்கப்பட்டவை போக, எஞ்சியவற்றின் வேர்களை மட்டுமாவது, நமக்கு விளக்கி நம் கலைச்செல்வ வரலாற்றின் மூலத்தைக் காட்டிச் சென்றார்.

வடக்கே புத்தரும் மகாவீரரும் மேற்கொண்ட, அதே வைதிக எதிர்ப்பை வேறு ஒரு விதத்தில் இங்கு விதைத்துச் சென்றார், திருவள்ளுவர். அவர்களுக்குப் பின்வந்த பட்டறிவால், திருவள்ளுவர் தாமும் ஒரு சமய குருவாகாமல், ஒரு தனிமதம் ஏனத் தொடங்காமல், தமிழர்தம் பண்பாட்டுப் படைப்பாகவும் அதே சமயம், உலகப் பொதுமறையாகவும் தமதுநூல் விளங்கும்படி, செய்தருளினார்.

## 5. வேத வைதிக மதத்தை மறுக்க, வெறுக்க, எதிர்க்க வேண்டிய கட்டாயம் என்ன?

1. புத்தசமணம்போல வைதிகமும் வேற்றுமொழிப் புறச்சமயமே. சமற்கிருத ஆதிக்கச் சமயம் அது.

2. மேலே சுட்டிய மூன்றுமே, உலக வாழ்வை வெறுக்கும் நோக்குடன் பார்க்கவைக்கும் வடநாட்டுச் சமயங்கள்.

தென்னாட்டுச் சிவனிய, மாலிய, கொற்றவை (சக்தி) வழிபாடுகள், உலக வாழ்வை விருப்பு நோக்குடன் பார்க்க வைப்பவை. இதைச் செருமானியப் பேரறிஞர் ஆல்பர்ட்டு சுவைட்சர் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளார்.

3. வேதவைதிகம் பகவத் கீதை வரை 'வருணாசிரம தருமத்தை வற்புறுத்துவது. பிறப்பால் பிராமணன் உயர்ந்தவன் என்பது. மகாசுவாமிகள் எனப்படும் சாமியார்கள் முதல், அனைத்துப் பிராமணாளும் பூணூல் போட்டுக் கொண்டு, 'பூசுரர்' ஆகிவிடுகின்றனர். தீண்டாமை தேநீர்க்கடைக் குவளைகளில் மட்டுமில்லை, நம் தமிழர் கட்டிய, நம் கோயில்களிலேயே குறுக்கே நிற்கும் நந்திகளிடம், தீண்டாமை தாண்டவமாடிக் கொண்டுதான் இருக்கிறது.

4. இவ் வேத வைதிகம், வேள்வி ஹோமம் என்று கூறி, மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் அக்கினியில் போட்டு அழிக்கின்றது.

தமிழர்களின் பக்தியையே முதலீடாக்கி, திருக் கோயில்களைப் புண்ணியவியாபார வணிகக் கூடங்களாக மாற்றி, பிராமணியம் இடைத் தரகர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டு, மக்களின் செல்வம், பொன், மணி, பிற பொருள்கள் அனைத்தையும் கொள்ளை கொள்வதற்கு, இவ் 'வைதிகமே' முதற்காரணமாகும்.

5. செய்த வினைக்குப் பயனுண்டு, ஒருவன் தான் செய்த வினையின் பயனை அனுபவித்தே தீர வேண்டும். ஆனால் வைதிகம் இதற்குப் பரிகாரம் கூறுகிறது. மக்கள் எவ்விதப் பாவம் செய்தாலும் அல்லது தோசம் ஏற்பட்டாலும் அதற்கொரு 'பரிகாரம்' சொல்லிப் பணம் பறிக்கிறது வைதிகம். இதற்குத் தமிழர்கண்ட 'கணியம்' எனப்படும் சோதிடத்தை, ஒரு மாயமயக்கக் கருவியாகப் பயன்படுத்தி, அதன்வழி ஆயிரம் 'பரிகாரங்கள்' கூறி, மக்களிடமிருந்து செல்வமனைத்தும் கொள்ளை கொள்ளப் படுகிறது. சமற்கிருத மொழி புகுத்தப் படுகிறது. இது ஒரு வழியில், மக்கள் பாவம் செய்யத் தூண்டு கோலாகிறது. முறை மன்றத்தில், 'முன்பிணையம்' (முன் சாமீன்) வாங்குவது

போல, நம் தலைவர்களும் இப் பரிகாரப் புண்ணிய பக்தி பரவசத்தில் ஈடுபட்டு, பாரத நாடே ஊழல் நாடாகி உழல்கிறது.

இவ் வைதிகம் வேரொடும் வேரடி மண்ணோடும் ஒழிக்கப்பட்டாலன்றிப் பாரதநாடு உருப்படவே உருப்படாது.

6. சன்னியாசிகளே உயர்ந்தவர்கள் – கடவுளுக்குச் சமமாக மட்டுமன்று, கடவுளர்க்கும் மேம்பட்டவர்கள் என்று கூறி, பொருள் வளம் மிக்க பெரும் பெரும் செல்வர்களுட்பட, இல்லறத்தாரை அவர்கள் கால்களில் விழவைத்து, காணிக்கைகளும் குவிய வைக்கிறது.

இதனால் இன்று இந்தியாவில் சாமியார்கள் கூட்டம் பெருகி வருகிறது; அவர்கள் கொட்டம் தாங்க முடியவில்லை. பல சாமியார்கள் பல கோடி ஈசுவரர்களாகி, இந்திய நாட்டின் பெரும் 'முதலாளிகளாகி' வருகின்றனர். இது ஒன்றே சிறந்த, பக்குவமான, மக்களையும் மகளிரையும் மயக்கக் கிடைத்த 'தொழிலாகி' விட்டது. இதைத்தூக்கிப் பிடிப்பதும் வைதிகமே.

7. மூட நம்பிக்கைகளைப் புதிதாக உண்டாக்குவது; முன்பே மக்களிடம் காணப்படுவனவற்றை ஊக்கப் படுத்தி வளர்ப்பது; "தான் சொன்னால் அது கடவுள் சொன்னதற்கு ஒப்பாகும்; அது பற்றி நம்பாமல் எதிர்க் கேள்வி எழுப்புபவன் நரகத்திற்குப் போவான்" என்று பகவான் சொல்வதுபோலக் கூறி, அனைவரையும் அடிமைப்படுத்துவது – இவை ›வைதிகத் திருப்பணிகளாகும்.

இதை மக்கள் எதிர்க்காமல் ஏற்கிறார்களே என்றால், இதனால் பல்வேறு "க்ஷேமங்கள் உண்டு; புத்திர பாக்கியம் உண்டாகும்; கிரக தோசம் நீங்கும்; செய்த பாவங்களினின்றும் விடுபடலாம்; செய்யப் போகிற பாவங்கள் பற்றிக் கூட அஞ்சவேண்டுவதில்லை; முன்பே பலர் நாம் செய்யப் போவது போன்ற அதே பாவங்களைச் செய்து, பெருவாழ்வு வாழும்போது, நாமும் அப்படி வாழலாமே; இதற்கெல்லாம் தப்பிக்க வழியிருக்கும் போது கவலை ஏன்" – என்பன போன்ற உள்ளுணர்வுகள் பாரதத்

தாயின் மக்களுடைய மனங்களிலெல்லாம், புற்று நோய் போலப் பரவிக் கிடப்பதற்கு இவ்வைதிகமே அடிப்படையாகும்.

இதனால்தான் திருவள்ளுவருக்கு, வைதிகத்தை மறுக்க மட்டுமன்றி, மாற்றுவழி காட்டவும் தேவை ஏற்பட்டது. நாமும் அவ் வள்ளுவ வழியைப் பின்பற்றி, திருக்குறளைத் தேசிய நூலாக்கி, பாரத நாடும் அவ்வழியைப் பின்பற்ற வைத்தால்தான் இந்த நாட்டிற்கு 'விமோசனம்' உண்டு.

**இதனைப் பகுத்தறிவுள்ள பிராமணியமும் ஏற்பதே, அதற்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது.**

**6. வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை போல்வன மிக உயரிய தத்துவங்களைக் கூறுகின்றனவே; அவ்வாறிருக்க அவற்றின் வழிப்பட்ட வைதிக சமயம் எவ்வாறு வெறுக்கத்தக்கதாகும்?**

'அத்துவைதம்' – என்பது ஒரு சமயக் கோட்பாடு. சித்தாந்தம் – சிவனிய மெய்யியல் ஒரு கோட்பாடு. புத்தம், சமணம் கூறும் கோட்பாடுகளும் உள. இக் கோட்பாடுகளில், பிராமணியம் மேலோங்கியதாலும், அதனை விளக்கும் சமற்கிருதம் முன்னரே உலகம் முழுவதும் பரவியதாலும், ஒரு சமயச் சிந்தனை எனும் அளவில், அதனை ஒரு தனிப்பட்ட வழி எனப்பலர் ஏற்று விளக்கியுள்ளனர். சிவன், முருகன், திருமால், கொற்றவை வழிபாடுகளை எல்லாம் அத்துவைதத்துடன் குழப்பி, தமிழர் சமயங்களை மழுங்கடித்து, பிராமணர்கள் மட்டுமே வாழ வழிவகுத்தவர் ஆதிசங்கரர். அவர் வகுத்த இந்துமதம் என்பது, வேதவைதிக மேலாண்மை மிக்கது. அதனால் பின் வந்த பலரும் 'இந்துமத' மயக்கத்தில் ஆழ்ந்து, தங்களை இழந்தனர். இதனை இராமகிருஷ்ண பரமகம்சர், விவேகானந்தர் உட்படப் பலர் நன்கு விரிவுபடுத்திப் பரப்பியுள்ளனர்.

ஆயினும் அவர்களிலும் பல வகையினருண்டு. மேலே கூறிய தீமைகளைக் கண்டித்துவிட்டுக் கோட்பாடுகளை மட்டும் விளக்குபவர்கள்; மேற்கண்ட தீமைகளை இன்றைய அறிவியல் யுகத்திலும் கைவிடாமல் கடைப்பிடித்து,

அதனால் வருவாய் கிடைப்பதால் அவற்றையே கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு வாழ்பவர்கள்; இரண்டுக்கும் நடுவே சூழ்ச்சித் திறத்துடன் நயம்படக் காட்டி நடிப்பவர்கள் – இவ்வாறு இனங்காணலாம்.

அவரவர் கோட்பாடு அவரவர்க்கு உயர்ந்ததே. ஆனால் வைதிக மேலாண்மையை ஏற்பது, பிறர்க்கு இயலாது. முன்னே கூறிய தீமைகளை மறுப்பதும், அவற்றைத் தவிர்க்கச் சொல்வதும் பிராமண எதிர்ப்பு ஆகாது. சமற்கிருதமொழியை வெறுப்பதும் ஆகாது. என்மீது 'பச்சைக் குதிரை ஏறாதே' என்றால், அது அவ்வாறு செய்பவனைப் பகைப்பதாகுமா?

பகுத்தறிவுள்ள பிராமணர்களும் வள்ளுவர்வழியையே பாராட்டியுள்ளனர். மற்றவர்கள்தான் திருந்த வேண்டும்.

இதில் யாருக்கும் யாரும் பகையில்லை. எம்மொழி மீதும் யாருக்கும் வெறுப்பில்லை.

## 7. வள்ளுவ நெறிகளை நாம் எடுத்துச் சொன்னால் பலர் இதைக் கடவுள் மறுப்பு, நாத்திகம், துவேசம், குறுகிய மனப்பான்மை, தீவிரவாதம் எனப் பழி தூற்றுகிறார்களே?

நாம் கட்டிய கோயிலில் – நமது மக்கள் கட்டிய கோயிலில் நமது தாய்மொழியிலேயே வழிபடுவோம் என்பது எவ்வாறு வடமொழித் துவேசமாகும்?

எங்கள் வாழ்க்கைச் சடங்குகளுக்கு, எங்கள் தாய்மொழிதான் வேண்டும், சமற்கிருதம் வேண்டாம் என்பது எப்படித் தவறாகும்?

ஒரு வீட்டிற்குள் புகுந்து திருடமுயல்பவனை, அவ் வீட்டுக் குடையவன் கையும் களவுமாகப் பிடித்து, வெளியேறச் சொல்வது எப்படிக் குற்றமாகும்? வெள்ளையனே வெளியேறு – இயக்கம் சுதந்திரப் போராட்டம் அன்றோ? 'வைதிகமே வெளியேறு' என்பதும், பொதுமக்கள் இயக்கமாகும் நாள் வந்துளது. இதனைத் 'தாய்மொழி – தமிழ்மொழி விடுதலைப் போராட்டம்' என்றே, எல்லோரும் மதிக்கவேண்டும்.

**8. திருக்குறளைப் போல, ஒரு நூலை வேறு எந்த ஓர் இந்திய மொழியிலும் காணவில்லை; வேறு எந்த இந்திய உதடுகளும் திருவள்ளுவர் கூறியன போன்ற உயரிய கருத்துக்களை உச்சரிக்கவில்லை – இவ்வாறு ஆல்பர்ட்டு சுவைட்சர் கூறியதன் காரணங்கள் யாவை? திருக்குறட் சிந்தனைகளைப் பற்றி ஒவ்வொன்றாகக் கூறும் முன், அதன் தனிச் சிறப்புள்ள சிந்தனைகளைப் பட்டியலிடுக.**

1. தம்மை யாரென இனங்காட்டிக் கொள்ளவும் விரும்பாத, ஒப்பற்ற சான்றோர் திருவள்ளுவர்.

2. தாம் ஒரு புதிய சமயத்தை – மடத்தை நிறுவ எண்ணாத ஒரே ஒரு சிறந்த இந்தியர். நான் ஒரு முனிவன், சமயாசிரியன், கடவுளுக்குச் சமமானவன் என்று கூறி, யாரையும் கட்டாயப்படுத்தாதவர்.

ஒவ்வொருவரையும் யார் யார் கூறினும் சிந்தித்து ஏற்பன ஏற்க எனத் தனிப்பட்டவர்தம் எண்ணங்கட்குச் சுதந்திரம் தந்தவர்.

என்நூலைப் படிப்பதனால், ஏற்று நடப்பதனால், இன்ன இன்ன புண்ணியமுண்டு, பேறுகள் உண்டு, நன்மைகள் உண்டு என முடிவில் ஆசை வார்த்தைகளை அடுக்காத ஒரே நூல் திருக்குறளே.

3. கடவுளைப் பணம் செலவழிப்பதன் மூலம் ஏமாற்ற முடியாது. பத்தாயிரம் செலவழிப்பவனுக்கு இவ்வளவு புண்ணியம் – அவனே நூறாயிரம் செலவழித்தால் இவ்வளவு புண்ணியம் எனப் ‘புண்ணிய வாணிகப் பேரம்’ பேசாத ஒரே நூல் இது.

4. எந்த ஒரு பாவத்திற்கும் – தோசத்திற்கும் இன்ன இன்ன பரிகாரமுண்டு என வடமொழிப் புராண, இதிகாச, வேத, உபநிடத, கீதை முதலான அனைத்து நூல்களும் கூறும். தினை விதைத்தவன் தினை அறுப்பது போல, வினை விதைத்தவன் வினையின் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என அடித்துச் சொன்ன ஒரே இந்திய நூல் திருக்குறளே.

5. சன்னியாசிகளையே தெய்வமென்பன வடமொழி நூல்கள் – அதற்கு மாறாக, 'இல்வாழ்க்கை' அதிகாரத்தில், அவ் இல்லறத்தானையே 'தெய்வம்' என்று கூறிய ஒரே இந்திய நூல் இது.

அதுமட்டுமன்றி துறந்தார், துவ்வாதவர் (வறியவர்), ஏதிலிகளாகவோ போர் முதலியவற்றிலோ இறந்தார் என எல்லோர்க்கும் இல்லறத்தானே துணை. பொறுப்புமிக்க அவனே தொழத்தக்கவன்; சன்னியாசிகள் அல்லர் என்பது இந்நூல்.

6. 'துறவு என்பது காவி உடுத்துவதன்று; கமண்டலம் ஏந்துவது அன்று; காடு போவது அன்று. இப் புறவேடங்களைப் பயன்படுத்தி, இயற்கைக்கு மாறான வாழ்வை மேற்கொண்டு, உலகைப் பாழ்படுத்திக் 'குளுகுளு' வாசம் செய்துகொண்டே, அனைத்து இன்பங்களையும் நுகரும் இன்றையச் சாமியார்களைப் பார்க்கிறோம். இவர்களைப் பற்றி, 'கூடா ஒழுக்கம்' என்று தனி அதிகாரம் வகுத்த நூல் திருக்குறள்.

7. திருவள்ளுவர் ஒருவரே இந்திய நூல்களில் புதிய சிந்தனை – புரட்சிச் சிந்தனை படைத்தவர். இல்லறத்துறவு – இல்லற வாழ்விலிருந்து கொண்டே மனத்துறவு பூணுதல்.

இல்லறத்தவம் – இல்லறக் கடமைகளை ஆற்றுவதே தவம் – அவரவர் தத்தம் கடமையாற்றுவதே தவம் – அதில் வரும் தடை, துன்பம், இடையூறுகளைப் பொறுத்துத் தாங்கித் தன்னையே 'ஈகம்' செய்யும் சான்றாண்மையே தவம்.

இல்லறவேள்வி – கண்காணாத தேவர்களுக்கு அனுப்புவதாகச் சொல்லி, மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் நெருப்பில் போடச்செய்யும் வேள்வியை அவர் மறுத்தார். வேள்வியில் உயிர்க்கொலை செய்து வந்ததை அவர் கண்டித்தார். கண்கண்ட விருந்தினர்க்கு விருந்து படைப்பதையே அவர் 'வேள்வி' என்றார்.

பொதுவாக 'இந்துமதம்' பற்றி, ஒவ்வொரு செயலையும் – சடங்கையும் – விழாவையும் எண்ணிப் பார்த்தால்,

மக்களைப் புறக்கணிக்கும் மதம் இந்துமதம்; மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் கடவுளுக்கு என்று கூறி, மக்களை மறக்கடிக்கும் மதம் இந்து மதம்.

மக்களையே நினைப்பூட்டி மக்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி மக்களின் நலங்காக்கவே எழுதப்பட்ட நூல் திருக்குறள். சுருக்கமாகச் சொன்னால், மக்களின் தன்முன்னேற்றம் கருதியே, 1330 குறட்பாக்களையும் வடித்த, உலகின் முதல் தன் முன்னேற்றச் சிந்தனை நூல் திருக்குறளே.

மேலுலகம் பற்றிப் பேசாதவர். மேலுலக இன்பங்களைப் பற்றிக் கதைக்காதவர். மேலுலகம் இல்லெனினும் – என்றவர். சில போது மேலுலகம் பற்றி உலகினர் கொண்ட நம்பிக்கையை அவர் பயன்படுத்தினாலும் இவ்வுலக வாழ்க்கைச் சிறப்பை அறிவுறுத்தவே அவற்றைப் பயன்படுத்திக் கொண்டவர். இதை மொழி பெயர்ப்பில் படித்த, ஆல்பர்ட்டு சுவைட்சர் விளங்கிக்கொண்டு கூறியுள்ளார். 1330 குறள்களையும் ஒப்பிக்கும் அருந்தவக் குழந்தைச் செல்வங்களைப் பெற்ற, நம்மவர்க்கு, திருக்குறளின் 'உட்கிடை' இன்னமும் முழுமையாய் விளங்கியபாடில்லையே!

### 9. மனிதர்களைப் பிறப்பினால் உயர்வுதாழ்வு கற்பிப்பதைப் பற்றி வள்ளுவர் கருத்து யாது?

பகவத் கீதை வேதங்களின் சாரம். அது கூறுவதென்ன?

"பிராமணன் சத்திரியன் வைசியன் இவர்களுடைய, மற்றும் நான்காம் வருணத்தவர்களுடைய கர்மங்கள் (அவர்களின் பிறப்பு) இயல்பிலிருந்து உண்டான குணங்களுக்கு ஏற்பப் பிரிக்கப்பட்டுள்ளன."

(சாத்துவிகம், இராஜசம், தாமசம் எனும் குணங்கள், பிறவியிலேயே அமைவதன் மூலம் அவர்கள் பிறக்கும்போதே பிராமணர் முதலியவர்களாகப் பிறக்கிறார்கள். ஒருவன் பிறந்த பிற்பாடு குணம்

அமைவதில்லை. குணம் காரணமாக அவன் தாமச குணத்தில் பிறந்து, மற்ற மூவருணத்தாருக்கும் பணிவிடை செய்யும் இயல்பு படைத்தவன் ஆகின்றான்.) (18 – 41)

இந்த நான்கு வருணங்களும் என்னால் படைக்கப்பட்டது என்கின்றார் பரந்தாமன். (4 – 11) பிறப்பு செயல் இரண்டில் பிறப்பை வைத்துத்தான் பிராமணர் முதலிய வர்ணப் பிரிவு நடந்து வருகிறது.

இவ்வாறு பிறப்பினால் ஏற்படும் வர்ண பேதத்தையும், அவரவர்க்குரிய கர்மங்களையும் யாரும் மாற்றிக் கொள்ளக் கூடாது. ஒரு சூத்திரன் தனக்குரிய 'ஸேவை' செய்யும் பணியைக் குறையுடையதென்று கருதி, மேல் வருணத்தாருடைய கடமைகளைத் தான் மேற்கொள்ளலாகாது.

அதாவது ஒரு சூத்திரன் தனக்குரிய மலம்அள்ளுவது முதலான பணிவிடைகள் செய்வதை விட்டுவிட்டு, மேலுள்ள மூவருணத்தாருக்கும் உரிய படிப்புமுதலியன செய்ய முற்படக் கூடாது. அவ்வாறு செய்வது அவனை நரகத்தில் செலுத்திவிடும்.

இந்த பிறப்பினாலான வருணங்களை நானே படைத்தேன் என்று கூறும் பரந்தாமன், இவற்றை மாற்றிக் கொள்ள எவரும் முயலக் கூடாது; தானே நினைத்தாலும் இவற்றை மாற்ற முடியாது என்று கூறுகிறார். ஏனெனில், இவை அவனவன் கர்ம வினையால் அவனை அவ்வாறு பிறக்க வைத்தன. அதாவது வேதங்களின் சாரமாகிய பகவத் கீதையின் சாரம், பிறப்பினால் ஏற்பட்ட வருண பேதத்தை, யாராலும் மாற்ற முடியாது என்பதுதான்.

இனி, வள்ளுவர் கருத்து யாது எனக் காண்போம்.

திருவள்ளுவர் சொல்லும் ஒழுக்கம் என்பது, உலகப் பொதுவான நல்லொழுக்கம். வருண ஒழுக்கம் என்பது கருத்தாயின், அதைச் சுட்டிச் சொல்லியிருப்பார்.

**மறப்பினும் ஓத்துக் கொளலாகும், பார்ப்பான்**
**பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும் (134)**

கேரக்பூர் பதிப்பில், 'பிறப்பு' 'செயல்' இரண்டில் பிறப்பை வைத்துத்தான் பிராமணன் முதலிய வர்ணப் பிரிவு நடந்து வருகிறது என்ற விளக்கத்தை, இதனுடன் ஒப்பிட்டு நோக்குக. ஒழுக்கத்திற

கெட்டாலும் பிராமணன் பிறப்பால் பிராமணனே என இதற்கு உரைகாண்பது தவறு. 'ஒழுக்கம் குன்ற' என்பதற்குத் தனக்குரிய வருண ஒழுக்கம் என விளக்குவதும் பெரும் பிழை.

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

இங்கு வருண ஒழுக்கம் என்பது பொருளானால், வள்ளுவர் 'இழுக்கம் இழிந்த குடியாய் விடும்' என்று பாடியிருக்கலாம் அதாவது அக் குலத்திலேயே இழிந்தவனாவான் என்று கூறி, உயர்வு தாழ்வென்பது அக் குலத்திற்குள்ளேயே என முடித்திருக்கலாம்.

இழிந்த பிறப்பாய்விடும் என்றதன் காரணம், ஒருவரது உயர்குலம் தாழ்ந்த குலம் என்பதற்கான அளவுகோல் ஒழுக்கமே; பிறப்பன்று என்பதாம்.

## 10. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் – என்ற குறளின் உட்கருத்து யாது?

பெருமை என்ற அதிகாரத்தில் இது வருகிறது.

பிறப்புஒக்கும் எல்லாஉயிர்க்கும் சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (972)

இங்கும் 'பிறப்பு' என்ற சொல் வருவது காண்க. குல உயர்வு தாழ்வு பிறப்பினால் அறியப்படாது என்பர் மணக்குடவர். செய்தொழில் என்பது, அவரவர் மேற்கொள்ள நேர்ந்தவை. ஒருவர் ஆசிரியராகலாம்; அவர் தம்பி வணிகராகலாம்; உறவினர் மளிகைக் கடை நடத்தலாம். இத் தொழில் வேற்றுமையாலும் பெருமை, சிறுமை பேசலாகாது என்பதே கருத்து. சிறப்பும் ஒவ்வாது; ஏனெனில், பிறப்பால் ஒக்கும் மனிதகுலம், தாம்தாம் செய்யும் தொழில்களாலும் சிறப்புடையது சிறப்பற்றது எனப் பிரிக்கப் படாது. அடுத்த குறள் 'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்' என்பதையும் ஒப்பு நோக்குக. மேலாளராக இருந்து, ஊழல் செய்பவரைவிட, அவர்க்குக் கீழே வேலைபார்ப்பவர் நேர்மையாளராயின், அவரே பெருமைக்குரியவர். மேலே இருப்பதாலேயே பெருமைக்குரியர் ஆதல் இயலாது.

வேதம், கீதை, மனுஸ்மிருதி – எல்லாம், நான்கு வருணத்தார்க்கும் நான்கு வகைத் தொழில் வேறுபாடுகளைச் சுட்டி, அதனாலும் பேதம் பேசுவதை மறுப்பது இது.

## 11. 'அந்தணர்' என்பதற்கு வள்ளுவர், சொற்பொருள் விளக்கம் தருவது ஏன்?

சங்க காலத்திலேயே அந்தணன், பார்ப்பான் எனும் சொற்கள் குலப்பெயராக வந்துவிட்டன. புத்த, சமணத்துடன் வைதிகமும் பரவிக் கொண்டிருந்தது. தமிழ்ப் பண்பாட்டிற்குப் புறம்பாக, இவ் வடநாட்டுச் சமயங்கள் வழி வந்தவற்றை ஏற்காது, ஏற்புடையவற்றை மட்டும் ஏற்று, உலகப் பொதுமறையாக ஓதப்பட்டதே திருக்குறள்.

இறைவனை 'அறவாழி அந்தணன்' என்றார். நீத்தார் பெருமையில், அந்தணர் எனும் சொல்லுக்கு – அந்தணர் என்பதே குலத்தால் வருவதன்று; குணத்தால் வருவதென விளக்கம் தந்தார்.

அந்தணர் என்போர் அறவோர்,மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டுஒழுக லான் (30)

அந்தணர் என்போர் அறுதொழிலோர் என்றோ, பார்ப்பார் என்றோ, பிறப்பால் உயர் குலத்தோர் என்றோ விளக்கம் தராமல், அவற்றை மறுப்பார் போலப் புதுவிளக்கம் தந்து மடைமாற்றுகிறார்.

## 12. அவர் காலத்திலேயே வைதிகமும் பரவி, 'அந்தணர்' என்பது குலப் பெயராகவும் ஆளப்பட்டதைச் சங்கப் பாடல்களில் காண்கின்றோம். அவை பற்றியும் வள்ளுவர் ஏதும் கூறியுள்ளாரா?

இறைஞ்சுக பெரும! நின் சென்னி! – சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே – புறம் 6

என்று புறநானூற்றிலேயே, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரி கிழார் பாடுகிறார்.

அந்தணர்கள் மும்மூர்த்திகள் எனப்படும் கடவுளரை விடப் பெரியவர் என வசிட்டர், இராமனுக்கு அறவுரை கூறியதாகக் கம்பர் பாடுகிறார்.

கரிய மாலினும் கண்ணுத லானினும்
உரிய தாமரைமேல் உறைவானினும்
விரியும் பூதம் ஓர் ஐந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்

(அயோத்திக்காண்டம் 100)

இவ் வைதிகக்கருத்தைத் திருவள்ளுவர் சொல்லாமற் சொல்லி, மறுக்காமல் மறுக்கிறார். இன்றேல் இவர் நூலையும் அன்றே ஒழித்துக்கட்டியிருப்பார்கள். திருக்குறள் மக்களிடம் பரவி இருந்ததாலும் அதை ஒழிக்க இயலாது போனது.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் (543)

அந்தணர்களது வேதத்திற்கும் அறத்திற்கும் காரணமாய், முதலாய் – தலைமையாய், மன்னவனது செங்கோலாட்சியே நிலைபெற்றது. இங்கு அந்தணருக்கும் அவர்களின் வேதத்திற்கும் தலைமை தராமல், வேந்தனது செங்கோன்மைக்கே தலைமை தந்திருப்பதை அறிதல் வேண்டும். 'நல்ல அரசாட்சி இன்றேல், நீ எங்கே?' என்று கேட்பது போல் உளது.

பார்ப்பனரை 'அறுதொழிலோர்' என்று பழந்தமிழ் நூல்களும் குறிப்பிடும். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், இரத்தல் என்பன அவை. இதில் இரந்து யாசித்தலையும் ஒரு தொழிலாகக் கொண்டிருந்ததை அறிய வேண்டும்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின் (560)

மன்னன் அறவழியில் ஆட்சி செய்யாவிட்டால், அவன் நாட்டில் மழைபெய்யாது; பசுக்கள் பால் தரா என்பன மக்கள் நம்பிக்கைகள். அவற்றுடன் இந்த ஆறு தொழிலுக்குரிய அந்தணர்களும் சிறப்பாக வாழ முடியாது என்பதையே 'நூலை மறக்க நேரும்' என்று குறிப்பிடுகிறார்

அறவழி ஆட்சிக்கே தலைமையிடம் தரும் இவை, அந்தணரும் அதற்கு உட்பட்டவரே என்பதை அல்லவா உணர்த்துகின்றன?

### 13. வைதிகம் 'அறுதொழிலோர்' என்று கூறி, இரத்தலை – யாசித்தலை, அவர்களது தொழில் – செயல் – தருமம் என்றதைத் திருவள்ளுவர் ஒப்புகின்றாரா?

எனக்குத் தெரிந்தவரை, செத்த வீட்டில் கூடப் 'பூரிக்காசு' – என்று, பிராமணாளுக்குச் சில்லரை கொடுக்கும் வழக்கம், ஒரு சடங்காகவே இருந்தது.

பிராமணாளுக்குப் 'போசனம்' செய்விப்பது – அதுவும் பிராமணாளைக் கொண்டே சமைத்துப் போடுவது, ஒரு நல்ல தருமம் என்பர். அவர்களிலும் ஏழை எளியவர்களுக்கு உண்ணத் தந்து பசியாற்றுவது அறநெறியேயாம். ஆனால், அங்கும் 'எங்களவர் சமைத்ததையே உண்போம்' என்பதும் அதற்காக அரிசி, பருப்பு முதலானவற்றை அள்ளிச் செல்வோம் என்பதும் வைதிக வழியாகும். இதைப் பகுத்தறிவுள்ள ஒரு பிராமணராவது, கடிந்து கூறாமைக்குக் காரணம், வைதிகம் அகர்களையே வாழவைத்து, மற்றவர்களை என்றென்றும் அறியாமையில் மூழ்கவைத்திருப்பதுதான். இப்படி அரிசி, பருப்பை அள்ளிச் செல்வது; கோயில்களில் அருச்சனைத் தட்டேந்துவது 'மானமற்ற செயல்' என்று ஒரு பிராமணனுக்குக் கூட உறைக்கவில்லையே. சங்க முற்காலத்தில்,

'செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி' என (புறம் 9)

ஆடல் பாடல் வல்ல கூத்தர், பாணர் முதலான இசைக் கலைஞர்க்குத் தமிழ் மன்னர்கள் பொன்னும் பொருளும் வழங்கினராம். பின்னர் அதே காலத்தில்,

ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து (புறம் 367)

என்று, 'யாசித்த பார்ப்பார்' முன்பு பாணர் பெற்றதைத் தாம் பெறலாயினர். பாணர் குலமும் வறுமை வாய்ப்பட்டது; தமிழிசையும் வீழத் தொடங்கியது.

ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல் (1066)

இரத்தல் அவமானம் என்று கூறவந்தவர், ஆவிற்கு நீர் என்று யாசித்தாலும் – என்று குறிப்பதில், ஓர் உட்பொருள் தொனிக்கிறது.

ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (656)

தன்னைப் பெற்றவளே பசித்தாலும் யாசித்தலோ, பிறவாறு சான்றோர் பழிக்கும் செயல் செய்தலோ கூடாதென இது கூறுகிறது.

மிக இக்கட்டான நிலையில், 'தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக' என்பது வைதிகம்; இதை அறநூற் பொதுவிதி என ஏற்பார் பரிமேலழகர். ஆனால், வள்ளுவர்க்கு இது உடன்பாடன்று.

**14. வடமொழி மந்திரதந்திரங்களை ஓதி, தோசங்களை நீக்கிவிடலாம். ஹோமம் பல செய்தால் செய்த வினைப்பயன்தீரும் அல்லது அந்த ஹோமத்தாலேயே தோசம் போகும். பல நூறாயிரம் செலவழிக்கும் ஹோமங்களால் செல்வம் தழைக்கும்; பிள்ளை வரம் கிடைக்கும்; இன்னும் எல்லா நன்மைகளும் கிடைக்குமென்று காலங்காலமாக எழுதி வருகிறார்கள். இவை பற்றி வள்ளுவர் கருத்து என்ன?**

தீமை தீமையைத்தான் வளர்க்கும். நன்மை நன்மையை வளர்க்கும். நற்பண்பு, நல்லொழுக்கம், நற்செயல் ஆகிய இவையே வாழ்வில் எல்லா நலன்களையும் தரும் என்று திருக்குறள் திரும்பத்திரும்பக் கூறுகிறது.

தீவினையை ஒருவன் பணம் செலவழித்துத் தீர்த்துக் கொள்ளலாம் என்பது, அவனுக்குத் தீவினைகளை மேன்மேலும் செய்யவே ஊக்கம் தரும்.

தோசமோ, தீவினையோ எதுவாயினும் அதற்காக வருந்தியும் திருந்தியும் அழுதும் மீண்டும் நல்வினைக்குத் திரும்பியும்தான் அதிலிருந்து விடுபட வேண்டும். ஆயினும், பணத்தைக் கொண்டு எப் பாவத்தினின்றும் தப்பித்துவிட முயன்று, அதில் வெற்றியும் பெறலாம் எனப் போதிக்கும் வைதிகம், ஒரு சாராரின் வருமானத்திற்காக உலகை அழிக்கிறது.

நன்மைகளைச் செய்து, நற்செயல்களைச் செய்தே, நற்பண்புடன் வாழ்ந்தே திருமணம், மகப்பேறு, வேலைவாய்ப்பு, செல்வச்செழிப்பு எல்லாம் அடைய முயலவேண்டும்.

இதனை அறவழி என்று திருக்குறள்கூறும். இதற்குப் பணம் செலவழித்துப் பயனில்லை. முதலில் மாசற்ற மனம் வேண்டும்.

**15. கடவுள் தமது உண்டியலில் பணம் போடுபவனுக்கு, அவன் போடும் பணத்தின் அளவு புண்ணியம் தரக் கணக்கு வைத்துள்ளாரா? எந்தக் கடவுளாவது தமக்கு வைரமுடி வேண்டும், தங்கத் தேர் வேண்டும், பொற் கவசம் வேண்டும், தங்க அங்கி வேண்டும் என்று கேட்டதுண்டா? எந்தக் கடவுளாவது மக்களிடம் பக்தி நிறைந்த பண்பை எதிர்பார்க்காது, பணத்தை எதிர்**

**பார்ப்பதுண்டா? 'பக்தனே! இங்கேவா! கூடிய மட்டும் பணத்தைச் செலவழி! உன் பாவங்களை நீக்கி, நீ செய்யும் தீமைகளுக்கெல்லாம் நான் துணை நிற்கிறேன்' என்று கூறியதுண்டா?**

சைவ சித்தாந்தம் – சிவனிய மெய்யியலின்படி ஒரு கொலை செய்துவிட்டுக் கும்பாபிசேகம் செய்தால், கொலைப் பாவம் தீராது. இரண்டின் பயனையும் தனித்தனியே அனுபவித்துத்தான் தீரவேண்டும்.

ஊழல் செய்யும் அரசியல் வாதிக்கு, 'ஒரு கோடியில் கோயில்களுக்கு இன்னஇன்ன காரியம் செய்; நீ வெற்றி அடைவாய், பதவி நீடிக்கும்' என உபதேசிக்கலாமா?

இலஞ்சம் வாங்கும் அரசு அதிகாரி – ஏவலன் வரை பட்டையும் நாமமும் நெற்றியில் துலங்கப் பணத்தை எண்ணியெண்ணி வாங்க, இறைவன் துணைநிற்கின்றானா?

இவையனைத்தும் இறுதியில் இந்திய நாட்டைச் சட்டப்படியான, குற்றவாளிகளின் கும்பல்களாக மாற்றவே போகின்றன.

வள்ளுவத்தைப் பின்பற்றினால் மட்டுமே இந்திய நாடு வாழும்.

**16. திருவள்ளுவர் அவரவர் செய்த வினையின் பயனை, அவரவர் அனுபவித்தே தீரவேண்டும்; மேலே கூறியபடி வைதிக நெறிகளால் குறுக்குவழியில் அவற்றைத் தீர்த்துக் கொள்ளுதல் இயலாது என்பதை எவ்வாறு கூறுகிறார்?**

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும் (207)

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று (208)

வீயாது – என்ற சொல் இரண்டு குறள்களிலும் வருவது காண்க. தீவினைப் பயன் ஒருவனை விட்டுப் போகாது; பரிகாரம் முதலியவற்றால் தீரவே தீராது.

தீவினையை – 'வினைப் பகை' என்றே குறிக்கின்றார். 'பின்சென்று' என்பதையும், 'அடியுறைந்தற்று' என்பதையும்உற்று நோக்குக. காலம் வரும் வரை மறைந்திருந்து, தக்க சமயம் வந்ததும் வெளிப்பட்டுப் பயனை விளைவிக்குமாம்.

இந்திய நூல்களிலேயே தீமைக்குப் 'பரிகாரம்' இல்லை – கூடாது – நடவாது என அடித்துச் சொன்ன ஒரே நூல் திருக்குறளே.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று (307)

தீமை – தீமையையே விளைவிக்கும். அதற்கு மாற்று இல்லை. வைதிகம் சொல்லும் 'கழுவாய்கள்', உலகில் எல்லாத் தீமைகளுக்கும் உண்டு. இச்சிந்தனையே பேராபத்து. நிலத்தில் ஓங்கிக்கையால் அடித்தால், அந்தக் கை நோவுற்று நலிந்து வலித்துப் புண்ணாவது தப்பாது. ஒரு சாதாரண உவமை மூலம், சினம் முதலான எத்தீமையினின்றும் தப்பவே முடியாது என்பது வலியுறுத்தப் படுகிறது.

தீமை செய்துவிட்டவனுக்கு 'விமோசனமே' கிடையாதா? வைதிகம் கேட்கிறது. தீமைமேல்தீமை செய்கிறவனால் அவனும் கெடுகிறான்; அவனது சுற்றுச் சூழலும் கெடுகிறது; நாடே அழிகிறது.

இன்றைய இந்தியாவில் 'பக்தி' என மூழ்கிக் காட்சி யளிப்பவர்களும், பரிகாரம் தேடி அலைபவர்களும் இருவர். ஒருவர் அரசியல்வாதி, மற்றவர் ஆன்மிக வாதி.

பரிகாரம் என்பது, 'தெரியாது செய்துவிட்டோமே' எனவருந்துவது; 'இனி இப்படிச் செய்ய மாட்டோம்' எனத் திருந்துவது; நடந்த தீமையை நினைந்து அழுவது; கறை படிந்தமைக்கு நாணுவது. மேலும் கறை படியாமல் காக்க உறுதி பூணுவது; நல்லது செய்ய நாடுவது; நன்மைவழிப்படுவது. இதனால் முன்செய்த தீவினையால் துன்பமுற நேர்ந்தாலும், பின்பு செயும் நன்மைகளால், அத்தீங்கினால் ஏற்படும் தாக்கத்தின் வலிகுறைந்து, பின்பு நல்லன விளைவது.

இவ்வாறல்லவா போதிக்க வேண்டும்?

வைதிகம் என்ன சொல்கிறது? "ஏன்திகைக்கிறாய்? தீவினை செய்த மானிடனே! என்னிடம் வா? கோயிலுக்கும் எனக்கும் யாகத்திற்கும் பிறவற்றுக்கும் என அதைக்கொடு, இதைக்கொடு. நான் சில மந்திர உச்சாடனங்களால், மந்திரங்களால், தந்திரங்களால், ஹோமங்களால் – நீ எத்தனை ஆயிரம் செலவழிக்கிறாயோ, அதற்கு ஏற்ப, உன் தீமையின் பயன் உன்னைத் தாக்காமல் காப்பாற்றுகின்றேன். மேலும், நீ எவ்வளவு தீமை வேண்டுமானாலும் செய். மக்களை மயக்கு; கொள்ளையடி; ஊழல்செய்; கொலைசெய்; திருடு; நாட்டையே அழி;

என்ன வேண்டுமானாலும் செய், உன்னை அவற்றால் பாதிப்பு இன்றிக் காப்பாற்ற மந்திரம் இருக்கிறது. மிகக் கொடிய பாவமா? அஞ்சாதே! இலட்சக் கணக்கில் போட்டு ஒரு யக்ஞம் செய்! அது போதும். தேவர்கள் உன்னைக் காப்பார்கள்!''

இவ்வாறு வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், இந்த மனப் போக்கே வளர்க்கப்படுகிறது. இந்தியன் ஒவ்வொருவனும் இந்தத் தீய நம்பிக்கை நஞ்சூட்டப் பட்டிருக்கிறான்; மயக்க மருந்து தடவி உண்ணுதற்குத் தரப்பட்டிருக்கிறான்; கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லும் நஞ்சு பாய்ச்சப்பட்டுள்ளான்.

எதிர்காலம் விழிப்புறவில்லையெனில், நாடும் மக்களும் சீர்கெட்டழிவது உறுதி.

## 17. திருவள்ளுவர் 'துறவு' பற்றி என்ன கருதுகிறார்? துறவு – சன்னியாசம் பற்றிய பிறர் கருத்து என்ன? அவர் கருத்து என்ன?

பழந்தமிழகத்தில் 'துறவு' வாழ்க்கை, புறச் சமயங்களால், இங்குத் திணிக்கப்பட்டது. புத்த சமண சமயங்கள் கடுந்துறவு – தூய துறவு வாழ்வைப் போதித்தன. வைதிகமும் துறவை, சன்னியாசம் என்றும் வானப் பிரஸ்தம் என்றும் பிரமச்சரியம் என்றும் போதித்தது. சன்னியாசிகளை முனிவர்கள் என்றும் கண்கண்ட தெய்வங்களென்றும் அவர்களுக்குக் காணிக்கை செலுத்தி வாழ்வதே மக்களின் கடமை என்றும் கூறித் துறவிகளை உண்மைத் துறவிகளாக்காமல் மற்றவர்களை மயக்கிப் பிடிக்கும் மந்திரவாதிகள் போல மாற்றியது. தயானந்தன், நித்தியானந்தன், ஆத்மானந்தன், கமலானந்தன் என்றிவ்வாறு 'ஆனந்த' மயமாகிக் கோடி கோடியாகச் சேர்த்து, பெங்களூர்போல நல்ல பருவநிலையுள்ள நகரங்களை நாடி, மாடமாளிகை கட்டி, குளுகுளு வசதியுடன் வாழ்கின்றவன், எப்படித்தூய துறவியாக வாழமுடியும்? ஒரு பெண்ணை மூன்று முறைதொட்டாலே நோய் போய்விடுகிறதாம். ஒரு முறை தொடப் பத்தாயிரம் ரூபாயாம். துறவி பெண்ணைத் தொடலாமா?

பொதுவாக முத்தி, மோட்சம், சுவர்க்கம், மேலுலகம், தேவலோகம், வானுலகம், நினைத்தபடி எல்லாம் பெற்று, நினைத்தபடி வாழக் கூடிய இன்பவுலகம் – என்று பல கற்பனைகளைப் பரப்பியது. காமதேனு, கற்பகத்தரு மேனகை, ஊர்வசி, திலோத்தமை என்றெல்லாம் கூறி, மக்களுக்கு மேலுலக ஆசையை ஊட்டி வளர்த்து, அவர்களின் இவ்வுலக

வாழ்வை நாசப்படுத்தி, நரக மாக்கியது. திருவள்ளுவர் இவ்வுலக வாழ்வில் வேண்டாத ஆசைகள், நிலையில்லாதவற்றை நிலையானவை என எண்ணி உழலுதல், பிறவிச் சுழற்சியில் அகப்படுதல் போன்ற சிலவற்றை ஏற்றார். மிகச் சுருங்கிய அளவிலேயே இவை பற்றிப் பேசினார்.

அவர் மிக வற்புறுத்தியது வீடு பேறு என்பதே, அது தமிழர் கண்ட நெறி; இவ்வுலகப் பேராசைகளினின்றும் விடுபடுதலே அது.

விடுபட்டபின் அடைவனபற்றி அவர் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை.

'மேலுலகம் இல்லெனினும்' என ஒரு போடு போட்டார். இதைக் கற்ற சுவைட்சரே அதிர்ந்து போனார்.

'வானோர்' உலகம் என்னடா? – 'வானோர்க்கும் உயர்ந்த உலகம்' ஒன்று இருந்தால் அங்கும் புகலாம் என்றார்.

நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் – நான்கு அதிகாரங்களையும் ஆழ்ந்து கற்றால், வேண்டாத பேராசை, பற்றுக்களால் நிலையற்றவற்றை நிலையானவை என எண்ணும் புல்லறிவு இவற்றையே அவர் விளக்கி, அவற்றைக் கை விட்டு, இவ்வுலகில் நிலையானவற்றைச் செய்யத் தூண்டும் ஒரு புதுமைக் கண்ணோட்டம் புலப்படும்.

திருவள்ளுவர் இருவகைத் துறவுகள் பற்றிப் பேசுகிறார். ஒன்று இல்லறத் துறவு; மற்றது மற்றவர்கள் பின்பற்றும் துறவு.

மற்றவர்கள் பின்பற்றும் துறவு, நல்லதாயின் பிறர் பழிக்காத நிலையுடையதாயின், கூடா ஒழுக்கங்களில் புகாததாயின், புற வேடங்களால் ஏமாற்றாதாயின் அதுவும் நன்றே என முடிக்கின்றார்.

அவர் கூறும் துறவு – இல்லறத் துறவு. தொல்காப்பியர் குறிப்பிடும் துறவு அது. தமிழர் பண்பாட்டுவழித் துறவு அது.

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (1138)

இவ்வுலக இன்பங்களைத் துய்த்தபின், தானே ஆசைகள் தீர்வது இது. இறுதியிலும் 'சிறந்தன செய்து' வாழ்தல் இது.

சன்னியாசம் பற்றிய புறக்கோலம் எதனையும் அவர் கூறவில்லை.

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன் (341)**

என்னும் 'துறவு' – முதற்குறள், இவ்வாறு துறவின் இலக்கணத்தைக் கூறுகிறது.

'வேண்டின் உண்டாகத் துறக்க' – என்பதும் கருதத் தக்கது! எல்லாம் இருந்தும் துறப்பது இது. எல்லாமே போனபின் ஒருவன் தன்னிடம் எதுவும் இல்லாத நிலையில் துறவியாக்கப் படுகின்றான். அவன்தன்னைத் துறவி என்று கூறிக் கொள்வது நகையாடற்குரியது. இவ்வாறு அவன் தானே துறவியாவதும், துறவியானபின் செல்வம் குவிப்பதுமான வைதிக வழிகள் ஆயிரம் உள. திருவள்ளுவர் அத்தகையவர்களின் முகத்தில் அறைந்தாற்போலக் கூறவே, 'கூடா ஒழுக்கம்' என்ற அதிகாரம் படைத்துள்ளார்.

மேலும் 'துறவறவியல்' என வருவதில் புலால் மறுத்தல், கள்ளாமை, வெகுளாமை, கொல்லாமை எல்லாம் வருவானேன்? இவற்றை இல்லறத்தார் செய்யலாம் என்பதா கருத்து? யாதனின் யாதனின் நீங்கியான் – என்பது போல, இல்லறத்தானும் கைவிட வேண்டிய சிறிது கடுமையான விதிகள் இவை. இவையே, இல்லறத்திலிருந்துகொண்டே, மனத்துறவு கொள்வன என்பதை விளக்கவில்லையா?

நம் சாமியார்களின் காவியுடை, வானுயர் தோற்றம், பசுத்தோல் போர்த்த புலிகள், குன்றிமணிபோல் மறைவாக மூக்கில் கருப்புடைமை – என இவ்வாறு, உள்ளே தூய்மை இல்லாமல், வெளிவேடத்தால் நடிப்பவரே மிகுதி என்பதால், அவர்களை நகையாடுகிறார்.

வேட்டுவர்கள் புதருக்குள் மறைந்திருந்து, பறவைகளைக் கண்ணிவைத்துப் பிடிப்பதுபோல், இவர்கள் மக்களை மயக்கி, கற்பழிப்பு, கொலை, பொருள்களை 'அபகரித்தல்' போல்வனவற்றில் ஈடுபடுவதை அல்லவை என்று கூறிக் கடிகின்றார். 'புனித நீராடுவதாகக்' கூறி, மக்களை ஏமாற்றுவதையும், தலைமயிரை மழித்தும் நீட்டியும் வேடம் போடுவதையும் இவர் வெளிச்சப்படுத்துகிறார். சிலப்பதிகாரத்தில் மாடல மறையவன் புனித நீராடி வருவதாகக் கூறுகிறான்; தேவந்தி என்ற பார்ப்பனத் தோழி புனித நீராடின் முற்பிறப்புத் தோசம் நீங்கும் என்று

கூறுகிறாள்; மாங்காட்டு மறையவன் மூன்று புனிதப் பொய்கைகள் பற்றிக் கதைக்கின்றான். இச்சூழலில்,

மனத்தது மாசாக மாண்டார் நீராடி,
மறைந்தொழுகும் மாந்தர் பலர் (278)

என்று, இப்பொய்ம்மைத் துறவிகளைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

எனவே, புறச் சமயங்கள் திணித்த துறவுகள் பழிப்பிலா நிலையினவாயின், அவை ஏற்கத்தக்கன. ஆனால், இயற்கைக்கு முரண்பட்ட அத்துறவுகள் பிறரை ஏமாற்றவே பயன்படும் என்று அன்றே மிகத் தெளிவாகக் கூறிய நூல் இந்திய நாட்டில் திருக்குறள் ஒன்றேயாகும். மற்றைய இந்திய நூல்கள் எல்லாம் இந்தப் போலிச் சாமியார்களைக் கடவுளர் என்றன. அவர்களுக்குக் காணிக்கைகளைக் கொட்டினால் தோசம் நீங்கும், நோய் போகும், நன்மைகள் விளையும் என்று பொய்ம்மைகளைப் பரப்பின.

## 18. திருவள்ளுவர், பிறர் கூறும் 'துறவறத் துறவை' விட, இல்லறத் துறவையே மேம்படுத்துகிறார் என்பதை, நிலைநிறுத்தச் சான்றுகள் உளவா?

பொறையுடைமை அதிகாரம் இல்லறவியலில் உளது. அதில் வரும் குறள்கள் இவை:

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர் (159)

உண்ணாது நோற்பார் பெரியர், பிறர் சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின் (160)

அகங்காரம், ஆணவம் மிக்கவர்கள், பெரியவர்களை மானம் மதிப்பு இன்றிக் கண்டபடி பேசிவிடுவர்; ஏசிவிடுவர். அவர்கள் 'நாயே' என்று திட்டினால், 'பேயே' என்று மறுத்துத் திட்டவே நா எழும். அதனையும் பொறுத்துக் கொள்ள மிக்க மனப் பக்குவம் வேண்டும். அவர்களைத் 'துறவிகள்' என்று சொல்பவர்களைவிடத் தூய மனமுடையவர் என்று வள்ளுவர் கூறுவது ஏன்?

'துறவிகள்' ஒருவேளை மட்டுமே உண்டு வாழ்வார்களாம். காய் கனி கிழங்குகளை மட்டுமே உண்டும் வாழ்வதுண்டாம். அவ்வாறு 'நோன்பு' வாழ்வு வாழும் துறவியர் பெரியவர்களே. ஆயினும், பிறர்

சொல்லுகின்ற மனம் வருந்தும்படியான சொற்களைப் பொறுத்துக் கொள்பவர்கள், அத்துறவிகளைவிட மேலானவர்கள் ஆவார்கள். இச்சான்றோர் பற்றி இல்லறவியலில் வருகிறது. உலகைத் துறப்பதாகச் சொல்பவரை, இவ் இல்லற 'நோன்பிகளுக்கு' அடுத்தபடியானவர்களே என்று கூறும் சொல்நடை, வள்ளுவர் உள்ளத்தைக் காட்டுகிறது

வடமொழி நூல்கள் துறவறத்தையும் சன்னியாசிகளையும் தூக்கிப் பிடித்தன. வைதிகம் அவர்களைக் கடவுளர் என்றது. அதனால் 'கூடா ஒழுக்கம்' வள்ளுவர் காலத்திலேயே, 'தொழுநோயாக'ப் பரவியது. சன்னியாசிகள் மறைமுகமாகக் காமவேட்டையாட, இந்திய வடமொழி சார்ந்த நூல்கள் பேருதவி செய்கின்றன.

திருவள்ளுவர், வடமொழியாளர் கூறிய நான்கு வாழ்வு நெறிகளை அறிந்திருந்தார். பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சன்னியாசம் என்பன அவை. இவற்றில் ஏனைய பிரமச்சரியம், வானப் பிரஸ்தம் (காட்டில் போய் குடும்பமாக வாழ்வது) சன்னியாசம் என முறையாக – இயல்பாக வாழ்பவர்களுக்கு இவ் இல்வாழ்வானே துணை என்றார் அவர். இயல்பினான் வாழும் மூவர் என்றது, அவ்வாறு கூறிக்கொண்டு கள்ள வாழ்க்கை வாழ்பவர்க்குத் துணை தேவையில்லை என்ற உட்கருத்துடையது. மேலும், துறவிகளுக்கும் வறுமையுற்றவர்களுக்கும் போர் முதலியவற்றிலும் பிறவாறும் யாருமின்றி இறந்தவர்களுக்கும் இவ் இல் வாழ்வானே துணை. ஏனெனில், உழுபவன், உணவு தருபவன்; பொருளுடைய செல்வன் அவன். எனவே, எல்லோர் பொறுப்பையும் ஏற்பதால், அவன் ஆற்றும் கடமைகள் மிகப் பெரியன; அரியன. எனவே உலகைத் துறப்பவன் தன் உயிர்க்கு மட்டுமே உய்தி தேடுகிறான். இல்லறத்தானோ தனக்கு மட்டுமன்றிப் பிறர் பலர்க்கும் உய்தி தேடுகின்றான். எனவேதான் இந்திய நாட்டு நூல்களெல்லாம் வைதிக நெறியைப் பின்பற்றித் துறவுப் பெயரால் ஓர் ஆன்மிக முதலாளித்துவப் பேதவர்க்கத்தை வளர்க்கத் திருக்குறள் நூல் ஒன்றுமட்டும் இல்லறத்தானே, பிறர் யாவரினும் மேம்பட்டவன் என்றது. அதன்வழி மறைவான வாழ்வு நெறியை மறுத்தது; ஒப்புரவுச் சமத்துவ நெறிக்கு வழிவகுத்தது.

இல்வாழ்க்கை அதிகாரத்தில், மேலும் நான்கு குறள்கள் சிந்திக்கற்பாலன.

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவது எவன்** **(46)**

இல்வாழ்க்கையைச் செம்மையாக நடத்தினால், அதுவே போதும். 'அது நீங்கள் கூறும் மோட்சம், சுவர்க்க இன்பம், வீடுபேறு, இவ்வுலக மகிழ்ச்சி, நல்வாழ்வு' எல்லாமே தரும். அதற்குப் புறம்பான துறவு முதலிய வழிகளில் போய், என்ன பயனடையப் போகிறீர்கள்?' இவ்வாறு வினவுகிறார், நம் வாய்மொழிப் புலவர் (புறத்தாறு – இல்லைவிட்டு வனத்துக்குச் செல்லும் நிலை – பரிமேலழகர்; புறநெறியாகிய தவம் – மணக்குடவர்)

போஒய்ப் பெறுவதில் பயன் என்ன? – அளபெடையில் ஒரு ஏளனக் குறிப்பும் தொனிக்கின்றது.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை (47)

இல்வாழ்க்கையைச் செவ்விய முறையில் நடத்துபவன், உயிர் உய்தி முதலான பலவற்றிற்காகப் பலவாறு முயல்பவர்கள் எல்லோருள்ளும் தலைமையானவன் ஆவான். வைதிகமே அன்றி எச்சமயத்தார் கூறும் எந்நெறியேயாயினும், அவர்களுள் இயல்பாக இல்வாழ்பவனே தலைமையானவன் என்பது கருத்து. (முயல்வார் – உயிருக்கு உய்தி தேடுவதாகக் கூறித் தவம், துறவு என முயல்பவர்கள்)

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து (48)

தவம் துறவு என நோற்பவரைவிட, இவ்வினிய இல்லறவாழ்வு சிறந்த 'நோன்மைத்தன்மை' உடையது. அதாவது இதுவே, அவற்றினும் சிறந்த தவமும் துறவுமாம் என்பது உட்கிடை (நோற்பாரின் நோன்மை உடைத்து – இந்தச் சாமியார்களை விடப் பெருமை உடையது.)

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று (49)

இல்வாழ்க்கை ஒன்றே அறமாகும். ஏனைய – பிறர் கூறும் துறவறமோ எனின், அதுவும் பிறரால் பழிக்கப் படாததாயின் நன்றேயாம். பெரிதும் அது பழிக்கப்படவே நேரும் என்பது தொனி. எனவேதான், இயற்கைக்கு மாறுபட்ட அதைக் 'கூடா வொழுக்கம்' எனக்கூறிப் பழி, பாவம் துடைக்க முயல்கின்றார்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும் (50)**

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்றும், பக்திப் பனுவல்களைப் பாடவைத்தது இது. அங்ஙனம் நல்லறமாக, இல்லறம் நடத்துபவனைத் 'தெய்வம்' எனச் சிறப்பித்தது, வேறு மெய்யியலார் எவராலும் உணர்ந்து ஓதப்படாத கருத்தாகும். இந்திய நூல்களிலேயே இல்லறத்தானைத் தெய்வம் என்று உயர்த்திக் கூறியது, திருக்குறள் ஒன்றேயாகும்.

'யாதனின் யாதனின் நீங்குதல்' என்பது, இல்லற வாழ்வில்தான் மிகுதியும் வேண்டப்படுவது. பெற்ற பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகப் பெற்றவர்கள் சுகவாழ்வைத் துறப்பதைவிடவா, காடேகும் துறவு மேலானது?

இல்லறத்தை முறைப்படி ஆற்றுபவன், தான் பிறந்த குடிக்காக வாழ்பவன், தன் நாட்டின் சுதந்திரத்திற்காக உயிரைத் துறப்பவன், தாய்மொழி காக்கப் பொன், புகழ், பதவி, பரிசைத் துறப்பவன் என இப்படியே எண்ணிப்பாருங்கள்!

**19. தவம் – பற்றியும் திருவள்ளுவர் கருதுவன யாவை? எத்தகைய தவத்தை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று அவர் கருதுகிறார்?**

'தவம்' – பற்றியும், வைதிகத்துடன் மட்டுமன்றி வடநாட்டுப் புத்தசமண நெறிகளுடனும் கருத்து வேறுபடுகிறார், திருவள்ளுவர்.

அவர்கள் தவத்தைத் துறவுடன் இணைப்பர். ஒரு வேளை உண்டல் போலப் பல 'நோன்புகள்' கூறுவர். பதும ஆசனம் போட்டுக் கண்மூடித் தியானம் மேற்கொள்வது – மன ஒர்மை – போலப் பல விதிகள் கூறுவர். தவம் செய்வோர் சாபமிடவல்லவர்; கூற்றையும் ஆட்டுவிக்கக் கூடியவர்; நினைத்ததைத் தரக் கூடியவர் எனப் பலவாறு புகழ்வர். தவத்தரை, இல்லறத்தினின்றும் வேறுபடுத்துவர்.

புத்தர் போதிமரத்தடியில் தவம் செய்யும் காட்சி, மகாவீரரும் அவர் வழிப்பட்ட தீர்த்தங்கரர்களும் தவம் செய்யும் காட்சி, வைதிகர் காட்டும் தவக்காட்சி எல்லாம் ஓர் உருவைத் தோற்றுவிப்பன.

திருவள்ளுவர் இவை அனைத்தையும் பற்றிக் கவலைப்பட்டார் அல்லர்.

வ.3

தவம் – என்ற அதிகாரத்தில் வரும் பத்துக் குறள்களும் நினைக்கத் தகுவன. பெரும்பாலும் ஓர்அதிகார முதற்குறள், அவ் வதிகாரத் தலைப்பின் விளக்கமாக – இலக்கணமாக இருக்கும்.

இங்கு, அவர் கூறும் தவத்தின் இலக்கணம் யாது?

உற்றநோய் நோன்றல், உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

முயற்சியே தவம்; கடமையாற்றுவதே தவம்; அதனால் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதே தவம்.

தவம் என்று, துறவியர் வேள்வியில் 'உயிர்க் கொலை' செய்வதுமுண்டு. அதை மறுக்கவே, எவ்வுயிர்க்கும் உறுகண் – துன்பம் செய்யாமையே தவம் என்றார்.

'தவத்திற்கு உரு' – என்றது ஏன்? அவர் காலத்திலேயே சிற்பமாய், சித்திரமாய் தவ வடிவு – பதும ஆசனத்தில் வீற்றிருக்கும் உருவமாகக் காட்டப்பட்டுவிட்டது. அதனால் யான் கூறும் தவத்திற்கு உரு இது என வேறுபடுத்திக் கூறியுள்ளார். திருள்ளுவர் கூறும் தவம் அருவம் – உருவ மற்றது. பிறர் கூறுவன புறவேடம் சார்ந்தன. அதனால் சிலரால் தவறாகப் பயன்படுத்தவும் உதவின.

இனி இவ்விலக்கணப் படியே, ஏனைய பத்துக் குறள்களுக்கும் உரை காண்பதே, வள்ளுவர் கருத்தாக இருக்க முடியும்.

ஏனைத் துறவும் பிறரால் பழிக்கப் படாதாயின் நன்று – என்று, இல்லறத் துறவல்லாத துறவை முன்பு விளக்கினார்.

"நீங்கள் கூறுகிற தவமும், அத் தவத்தையே தம் கடமையாக உண்மையுடன் மேற் கொள்வார்க்குப் பொருத்தமாகும். அதனைச் செம்மையுடன் செய்ய இயலாதார், அதனை மேற்கொள்வது அவமாக முடியும்"

'தவம் மறைந்து அல்லவை செய்வார்' (274) உளராதலின், இங்கு ஒழுக்கத்துடன் கூடிய தவம் உடையார்க்கே, பிறர் கூறும் தவமும் பொருந்துவதாகும் என விளக்குகின்றார்.

"எல்லோரும் தவம் செய்யக் காட்டிற்குப் போய்விட்டால் துறந்தார், தவத்தார் அனைவருக்கும் உணவு தருவது யார்?" அதனால்தான்

ஏனையவர், தவத்தைக் கைவிட்டு வாழ்கின்றனர் போலும்! நகைச்சுவை இழையோடுகிறது. துறந்தார்க்கும் – இல்வாழ்வான் துணை (42) என்றார் அல்லவா?

தவம் எனும் கடும் முயற்சியால், பகைவரை வெல்லவும் உற்றாரைக் காக்கவும் முடியும். அத் தவமுயற்சியால் – வேண்டியதை வேண்டியவாறே அடைய முடியும். செய்தவம் – என்பது, முயற்சித் தவமேயாகும்.

தம் கடமையையே குறியாகவைத்து, அதனையே விடாது செய்பவரே தம்கருமம் என்னும் தவம் செய்பவர் ஆவர். தம் கடமையை விட்டு, ஆசையுட்பட்டு, பிறவாறு செய்பவரெல்லாம் அவம் செய்பவரே – தவம்செய்பவரல்லர். (அவம் – வீண் முயற்சி) நம் நாட்டில் ஒவ்வோர் அரசு அலுவலகம் முன்பும் 'தவம் செய்வார் தங்கருமம் செய்வார்' எனக் கொட்டை எழுத்துகளில் அச்சடித்து ஒட்டிவைக்க வேண்டும்.

துன்பங்கள் வரும் போது, அம் முயற்சித் துன்பங்களைத் தாங்கிப், பொறுத்துக் கொள்பவர்க்கு வாழ்க்கை, சுடச்சுட ஒளிரும் பொன்போல ஒளிவீசும். தவத்தைத் தம் கருத்திற்குத்தக 'நோற்றல்' (பொறுத்தல்) என்பது வள்ளுவச் சொன்மரபு. தவம் என்பதை 'நோற்றல், நோற்பார், நோலாதார்' எனப்பல இடங்களில் ஆள்வது வள்ளுவ மரபு.

இவ்வுலகில் பிறந்த ஒருவன், தனக்குப் பிறவி இயல்பாக அமைந்துவிட்ட திறனில், முழுமை பெற முயல வேண்டும். அவ்வாறு பெற்றால், உலகம் அவனை வணங்கிப் பாராட்டும். உயிரை அறப்பெறுதல் – உயிர்ப் பண்பை முழுமையாகப் பெற முயலுதல். இசையோ, கலையோ, அறிவியலோ, விளையாட்டோ – தனக்குகந்ததில் முழுமை பெற ஒவ்வொருவனும் முயன்றால், உலகம் அவனைப் பாராட்டும்.

முயற்சித்தவத்தால் ஆற்றலை வளர்த்துக் கொண்டால், கூற்றுவனையும் வெல்லலாம். போன உயிரைத் திரும்பப் பிழைக்க வைக்கலாம். அந்தத் தவத்தால் கூற்றையும் வெல்வதென்பது கற்பனை; இம் முயற்சித் தவத்தால் சாவை வெல்வதென்பது கண் கூடான உண்மை.

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் (270)

உலகில் இல்லாதவர் – ஏழையர் பலராதற்குக் காரணம் முயற்சித் தவமின்மையே; சிலரே இறுதிவரை முயன்று, குறிக்கோளை அடைகின்றனர். ஒரு தொழிலில் இறங்கியவர், தடைகளை எல்லாம் தாண்டித் துன்பத்தைத் தாங்கினால், செல்வராதல் உறுதி என்பதாம்.

திருவள்ளுவர் இல்லறத் தவத்தையே, ஈண்டுத் தவமென விளக்கினார் என்பதற்கு, முதற்குறளும், இவ் இறுதிக் குறளும் மாற்றமுடியாவாறு அரண் செய்கின்றன.

தவம் செய்தால், வேள்விசெய்தால், குறிப்பிட்டவர்க்குத் தானம் செய்தால் மழைபெய்யும் என்பதுண்டு. திருவள்ளுவர் அதை நயமாக மறுத்து, மழைபெய்யாவிட்டால் இத் தானமும் தவமும் உலகில் நிகழஇயலாவெனக் கூறுகிறார். இதனால் அவையேயன்றி, அவற்றால் இதுவன்று என்பது கருத்து.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின் (19)

குறிப்பிட்டவர்க்குச் செய்வதே 'தானம்' எனப்படும். வானுலகத் தேவர்கள் மழை தருவர் என்பதை நம்புவோரிடம், அவர்கட்கும் மழையின்றேல் வழிபாடு நடைபெறாது என்பதும் இது போன்றதே. வழிபாட்டால் மழை பெய்யுமென்றால், மழைபெய்தால்தானே வழிபாடும் நடக்கும் என்பது இது.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை (295)

மனமும் தூயராய், வாய்மையே பேசுவாராயின், அவர்கள் தவமும் தானமும் ஆகிய இரண்டையும் செய்வாரைவிட, மேலானவர் ஆவர்.

பிறர் கூறும் தவம், தானம் எல்லாம், ஒழுக்கத்தைவிட உயர்ந்தன அல்ல; மன மாசின்மை மற்றும் வாய்மையைவிடச் சிறந்தவை அல்ல என்பது கருத்து. இங்கு வாய்மை பேசுதலே தவம் என்ற தொனியும் உளது.

வைதிகம் புறவேடங்களையே அழுத்தம் பெறக்கூறும்; வள்ளுவம் அகத் தூய்மையையே வற்புறுத்தும். முதலிலிருந்து முடிவுவரை இவை இரண்டும் முரண்பட்டவையே. புறவேடத்தையே கதையாய், புராணமாய், தத்துவமாய்ப் பரப்பியதால், உலகில் சாமியார் கூட்டம் பெருகி, ஒழுக்கக் கேட்டிற்கு வழிவகுத்துவிட்டது.

அது சடங்குகளில் அழுத்தம் வைக்கும்; இது பண்புகளையே நிலை நிறுத்தும்.

அது கற்பனைகளில் மூழ்கடித்து மாயாசாலம் காட்டும்; இது நிகழ்கால நிசவுண்மைகளை விட்டுச் சிறிதும் விலகாது.

அது முடநம்பிக்கைகளின் கொள்கலம்; இது பகுத்தறிவின் சுடரொளி.

அது மனிதர்களை மறக்கடிக்கும்; தேவர்களைக் காட்டி மருட்டும். இது மக்களைவிட்டு மாறாது; விலகாது; மக்களுக்கு 'மயக்க மருந்து' தந்து, அவர்கள் வாழ்வை வறிதாக்காது.

'பெறுவான் தவம்' (842) எனத் தவச்சொல் வருமிடம் பிறிதொன்றுண்டு. அங்கும் அவனது 'முயற்சித் தவம்' என்றோ, உலக வழக்கிற்போல 'முன்செய்தவம்' (நல்வினை) என்றோ பொருள்படும். கண்கண்ட உலகத்தை மறக்கடித்து அதை மாயை என்று கூறி மயக்கமருந்து தந்துவிட்டுக் கண்காணாத உலகத்தையே திரும்பத்திரும்ப வற்புறுத்துவது திருக்குறளில் இல்லை.

20. **திருவள்ளுவர் காலத்தில் யக்ஞம் எனும் வேள்விகள் பல்கிப் பெருகிக் காணப்பட்டன. மூவேந்தர்களும் வேள்வியாசையில் மூழ்கிக் கிடந்தனர். இச் சூழலில் வாழ்ந்த திருவள்ளுவர் வேள்வி, ஹோமம் பற்றிக் கூறுவன யாவை? வேதவைதிகத்தின் ஆணிவேர்களில் ஒன்று இவ் வேள்வி அல்லவா?**

திருவள்ளுவர் 'உயிர்க்கொலை வேள்வி' அவர் காலத்ததாகலின் அதை மறுத்துரைத்தார். 'புலால் மறுத்தலில்'

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று (259)

என்றார். 'அவிசு' என்று, தேவர்களுக்காக மேலுலகத்திற்கு அக்கினி பகவான் மூலம் அனுப்புவதாகக் கூறிப் பசு, ஆடு, முயல், ஆமை என அனைத்து உயிரினங்களையும் போட்டுப் பிறகு, வெந்த அவற்றைத் தாம் உண்டனர், இவ் வைதிகர்கள். இதனை மிகச் சிறப்பித்து, வலியுறுத்திப் பேசுகிறது கீதை. ஆயிரம் வேட்டலின் என்பதால், ஆயிரம் வேள்விகள் செய்தல் என்றும், ஆயிரம் பொருள்கள் என்றும் கொள்ளலாம். 'உயிர் செகுத்து' — என்பது, அவ்வுயிர்கள்

சித்திரவதைப்படுவதைக் கணமுன் நிறுத்துகிறது. உயிரினங்களுக்குப் பயன்படுவன அனைத்தும், அக்கினியில் போடப்படுகின்றன. இலட்சக் கணக்கிலான மதிப்புடைய பொருள்களை நெருப்பிலிடும் 'பாவம்' இவர்களை எதுவும் செய்யாதெனக் கருதவேண்டாம். மக்களை மறக்கடிக்கும் இந்துமதமும் அதைத் தாங்கிப் பிடிப்பவர்களும் வினையின் பயனை அனுபவித்தே வருகின்றனர்

தங்கம், வெள்ளிமுதல் அன்னம், பழவகை, பால், தயிர் வரை மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும், எனக்குத்தா, அபிடேகம் என்று என் தலையில் ஊற்று என்று எந்தக் கடவுளும் கேட்டதில்லை; கேட்கமாட்டார்கள்.

இந்த வைதிகத் தரகர்கள் செய்யும் கொடுமை இது. திருக்கோயில் வழிபாடு சீர்திருத்தப்படவேண்டும். வைதிகர்கள் கோயில்களை விட்டு வெளியேறும் காலமே, வழிபாடு சிறக்கும் காலமாகும்.

'தவத்'திலும் திருவள்ளுவர், 'உயிர்க்கு உறுகண் செய்யாமையைத் தவத்தின் உரு' என்பதும், வேள்வி மறுப்பேயாம்.

திருவள்ளுவர் நகையாடி அங்கதச்சுவைபட, இவ்வேள்வியை மறுக்கின்றார். வேதங்களில் இந்திரன், பிரஜாபதி, வருணன் எனப் பல கடவுளர்கள் மற்றும் தேவர்கள் கண்காணாத மேல் உலகத்தில் உள்ளனராம். அவர்களுக்கு இந்த அக்கினி தேவன், தன்பால் போடப்படும் அனைத்தையும் கொண்டு போய்க் கொடுக்கின்றானாம். இதனை ஐதீகம் என்கிறது வைதீகம்.

இதனை விண்டவர் கண்டதில்லை; கண்டவர் விண்டதில்லை. (விள்ளுதல் – சொல்லுதல்)

திருவள்ளுவர் 'விருந்தோம்பலில்' இதை நகையாடுகிறார். 'கண் காணாதவர்களுக்கு எதற்கய்யா அனுப்ப வேண்டும்? கண்கண்ட மனிதர்களின் பசியாற்றுவதல்லவா நல்ல வேள்வி; பயனுள்ள வேள்வி. இவ்விருந்தோம்புவது எளிது; இனிது. இதை விட்டுவிட்டு, மிக்க கடினப்பட்டு, 'நாங்கள் பற்றற்றேம் என்றும் நடிக்கிறீர்கள்! அவையெல்லாம் தேவை இல்லையே. உண்மையில் பார்க்கப் போனால், நீங்கள் செய்யும் அந்த வேள்வியில், என்ன என்ன பயனுண்டோ, அதற்கு இணையான அந்த அளவு 'புண்ணியப் பயன்' இதிலும் உண்டு' என்று அவர் பேசுகிறார்.

பரிந்து ஓம்பிப் பற்றற்றேம்என்பர், விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். (88)

இனைத்துணைத்து என்பது ஒன்றில்லை, விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் (87)

மக்களை மறக்கடிக்கும் 'இந்து மதம் – வைதிகமதம் – அது 'ஸ்மார்த்தர்களின்' மதம். அது நம் மதம் அன்று. நம் சமயம் சிவனியம் மாலியம் கொற்றவை வழிபாடு (தாயியம் – தாய்த் தெய்வ அம்மன் வழிபாடு, சக்தி வழிபாடு) தமிழகத்திலுள்ள 'இந்து சமய அறநிலையம்' என்பதை, தமிழர் சமய அறநிலையத் துறை' என்று பெயர் மாற்ற வேண்டும்.

நாங்கள் இந்துக்கள் அல்லர்; தமிழர்கள். எங்கள் சமயம் இந்துமதமன்று; தமிழர்சமயம். இவ்வாறு எங்கெங்கும் எழுதிவையுங்கள்; மக்கள் மனத்தில் பதிவியுங்கள்.

கண்காணாத் தேவர்களைப் பற்றியே மிக உயர்த்திப் பேசுகிறது, வைதிகம். திருவள்ளுவர் இவ்வுலக வாழ்வில் அழுத்தம் வைத்து, தாம் ஒரு மனித இனத்தவர் என்ற நிலையில் நின்று, மனிதர்களுக்காகவே ஒரு மனித வாழ்வற நூல் எழுதியவர். தம்மை ஒரு தலைவராகவோ, தமிழராகவோ கூட அவர் காட்டிக் கொள்ளவில்லை.

'கயமை' அதிகாரத்தில்,

தேவர் அனையர் கயவர், அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் (1073)

வடநூற் கருத்துகளை நகையாடுகிறது இது. தேவர்கள் எல்லாம் வல்லவர்கள்; நினைத்ததை அடைபவர்கள்; நினைத்தபடி நடப்பவர்கள் என்றெல்லாம் பல கற்பனைகள் உண்டு. மண்ணுலகில் கயவர்களும் அதே போல நினைத்தபடி நடப்பார்கள்; அவர்களிடையே ஒரு வரன்முறை, கட்டுப்பாடு கிடையாது. கயவர்களுடன் தேவர்களை ஒப்பிடுவதன் மூலம், அவர்களுக்காகவே வேள்வி முதலியன செய்க எனும் வைதிகச் சார்புக் கோட்பாடுகளை, மக்கள்முன் தகர்த்துவிடுகிறார், நம் செந்நாப் போதார்.

வைதிகம் மக்களை மறக்கடிக்கச் செய்ததைத் திருவள்ளுவர் மடைமாற்றி, மக்களுக்குப் பயன்படும் அறவழிக்குத் திருப்புகிறார். இவ் அடிப்படை உணர்ந்து அதன்படி நடக்காமல், வெறுமனே திருக்குறளை ஒப்பிப்பதும், உரையெழுதுவதும், புகழ்ந்து பொழிந்து தள்ளுவதும், ஆய்வதும் எல்லாம் கடுகளவுகூடப் பயன்தராது.

உண்மையிலேயே நாம் திருக்குறள் நெறியில் வாழவேண்டும். இன்றைய மூட நம்பிக்கைக்கு அது எதிரானதுதான்; அதிர்ச்சியாகவும் இருக்கும்.

திருக்குறள் வழி நடப்பவன் வேள்வி, ஹோமம் செய்ய மாட்டான்; செய்யவே கூடாது. ஒன்று திருக்குறளைக் கை விடுங்கள்; அல்லது அதன்வழி நடக்க, வாழ முற்படுங்கள்!

தமிழை வாழ்த்திக் கொண்டே அழிப்பது போலத் திருக்குறளையும் புகழ்ந்துகொண்டே, அது காட்டிய அறநெறிக்குப் புறம்போவது கொடுமை, கொடுமை, கொடுமை.

தவம் – என்ற பெயரால் துறவியரோ, அந்தணரோ வேள்வி செய்யத் தூண்டுவர். அதனால் வள்ளுவப் பேராசான், 'கொல்லா நலத்தது நோன்மை' (தவம் என்பது முதன்மையாக ஒருயிரையும் கொல்லாதிருத்தல்) என்று, சான்றாண்மையில் (984) கூறுகிறார்.

செவியுணவின் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து (413)

'வேள்வி'யில் – அவியுணவை உண்கின்றதேவர்கள் அங்கே மேலுலகில் உள்ளனர் என்று கூறுகிறார்கள். ஆயினும், அதே சிறப்புடைய 'ஆன்றோர்கள்' இங்கு முளர். அவர்கள் 'செவி யுணவு' உண்பவர்கள் என்பது கருத்து. கேள்வியை இதில் வேள்வியாக்கி, அறிவுரை கேட்கும் செவியுணவை அவியுணவென்று, இவ்வுலக மக்களின் நலனையே வற்புறுத்தும் அழகைக் காணலாம்.

இவ்வாறு வைதிகம் வானுலகையே காட்டிக் கற்பனையில் மூழ்கடிக்க, வள்ளுவம் இவ்வுலகையே காட்டி, உண்மையுடன் வாழவைப்பதை உற்று அறிக. இம் முரண்பாடு அறியாது, திருக்குறளைப் போற்றுவது, வள்ளுவரை அவமதிப்பதாகாதோ? எண்ணிப் பார்மின்!

21. **வைதிகம், ஒருவன் பிறப்பே 'கர்மா' பற்றி அமைவது; இறைவனே அவன் தலையில் எழுதிவிடுவதால், அதை மனித முயற்சியால் மாற்றமுடியாது. தாழ்ந்த குலத்தில், கர்மாவால் தாமச குணத்துடன் பிறப்பிக்கப் பட்ட பஞ்சமன், உயர் குலத்தவனாக மாறவே முடியாது. அவன் உயர்குலத்தவனுக்குரிய கல்வி, ஓதுதல் முதலான உயர் தொழில்களில் முயல்வது பாவம். தன் தொழிலையே, இது**

**கர்மாவால் நமக்கு விதிக்கப்பட்ட இயல்பான குணத்தின்படி வந்தது. இதை மாற்ற முயலாது, நமக்கு விதித்ததையே செய்வதுதான் நமக்கு விமோசனம் தரும்' என நடக்க வேண்டும். மாற்றமுடியாதது இந்தத் தலைவிதி; கர்மா என்பது வைதிகம். திருள்ளுவரும் ஊழ்வினை பற்றிப் பேசுகிறார். இவற்றிடையேயுள்ள வேறுபாடுகள் முரண்பாடுகள் யாவை?**

வடமொழியில் 'கர்மா' என்பது இறைவனால் விதிக்கப்படுவது. தமிழர் சமயத்தில் வினைக் கோட்பாடு, இந்த உயிர் தன் செயலால் விளைவித்துக் கொள்வது.

முன்னது கேள்வி கேட்பதற்கு அப்பாற்பட்டது. சாதாரண மக்கள், 'அன்றைக்குத் தலையில் எழுதியதை, அழித்தெழுத முடியாது' என்று கூறுவது போன்றது விதி.

இங்குச் செயலால் விளையும் பயனே 'வினை' என்பது. அது முறைப்படி – 'செயல் முயற்சித் தொடர் முறைப்படி' – நிகழ்ந்து பின்பு பயனை விளைவிப்பது.

முன்னது மாற்ற முடியாதது – இறைவனே விதித்தது – காரண காரிய மற்றது.

வினைக் கோட்பாடு, காரண காரியத் தொடர்ச்சி உடையது.

ஊழ்வினையை உண்டாக்கிக் கொள்பவனும் மாந்தனே. வினைக்குப் பயனுண்டு என்பதே ஊழ் – முறை – பால் என்றெல்லாம் கூறப்படும்; அவ் வரன்முறையே இறைவன் படைத்தது.

பிறகு செயலும் அதன் பயனும் ஒருவன் தனக்குத் தானே உண்டாக்கிக் கொள்வனவே.

ஆகூழ் – நற்செயல் தொடர்ச்சி. போகூழ் – தீச்செயல் தொடர்ச்சி.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும் **(337)**

உண்மையறிவு – ஒரு வழிவழிக் குடிப் பிறப்பால் வருவது. அது மரபணு வழி, பரம்பரைக்குத் தொடரும் என்று இன்றைய அறிவியல் கூறும். இசை வயப்பட்ட குடிவழிமரபில் பிறந்தவன், வேறுபல நுட்பமான

நூல்களைக் கற்றாலும் அவனிடம், இவ்இசை ஆர்வமும் அறிவுமே மேம்பட்டு நிற்கும். அதுதான் உண்மை அறிவு; உள்ளிருந்து வரும் அறிவு.

ஒருவனது செயலுக்குப் பயனுண்டு என்பதே, நாளா வட்டத்தில் ஊழாக மாறுகிறது. தொடர்ந்து வரும் தன்தன் செயல்களும் அவற்றுக்கான பயன்களும் ஒன்றன் நிழலாகத் தொடர்ந்து வருவதை இது குறிக்கிறது. நன்மையும் தீமையும் கலந்து அனுபவிக்கப் படுவதற்கு, அவனவன் முன் செய்த வினைகளே காரணம். வினைப் பயனை மாற்றவே முடியாது (380) என்பது உண்மை. 'உலைவின்றித் தாழாது உஞற்றுதலும்' ஒருவனுடைய செயல் முயற்சியேயாகும். அதுவும் பின்வரும் ஊழே; முன் செய்த பின்னடைவு ஊழை. பின் செய்யும் முன்னேற்ற முயற்சி ஊழால் வெல்ல முடியும் என்பது, (620) ஒருவன் தன்னைத் தானே வென்றுகொள்வதாகும்.

பயனை அனுபவித்தே தீரவேண்டும் என ஊழை வகுத்தது இறைமை. ஆனால், அவற்றைச் செய்தலும் நுகர்தலும் உயிரின் முயற்சி. இதனை இயல்பான இயற்கை விதி, சட்டம் எனலாம்.

திருவள்ளுவர் கருத்தின்படி, இறைவன் நமக்கு வகுத்துத் தந்த 'அரசியலமைப்புச் சட்டம்' போன்றது ஊழ் – முறை – பால். அதனை நடைமுறைப் படுத்துவது, அதிலுள்ள விதிப்படி நுகர்வது, போராடுவது, இன்புறுவது, துன்புறுவது எல்லாம் அச்சட்டத்திற்குட்பட்ட மக்களிடமே உள்ளது. சட்டம் வகுத்த இறைவனும் அதற்குக் கட்டுப் பட்டவனே. இவ்வாறு ஓர் ஒப்பற்ற அறிவியல் வழிப்பட்டது ஊழ். தமிழர் சமயங்களுள் ஒன்றாகிய சிவனிய மெய்யியலுடன் (சைவ சித்தாந்தம்) ஒத்துப் போகக் கூடியதும் இதுவே.

முப்பொருளுண்மையின் அடிப்படையும் உடையது இது. உயிரின் முயற்சி, செயலுக்கும் இதில் பெரும் பங்குண்டு. அரசு சட்டம் அமைக்கலாம் – அதுபோலச் செய்த வினையின் பயன் செய்தவனையே, பின்சென்று பயனை விளைவிக்கும் என்பது, அச்சட்டப்படி நடப்பதும் நன்மைதீமைகட்கு ஏற்ப விளைவுகளை ஏற்பதும் மக்கள் பொறுப்பென்பது போன்றதாகும்.

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும் (619)**

என்று 'ஆள்வினை உடைமை'யிற் கூறுவதும் இதை வலியுறுத்துகிறது. முயற்சிக்கு – உழைப்புக்குப் பயனுண்டு என்பது, தெய்வவிதி – சட்டம் – அறவிதியுமாம். மெய் வருந்த உழைக்கும் போது, முன் தான் செய்த அதே செயலின் பயனை – இப்போதைய கடும் முயற்சி என்னும் செயலின் பயனால் வெல்லமுடியும்; தெய்வமும் (அல்லது ஊழும்) தான் விதித்ததை மாற்ற முடியாது என்பதே கருத்து.

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும் (1023)

என்பதும் இது போன்றதே. குடி செய்வல் – தன் குடியை உருவாக்குதல், தளர்ந்த குடியை உயர்த்துதலுமாம். இந் நற் செயலுக்குத் தெய்வமே முன்வந்து உதவும். 'ஊழ்' – அதிகாரக் குறள்களும் ஊழ் என்பதை இயற்கை, பால் (முறை), வகுத்தான் வகுத்த வகை (சட்டம், விதி)என்றே கூறுகின்றன. 'வகுத்தான் வகுத்த வகை' என்பது, அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்தவன் வகுத்தமுறை என்பதாகும். ஒவ்வொருவனுக்கும் அவன் செயலும் பயனும் – என்பதைத் தவிர்த்து, இறைவன் ஒரு சர்வாதிகாரி போல நானே விதித்தேன் என்று, தன் காரியமாக இதை யாண்டும் கூறவில்லை.

வைதிகம் இதைக் கடவுள் விதித்த விதி என்று கூறும். மனிதன் தன் முயற்சியால் இவற்றை மாற்ற முயல்வது கேடு, பாவம் என்றும் கூறும்.

(ஒருவனது) 'செய்கை பிரமத்தினின்றும் பிறப்பது என்றுணர்... (3 – 15) குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வருணங்களைச் சமைத்தேன். செய்கையற்றவனும் அழிவற்றவனுமாகிய யானே அவற்றைச் செய்தேன் என்று உணர்' (4 – 13). இவை பாரதியாரின் கீதை மொழிபெயர்ப்பு. வடமொழியில் இவ்வாறுதான் 'இவை உன் தலைவிதி; கர்மா எனவும், இவை மாற்ற முடியாதவை என்றும் திரும்பத் திரும்பக் கூறப்படும்.

அவ்வாறு படைத்தவனே விதித்துவிட்டான் என்று கூறுபவரைப் பார்த்து, வள்ளுவர்க்குச் சீற்றம் பொங்குகிறது.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (1062)

அவ்வாறு இவ்வுலகைப் படைத்தவன் விதித்திருப்பானாயின், அவனும் இந்த இரவலன் போலத் தெருத்தெருவாகப் பிச்சை எடுத்து

அலைவானாக! – இத்துணை அழுத்தமாய்க் கூறியபின், இதை வைதிக வழியுடன் கலப்படமாக்க முயல்வது வீண் முயற்சியே.

**22. திருவள்ளுவர் காலச் சூழலில், அரசனைக் கடவுள் என்றே கருதும் மரபு உலகெங்கும் இருந்தது. அதை 'இறைமைக் கோட்பாடு' என்பர். வைதிகம் குறிப்பாக மேற்குலத்தாரை – அவர்களில் துறவி என்றுசொல்லிக் கொண்டவர்களைக் கடவுளரே என்றது. திருள்ளுவர் கருத்து யாது?**

தமிழர்களிடையே முடியாட்சியும், குடியாட்சிபோல் நடக்கும் சூழ்நிலை ஓரளவு இருந்தது. திருவள்ளுவரும் அரசன், அரசு, நிலனாள்பவர், வேந்தர், மன்னன் எனும் சொற்களை ஆள்வதுடன், ஒரு குறளில் மட்டும் 'இறை' என்று குறிப்பிடுகிறார்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும் (388)

அரசனை இறைக்குச் சமமாகக் கூறலாம். ஆனால், அவன் முறைசெய்து காப்பாற்றும் செங்கோலரசனாக இருந்தால் மட்டுமே, 'இறை' போலக் கருதப்படும். அக்காலத்தில் இவ்வாறு சொன்னது, அதாவது ஒரு காரணத்துடன் கூடிய கோட்பாடு (Conditional Theory) போலக் கூறியது, ஒரு புரட்சிக் கருத்தேயாகும்.

இறையாண்மை (Sovereign Power) என்ற ஆட்சியுரிமையைப் பற்றி வேந்து (740) என்றார். 'வேந்தனும் வேந்து கெடும்' (899) என்று கூறுமிடங்களில் இன்றும் எண்ணிப் பார்க்கத் தக்க புதுமைகள் உள. வேந்து – இறையாண்மை.

**23. அரசாட்சியில், மக்களறம் பின்பற்றப் படாமல் – பொது அறம் கருதாமல், அரசியல் அறம் என்று கருதலாம் எனப் பல சூழ்ச்சித் திறங்களைப் பலர் போதித்துள்ளனர். திருவள்ளுவர் கருத்து யாது?**

திருவள்ளுவர் அறநெறிக்குட்பட்ட, பல சூழ்ச்சித் திறங்களைக் குறிப்பிடுகிறார். பொது அறம், கொல்லாமை. இங்குக் 'கொலையிற் கொடியாரைக் கொல்வது' குற்றமன்று. இரு பகைவர் உளராயின், ஒருவரைப் பிரித்து நட்பாக்கிக் கொள்ளவேண்டும். சிலபோது பகை நட்பாக வரும்போது விழிப்பாக இருக்கவேண்டும். அகம்நகும் நட்பை

மாற்றி, முகம் நகும் நட்பு மட்டும் கொண்டு நடிக்கவும் வேண்டும். இவ்வாறு ஓரளவு ஏற்கக் கூடியன பலவுள.

ஆயினும், ‘வினைத் தூய்மை’ என்று, ஆட்சி அதிகாரம் ஆளும் வகை, ஆட்சித்திறம் யாவற்றையும் விட, ஆட்சியில் தூய்மை – ஊழலின்மை, நேர்மை வேண்டுமென இவர் வற்புறுத்துவன பல, முடியாட்சியை விடவும், குடியாட்சி முறைக்கு மிகவும் பொருந்துவனவாம்.

## 24. பக்தி, கடவுள் வழிபாடு பற்றித் திருவள்ளுவர் கருதுவன யாவை?

திருவள்ளுவர் இறை வழிபாடு பற்றி, ஓரதிகாரம் மட்டுமே வகுத்துள்ளார். இறை வழிபாட்டுச் சடங்குகள் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை.

உலகிற்கு ஒருமுதல் – தோற்றுவித்தவன் உண்டு. பக்தியால் என்ன பயன்? கற்பவர் அவன் தாளைத் தொழுது, வாலறிவு – தூய அறிவு பெறவேண்டும். ஏனைய காரறிவு, புல்லறிவு பற்றியெல்லாம் அவர் குறிப்பிடும் இடங்கள் உள. வழிபாடு – தூய அறிவு தரும், தரவேண்டும்.

மலர்மிசை ஏகினான்
(மனத்தில் அமர்பவன்)
வேண்டுதல் வேண்டாமை இலான்
பொறிவாயில் ஐந்தவித்தான்
தனக்குவமை இல்லாதான்
அறவாழி அந்தணன்
எண்குணத்தான்

என இறைவனைப் பண்புகளையுடைய ஒருவனாகப் பாவித்து, வணங்க வேண்டுகிறார். அடி சேர்தல் – இடையறாது நினைத்தல் என்பார் பரிமேலழகர். இப் பண்புகளை நினைத்து, உருவேற்றி, வழிபடுபவர்களும் அவ்வழியிற் படுதல் வேண்டும். அதாவது அவர்களும் ‘வேண்டுதல் வேண்டாமை இலராக’ – பொய்தீர் ‘ஒழுக்கத்தவராக’ ஆவதற்கே பக்தி வேண்டும்.

இன்றைய திருக்கோயில்கள் ஆரவாரச் சூழ்நிலைகளில் – ஆடம்பரங்களில் மூழ்கிக் கிடப்பதற்கு வைதிகமே காரணம். தம் வருமானம் கருதித் தமிழர் கட்டிய கோயில்களில் நுழைந்துகொண்டு,

உண்மையான பக்தியைப் பாழடிக்கும் வைதிகம், அக் கோயில்களைவிட்டு வெளியேறிவிடுவதே தக்கது.

தமிழர்கள் உருவ வழிபாட்டில் ஈடுபாடு உடையவர்கள்; பத்திமையில் ஆழ்பவர்கள். வைதிக மதத்தின்படி கடவுளுக்கு உருவமில்லை; அக்கினி வழிபாடே அவர்களுக்கு உரியது. ஸ்மார்த்தர்கள், அத்துவைதிகள் திருக்கோயில்களை வெறுத்த காலம் ஒன்று உண்டு. பிறகு அந்த இடமே வருமானம் பெற்று வாழத் தக்க இடமென்று, நுழைந்து கொண்டனர். 'பிராமணாள் கிளப்பு' என்பதைத் தார் பூசி அழித்ததோடு, பிராமணர்களையும் உணவு விடுதிகளை விட்டு வெளியேற்றிய பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு. அதுபோலத் திருக் கோயில்களை விட்டு வைதிகத்தை வெளியேற்றும் நாளே, உண்மையான தமிழர்திருநாளாகும்

1. திருவள்ளுவர் கூறுவது போல இறைவனைத் தியான மண்டபங்களில் அமர்ந்து, நற் பண்புகளைப் பாடி, பேசி, பரவி நெட்டுருச் செய்து, உருவேற்றுதலே வழிபாடாகும்.

2. இறையை வழிபடுவோர், அவ் இறைமைப் பண்புகளை அடையவேண்டும். 'சித்தமலம் அறுவித்துச் சீவனைச் சிவமாக்குதல்' போன்றது அது.

3. கோயில்களில் இடைத் தரகர்கள் அனைவரும் வெளியேற்றப்பட வேண்டும்.

4. பூசகர், பூசாரி, பூசனை, பூசை என்பனயாவும் 'பூசுதல்' எனும் சொல்வழி வந்தவை. பூசுதல் – தூய்மைப் படுத்தல், அலங்கரித்தல் மட்டுமே.

5. காசி, கேதாரம் போலும் இடங்களில் இவையே நடைபெறுகின்றன.

சலப்பூவொடு மறந்தறியேன்
போதொடு நீர்சுமந்து ஏத்தி
பூவும் நீரும் கொண்டு

இவ்வாறு நம் தமிழ்த் திருமுறைகளில் வருவனவே போதும். நீராட்டல், பூச்சூட்டலே வழிபாடு. கருவறை தூய்மைப் படுத்தப்பட வேண்டும்; தெய்வத்திருமேனி நறுமணப் பொருள்களால் அலங்கரிக்கப் படவேண்டும். இதற்கே பூசகர் தேவை.

பக்தர்கள் அவரவர் தாம்தாம் தம் தம் கைகளில் ஒரு தொன்னையில் நீரும், சில புது மலர்களையும் கொண்டு — வரிசையில் சென்று — நீராட்டி மலர் சூட்டிச் செல்லவேண்டும். பிறகு தியான மண்டபத்தில் அமர்ந்து, நற்பண்புகளை மன ஓர்மையுடன் தியானிக்க வேண்டும்.

6. கோயிலில் நிதிகள் சேரவே கூடாது என்பார் திரு.வி.க. அதனால் 'கோயிற் பூனைகள்' கூடிவிடும் என்பார் கோவைகிழார் இராமச் சந்திரனார்.

கோயில் நிதி முழுவதும் சமுதாயப் பணி, கல்விப்பணி, உடல்நலப் பணி, எளியோர்க்குப் பணி, ஊன முற்றவர்க்குப் பணி என மடைமாற்றிச் செலவழிக்கப்பட வேண்டும். பிச்சைக்காரர் ஒழிப்புக்குப் பயன்படவேண்டும்.

இடைக் காலத்தேதான் அரச அரண்மனைகள் போலக் கோயில்களைக் கட்டவைத்து, வைதிகர்கள் உள்ளே புகுந்துகொண்டனர். இதனைப் போராடி, மாற்றியே ஆதல் வேண்டும். இதனை உணர்ந்து, வைதிகர்கள் வெளியேறி, வேறு தொழில்களுக்குப் போய்விடுவது அவர்களுக்கும் நல்லது; இறைவழி பாட்டிற்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது.

## 25. வைதிகம், தமிழர் கட்டிய திருக்கோயில்களில், தமிழர்களின் தாய்மொழியாகிய தமிழைப் பாடுவது தீட்டு என்பது, வள்ளுவ நெறியாகுமா?

உண்மையில் சொல்லப்போனால், 'தீட்டு' என்று சொன்ன நாவை அறுத்தெறிய வேண்டும். திருக்குறள் அகரத்தில் தொடங்கினகரத்தில் முடிவது. ஒரு கட்டமைப்புடையது.

தமிழ் நூல்களில் ஏமாற்று வேலை இல்லை, வடமொழி நூல்கள் எதுவும் முதலும் முடிவுமின்றி இருக்கும். மறைகள் என்று மற்றவர்க்கு மறைக்கப்படும். எதுவும் முழுமையாய் இராது. வேண்டும்போது வேண்டியவற்றை இடைச்செருகிக் கொள்வர்.

அவர்கள் கூறும் மந்திரங்களில் ஓசை இருக்கும்; சிறந்த பொருளே இராது.

நம் இறைவன் இறைவி பெயர்களை வடமொழியாக மாற்றுவதே வேலை. அண்ணாமலையாரை அருணாசலேசுவரர்; பெருவுடையாரைப்

பிருகதீசுவரர்; சொக்கரைச் சுந்தரர்; தாயுமானவரை மாத்துரு பூதம்; அஞ்சொலாளை அபயாம்பிகை; வாடா மலர் மங்கையை அசோக குஸுமாம்பாள் – இவ்வாறு ஆயிரம் பெயர்களை மாற்றினர், இவ்வைதிகப் பாவிகள்.

நம் ஊரில் நம் பெருஞ் தச்சர் செய்யும் சிற்பக் கலையை, இதுபோல வடமொழியிலுள்ளதென்பர். ஒரு பார்ப்பனன் தன் கையால் ஒருசிலை வடித்ததில்லை. நம் இசை, பரத நாட்டியம், சிற்பம் என எல்லாவற்றையும் முன்னே பெயர் மாற்றம் செய்ததுபோல மாற்றிக் கொண்டு, இன்று பேயாட்டம் ஆடுவது, அவர்களுக்கே குலக்கேடு.

'முப்போதும் திருமேனி தீண்டுவார்' எனும் பூசகர், குருக்கள், சிவாசாரியார், பட்டர், பட்டாசாரியார் என்றெல்லாம் அழைக்கப்படுபவர்களைச் சேக்கிழார் 'முதற்சைவராம் முனிவர்' என்பார்.

இவர்கள் தமிழரேயாயினும், தாமும் பிராமணரே என்று வருமானம் கருதிக் 'கட்சி' மாறிக்கொண்டு, வடமொழி கற்று, ஓதத்தொடங்கினர்.

நம் கிராமப் பூசாரிகளாம் வேளார்களைப் பாருங்களேன். அவர்கள் கதையும் இதுதான்.

இன்றும் இவர்களுக்கும் ஏனைய ஸ்மார்த்த பிராமணர்களுக்கும் வேறுபாடிருந்தது. கொள்வினை கொடுப்பினை கிடையாது.

ஸ்மார்த்த பிராமணர், கோயில் மடைப்பள்ளி வரை போக அனுமதித்ததே மிகப் பிற்காலத்தில் தான். இந்த ஏகான்ம வாதிகள் வேத வேதியர். சேக்கிழார் இவ் ஆதி சைவர்களைச் 'சிவ வேதியர்' என அழைப்பார்.

வேதவேதியராக இருந்து சிவ வேதியராக மாறியதாலேயே, திருஞான சம்பந்தருக்குச் சைவர்கள் கூடுதல் சிறப்புக் கொடுத்துவிட்டனர்.

இடைக் காலத்தில் சமணமும் புத்தமும் தமிழகம் முழுவதும் பரவின. பாண்டிய நாடுவரை படையெடுத்துவிட்டன. ஆயினும், அவை புறச் சமயங்கள்; பிற மொழிகள் வழி வந்தவை; கடும் துறவு, வாழ்க்கை வெறுப்பு எனத் தமிழ்ப் பொது மக்களுக்கு ஒவ்வாதன பல அவர்களிடம் காணப்பட்டன.

அச்சமயங்கள் பார்ப்பனரின் – ஆரியரின் வைதிக வேள்வி முதலான அனைத்தையும் எதிர்த்தன; 'வருணாசிரம தருமத்தை' மாற்ற

முற்பட்டன; நாடு முழுவதும் பரவின. வைதிகம் மருண்டு, சுருண்டு மூலையில் படுக்க நேர்ந்தது.

இப்பின்னணியில், இவ் வைதிகம் ஒரு சூழ்ச்சி செய்தது. தமிழர்களைப் பொறுத்தவரை வைதிகமும் புறச்சமயமே. வட நாட்டிலிருந்து வந்ததே; பிறமொழிச் சமயமே.

ஆயினும், தமிழ் மக்களின் ஆழ்ந்த பக்தி நெறியையும் தாய்த்தமிழ்ப் பற்றையும் கண்ட வைதிகம், தானும் புறச்சமயமேயாயினும், தமிழக மக்களின் சமயங்களை ஏற்றுக் கொண்டு, தமிழைப் பயன்படுத்திப் பரப்பி, மக்களிடையே கால்கொண்டது. இதனால் சமணபுத்த சமயங்கள் புறந்தள்ளப்பட்டன. அவ்வாறான பிறகு இவ் வைதிகர் தாம் வாழ எந்தத் தமிழர்கள் உதவினரோ, அவர்களைக் கீழ்மைப் படுத்தினர். எந்தத் தமிழ்மொழி தங்களைக் காத்து, மீண்டும் உயிர்ப்பிக்க வைத்ததோ, அந்தத் தமிழைத் தீட்டு மொழி என்று புறத்தே விரட்டியடித்தனர்

வடமொழியே மந்திரமொழி என்று, தமிழரை மூளைச் சலவை செய்தனர்.

தங்களைக் காத்த மொழியையே விரட்டி நன்றி கொன்றனர்.

இதற்கு மாறாக அச்சமண, புத்த சமயங்கள் இங்கு நிலைபெற்றிருந்தால்கூடத் தமிழ் இவ்வளவு இழிவுபடுத்தப் பட்டிருக்கமாட்டாது. பிறகு வந்த இசுலாமிய, கிறித்தவ சமயங்கள் கூடத் தமிழை வளர்த்தன.

எந்த மொழியைக் காட்டி, 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி,' மாற்றுச் சமயங்களை விரட்டித் தாம் நிலைகொண்டனரோ, அதேவைதிகர்கள் அச் சமயங்களை வென்று ஒட்டியதும், தமிழை இழிவு படுத்தி வாழ முற்பட்டனர்.

என்ன சொல்வது?

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

ஆம்; காலம் தீமையைச் சுட்டெரிக்கும். பொறுத்திருப்போம்; காலம் மாறும்; இப் புன்மையெலாம் போயொழியும்; என்றேனும் ஒருநாள் புரட்சித் தழல் பூக்கும்.

உ-4

# 3. திருக்குறள் தமிழரின் அடையாளம்

அடையாளத்தை இழக்கும் அறிகுறிகள் வளர்கின்றன. என்ன செய்யப் போகின்றான் தமிழன்?

உலகில் ஒரு தமிழனாவது திருக்குறள் நெறியில் முழுமைபெற வாழ்கின்றானா?

'புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்' — வள்ளுவம். திருக்குறளைப் போற்றிப் புகழ்ந்தது போதும்! — இனியேனும் தமிழரெலாம் குறள்நெறியில் வாழவேண்டாமா?

குறள் நெறியில் வாழ்வது கடினமே — அவர் கூறுகிறபடி வாழ்ந்தால், இன்றைய ஊழலர் வாழ்வு போல் செல்வங்கொழித்து, 'எருமையெனச் செழுமைச் சகதியில் கிடந்தின்பம்' நுகர முடியாதே?

திருக்குறள், மேலுலகம் போகவும் வழிகாட்டவில்லையே? வீடு பற்றிய பகுதி இல்லையாமே?

நான் கடவுள்; நான் சொல்வதே வேதம்; என்னை நம்பு; என்னையே நம்பி, நான் சொல்வது நன்றோ, தவறோ என எண்ணிப் பாராதே! மறுக்காதே! சுயமாகச் சிந்தித்தால், நரகத்திற்குப் போவாய்! எனக் கூறவில்லையே? எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் — யான் சொல்வதையே கேட்பினும் — சிந்தித்துப்பார்! மெய்ப்பொருள் கண்டு, நீயே உன்னை அறிந்து முன்னேறு என விட்டுவிடுகிறாரே!

இந்தியப் பிறமொழிகள் சார்ந்த நூலெல்லாம், எமது நூலைப் படிப்பதால் செய்த — செய்யப் போகின்ற — செய்து கொண்டிருக்கிற 'பாவம்' எல்லாம் போய்விடும் என்று பறை முழக்கம் செய்கின்றனவே? திருவள்ளுவர், தம் நூலைப் படிப்பதால் பாவம் போகும் என்று ஓரிடத்தில் கூட ஆசை காட்டவில்லையே!

பணம் செலவழித்தால், பரிகாரம் உண்டு — என்று ஓரிடத்தில் கூடக் கூறவில்லையே?

'பரிகாரம்' — சடங்குகள் ஹோமம் வேள்வி தரகு வேலை வழி அருச்சனை, என இவற்றால் தீர்த்து விடலாம் என வழிகாட்டவில்லையே?

இந்தியன் ஒவ்வொருவனும் பணம் செலவழித்துக் கடவுள்களை வணங்கிவிட்டுச் செய்த பாவங்களைத் தீர்த்துக் கொண்டு, மேலும் கொலை களவு காமத்தில் ஈடுபடுகின்றானே! வடமொழி வேதங்கள், நூல்கள் அனைத்தும் இவற்றுக்கு வழிகாட்டி, மனிதனை மயக்கி, நாடே சுடுகாடாகி வருகிறதே! திருக்குறள் மட்டும் தனித்து நின்று, 'பரிகாரச் சடங்குகளையே' கூறாது, மனிதனை மயக்காது, 'அறத்திற்காக அறம்' என ஒரு புதுவழி — பொதுவழி சொல்கிறதே! இதனால் திருக்குறள் வழி வாழ்ந்து என்ன பயன் என எண்ண வேண்டியுளதே! ஆசைகாட்ட வேண்டாமா? அனைத்துச் சமயங்களும் போல, 'என்னிடம் வா! எல்லாப் பாவம் குற்றம் குறை, நோய், உடல் ஊனம் அனைத்தையும் தீர்த்து, செல்வம், திருமணம், மகப்பேறு, சுகவாழ்வு, இன்பக் களியாட்டம் எல்லாம் தருகிறேன் என்று திருக்குறள் ஒருவரைக் கூட ஈர்க்கவில்லையே? பிறகு எப்படி மனிதர்கள் திருக்குறளின்படி வாழ்வார்கள்?

கொலை களவு காமம் கற்பழிப்பு ஊழல் சூதாட்ட அரசியல் சாதுரியப் பேயாட்டப் பெருவாழ்வு பாரத நாடு முழுதும் மலிந்து கிடக்கிறபோது, இவை அனைத்தையும் செய்துகொண்டு, பணம் செலவழித்துச் சடங்குவழிப் பரிகாரங்கள் செய்து தப்பிக்க வழிகாட்டும் வடமொழி நூல்களா இந்தியத் தேசிய நூல்களாகும் தகுதியுடையவை?

தீச்செயல், தீயினும் அஞ்சப்படும். தீவினைப் பயன் வீயாது (அழியாது) பின் சென்று அடும். தீய செயல், ஒருவனது நிழல் போன்றது; அவன் காலடியில் கிடக்கும் அது, சமயம் நேரும்போது வெளிப்பட்டு அதன் பயனைத் தந்தே தீரும். இப்படிச் சொல்லும் திருக்குறளை யார் பின்பற்றுவார்கள்?

தீயவற்றை வெல்ல நல்லவற்றைச் செய்ய வேண்டும். தீவினையாளன் அழ வேண்டும்; அல்லது அறம் அவனை அழச் செய்யும்; அழிக்கும். அவன் (சந்ததி) அழியும்; சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக்கெடும். தீவினையாளனின் தீவினைப்பயன் உடனே தெரியாது. அவனுடைய ஏழு பரம்பரை வரை அது தொடரும். அவன் மக்கள் காமுகராகி, கொலை காரராகி, தீயவராகி வழிவழி அழிவர்.

'பரிகாரம்' என்பது வருந்துவது; திருந்துவது; நல்லதற்கு மாறுவது. பின் செய்யும் நல்வினைகளால், முன்னதன் பயனை அனுபவித்தே

தீரவேண்டும். எனினும், பின் செய்யும் நல்வினைகளின் பயன்பாடு வரும்போது நன்மையுண்டாகும்.

இப்படிச் சொன்னால் திருக்குறளை யார் படிப்பார்கள்? பத்து ரூபாய் செலவழிப்பவனுக்கு ஒரு சிறிது புண்ணியம்; பத்தாயிரம் செலவழித்தால், அந்த அளவு புண்ணியம்; கோபுரம் கட்டிக் குடமுழுக்குச் செய்தால், கோடிப் புண்ணியம். கடவுளே 'ரேட்டு' – வைத்துள்ளாரே? இந்தியா முழுவதும் புண்ணிய வாணிகமல்லவா நடக்கிறது? கடவுளும் ஆள் பார்த்து, அவன் பணப்பை பார்த்து, அவன் செலவு செய்யும் அளவு பார்த்துப் 'புண்ணிய வாணிகத்தை'த் தம் தரகர்களாம் புரோகிதர்கள் பூசனையாளர்கள் வழி மிகத்திறம்பட நடத்துகிறாரா?

"நம் கடவுளர்கள் எல்லோரும் மக்களை மறக்கடிக்க, 'மதம்' எனும் போதை மருந்தைப் பயன்படுத்துகிறார்களே? மக்களின் 'பக்தி' எனும் வலையை வீசி ஊரை, உலகை, மக்களை வாட்டி வதைத்து, மக்களடைய வேண்டியன அனைத்தையும் தங்களுக்கெனக் கேட்கிறார்களே?" – இப்படித்தானே பிராமணத் தரகர்களும் பிற பூசகர்களும் இராசிபலன் எழுதும் மாயாசாலச் சோதிடர்களும் கூறி உலகை ஏமாற்றி, வெற்றி பெற்றுத் தவக்கோலம் காட்டி, உலக மக்களை அவலத்தில் தள்ளுகிறார்களே!

இரண்டு 'டேங்க்' அளவு பால் கொணர்ந்து, ஒரு கோயிலில், பாலபிடேகம் செய்ததை, மிகச் சிறப்பாக, ஆறு கலம் செய்தியாகத் தமிழகத் தமிழ்க்கொலை, மற்றும் மார்வாடிப் பத்திரிகைகள் இவற்றையே வெள்ளி மணியாகவும் தங்கமணியாகவும் தனமலராகவும் தந்தியாகவும் ஒலிக்கின்றனவே!

தொலைக் காட்சிகள், இப்புண்ணியக் காட்சிகளைக் காட்டி, மக்களை எல்லாம் திசை திரும்பிவிட்டனவே! இச்சூழலில் திருக்குறள் எடுபடுமா?

எந்தக் கடவுளாவது, மக்களுக்குப் பயன்படும் எல்லாவற்றையும் எனக்குக் கொடு என்று கேட்டதுண்டா? எனக்கு வைரமுடி வேண்டும்; எனக்குத் தங்க அணிகலன்கள் வேண்டும்; எனக்குத் தங்கத்தேர் வேண்டும்; மக்களுக்குப் பயன்பட வேண்டிய பால், தயிர், தேன், நெய், இளநீர் எல்லாவற்றையும் எனக்குத் தா; மக்களுக்குக் காட்டாதே என்று கூறியதுண்டா?

ஹோமம், வேள்வி என்று கோடிக்கணக்கில், மக்களுக்குப் பயன்படும் பழங்கள், நெய், பட்டாடைகள், உணவுப் பண்டங்கள் எல்லாம் அக்கினி பகவானுக்குப் போடப்பட்டு, அவர் மேலுலகத் தேவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதாகக் கூறுவது எவ்வளவு பித்தலாட்டம்? எந்தத் தேவராவது இவற்றை வந்து பெற்றுதுண்டா? இவை ஆவியாகி, புகையுடன் கலந்து, தேவலோகம் போகின்றனவாம்! அதனால்தான் மழைபொழிகிறதாம்; நாடு சிறக்கிறதாம்; கீதையே முழங்குகிறதே! இவை மக்களை மறக்கடிக்கும் வேலைகள் அல்லவா? அவர்கள் கூற்றுப்படி, உண்மையான தேவர்கள் பசியற்றவர்கள்; எல்லாம் நிறைந்தவர்கள்; இன்பமெல்லாம் குறைவறப் பெற்றவர்கள். அவர்கள்தான் நமக்கு அருள்தர வேண்டும்; எல்லா வளமும் தரவேண்டும்; நாடு மலிய மழைதர வேண்டும். நம்மிடம் அவர்கள் எதிர்பார்ப்பன அன்பு, அருள், கருணை, பண்பு, பற்றின்மை, ஐம்புல அடக்கம், உள்ளார்ந்த பக்தி, பாடிப்பரவுதல் இவையே.

இடைத்தரகராம் பூசாரிகள், பூசகர்கள் இன்னமும் பிச்சைத் தட்டைப்போல், தட்டு ஏந்தலாமா? வெளியே பிச்சைத்தட்டுடன் இருப்பவர்களை, இழிவாகப் பார்த்து, எதனையும் வழங்காது போகிறோம்; உள்ளே ஏந்துபவன் 'தானம்' வாங்கவே பிறந்தவனாம். மானமின்றி, இந்த அறிவுயுகத்தில், புண்ணியத் தரகு வேலை பார்க்கும் கோயிற் பூனைகளையும், பெருச்சாளிகளையும், மனித வௌவால்களையும் அறிஞர்கள் கண்டித்துள்ளனரே! தமிழர்களின் பண்பாடு திருவிளக்கு வழிபாடு, பொங்கல் வைத்தல், படையலிடுதல், கனிந்துருகும் மனத்துடன் பாடிப் பரவுதல் இவையே. இதனால் எப்பொருளும் அழிவதில்லை. நண்பர், உறவினர், மக்களிடம் வழங்கப்பட்டு அனைவரும் உண்டு மகிழ்கின்றனர்.

நடுகல்லுக்கு ஊனும் மதுவும் வைத்து வழிபட்ட அந்தக் காலம் முதல், இந்த முறையே தமிழர் முறையாகும்.

ஏழைகளை ஏழைகளாக வைத்திருக்கவே எல்லா வழியாலும் இந்து மதம் என்ற வைதிக மதம் வழி சொல்கிறது. ஒரு சிலர் மூன்று சதவிகிதத்தினர் வாழ்வதற்காக, 97 சதவிகித மக்கள் மூளைச் சலவை வயப்பட்டு ஏமாறுவோராக மாறவே இந்துமதமாம் – வைதிக மதம் வழி சொல்கிறது.

திருவள்ளுவர் வைதிக மதத்தைப் புத்தர் போலவும் மகாவீரர் போலவும் முழுமையாக எதிர்த்தவர். அவர்கள் நிறுவனச் சமயங்களாகியதால், மிகத் தந்திர மந்திர மாயா சாலங்களால் அவற்றை

வைதிகம் புறந்தள்ளிச் சிறுக வைத்துவிட்டது. வைதிகத்திற்கு எதிராகக் கடுந்துறவுகளை அவர்கள் போதிக்கவே, மக்களை ஈர்க்கத் தென்னாட்டில் புகுந்த வைதிகம் சிவனியம், மாலியம், கொற்றவையியம் (சக்தி) மூன்றையும் – கொள்கையில்லாக் கூட்டணியாக்கிக் கொண்டு, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்புவதாகச் சொல்லிக்கொண்டு, இங்குள்ள மக்களின் பக்திக்குத் தரகு வேலை பார்ப்பதாகக் கூறிக்கொண்டு, இன்ப வாழ்வை ஏற்பதாக 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனப் பறைசாற்றிக் கொண்டு, அவ்விரு வடநாட்டுத் திராவிட சமயங்களையும் முற்றிலும் நம் மக்களைக் கொண்டே, நம் தமிழைக் கொண்டே விரட்டியடித்துவிட்டது.

அவ்வாறு விரட்டியடிக்கத் தமிழரும் துணை நின்றனர். ஏனெனில், அவை பிறமொழிகளாம் சமற்கிருதம், பாலி, அர்த்தமாகதிகளைப் பரப்பித் தமிழை அழித்துவிடும் எனத் தமிழ்ப் பொது மக்கள் அஞ்சினர். உண்மையில் சமற்கிருதத்தை, கிரந்தம் என எளிமையாக்கித் தமிழரிடையே புகுத்த முயன்றதும், மணிப் பிரவாளம் என முதன்முதல் தமிழுடன் சமற்கிருத மொழியைச் சரிக்குச்சரி கலக்க வழிகாட்டியதும் சமணமே.

இந்நிலையில் வைதிக அந்தணர்கள் மூன்று நிலையினராய்த் தமிழகத்தில் இருந்தனர். ஒருவகையினர் வடநாட்டிலேயே, இந்தியா முழுவதும் தமிழகமாக இருந்த பொழுது, தமிழருள் கலந்து, தூய ஆரியர்களால் 'சாதிப் பிரஷ்டம்' செய்யப்பட்டவர்கள். அவர்கள் தமிழர்களும் தாமும் கொண்டும் கொடுத்தும் தமிழர்களாகிப் போனாலும், தங்கள் மொழியை – வருமானம் கருதிக் கைவிட்டிலர். இரண்டாம் வகையினர், தமிழகத்திலேயே பிறந்து, வளர்ந்தவர்களே. இவர்கள் நிலை வேறு. தமிழக மன்னர்கள் வடநாடு முழுவதும் வென்று, இமயம் வரை தமிழகமாக இருந்ததொரு கால உணர்வால், அதுவரை சென்று கொடி நாட்டுவதிலேயே போட்டி போட்டனர். ஆனால், திரும்பும் போது, ஆரிய வழியினரின் நிறம், அழகு போன்றவற்றாலும், பிற மந்திர தந்திரங்களாலும் அவர்களிடம் மயங்கி, வேள்வி செய்ய என்று ஒரு கரணியம் இட்டுக்கொண்டு, தென்னாட்டில் அவர்களைக் குடியேற்றினர். பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனப் பட்டப் பெயர்களே பூண்டு மகிழ்ந்தனர். வேந்தரெல்லாம் வேள்வி யாசையில் மூழ்கினர். கரிகாற் பெருவளத்தான் முதல் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் வரை இதுதான் கதை. மேலும், இங்கிருந்த பாணர், பாடினியர், வயிரியர், கூத்தர், பொருநர், புலவர்

என வேந்தர்களுக்கெல்லாம் அணுக்கமானவர்கள் புறந்தள்ளப்பட்டனர். இந்த வடநாட்டவர், சிறிது சிறிதாகத் தாம் அணுக்கர்களாகிக் கொண்டு, முன்னையவர்களை அணுகவிடாதும் வாழவிடாதும் புறந்தள்ளினர். ‘நின் முன்னோர் பொன்னும் பொருளும் வயிரியர்க்கு (இசைவல்ல கூத்தர் அனையவர்க்கு) ஈந்தனர்’ என்று பாடிய காலம் போய், ‘ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறைய பொன்னும் பொருளும் ஈந்தனர்’ எனப் பாடுகிறது புறநானூறு. ஈர்ங்கை நிறைய என்றது, தாரை வார்ப்பது. தாரை வார்த்துக் கொடுப்பதே தானம். பார்ப்பனர்க்குக் கொடுப்பதற்கே ‘தானம்’ என்று பெயர். தமிழர்களின் செத்தவீட்டில்கூட, இப்பார்ப்பனர் ‘பூரிக்காசு’ வாங்கியே பிழைத்தனர்.

அன்று வேந்தர்களின் பக்கத்தில் ஆணும் பெண்ணுமாய் அமர்ந்து, அவர்களைத் தம் வயப்படுத்திவிட்டதைப் பார்த்த, தமிழகத்து இசைஞர், கூத்தர், கணியர், அறிவர் இங்கிருந்த அந்தணர், கல்தச்சர், சிற்பியர், மரத்தச்சர் என மிகப்பலரும் சிவாசாரியார், பட்டாசாரியார், குருக்கள், பட்டர் என முப்போதும் திருமேனி தீண்டி வாழ்ந்த நற்பூசகர்களும் பூணூல் போட்டுக்கொண்டு, தங்களையும் உயர் சாதிக்காரராக ஆக்கிக்கொள்ள முயன்று, தாங்களும் வேள்வி செய்வதாக நடித்து, சமற்கிருதம் கற்று, உயிர் வாழ வேண்டி, ஒருவகைப் பார்ப்பனராயினர். பலர் வெற்றி கண்டனர்; சிலர் அழிந்தொழிந்தனர். மூன்றாம் வகையினர் களப்பிரர், பல்லவர், நாயக்கர்களால் குடியேற்றப்பட்ட இடைக்காலப் பிராமணர். அவர்களாலேதான் இன்று தமிழ் அழிக்கப்பட வேண்டி, அனைத்து முயற்சிகளும் சாதுரியமாக அரங்கேறி வருகின்றன.

சிவ வேதியர் வேறு, மாலிய வேதியர் வேறு, புதுவதாகக் குடியேறிய கொடிய வேத வேதியர் வேறு. இன்று இவர்கள் அனைவருமே பிழைப்பு வாய்ப்பு வருமானம் கருதி, திருக்கோயில்களுக்குள் தமிழை நுழையவிடாமலும், திருமணம் முதல் சாவு வரை தாங்களே சடங்குகள் செய்வோராகவும் வாழ்ந்து வருகின்றனர். சொந்தத் தொழில் செய்து வாழ முனையாது, இன்றும் ‘தரகு வேலை’ பார்ப்பது பொருளற்ற செயல் என்பதை மறந்து போயினர். தங்கள் வருமானத்திற்காக, உலகை அழிக்கின்றனர்; தாய்மொழியைப் புறக்கணித்துப் பாவமும் பழியும் தேடுகின்றனர்.

வடநாட்டிலிருந்து குடியேறியுள்ள மார்வாடிகளும் இப்பார்ப்பனரும் தமிழையும் தமிழினத்தையும் சீர்குலைக்க வல்ல ஊடகங்களை — நாளிதழ்கள், தாளிகைகள், தொலைக்காட்சி, திரைப்படம் — அனைத்தையும் கைவசப்படுத்தித் தமிழை அழித்து வருகின்றனர்.

சாதுரியமாக இவ்வேலையில் ஈடுபடுவதால், தன்னலத் தமிழர்கள், அவர்கள் வலையில் வீழ்ந்து அடிமை வேலை செய்து வருகின்றனர்.

இந்தியை எதிர்த்தவர்கள் தமிழை இழக்க வழி வகுத்தனர். திருவள்ளுவர் நற்குடிப் பிறந்தவர்களே நாட்டை ஆள வேண்டுமென்ற கருத்துடையவர். இன்று சான்றாண்மை மிக்கவர்கள், தமிழகச் சட்டப்பேரவைகளில்கூட இடம்பெறல் அரிதாகிவிட்டது.

திருவள்ளுவர், 'வினைத்தூய்மை' முதலில், ஆள வருவோர்க்கு வேண்டுமென்றார். வினைத்திட்பம், வினை செயல்வகைக்கு முன்னால், வினைத்தூய்மை வேண்டுமென்றார்.

ஊழல் வடிவானவர்களே தமிழகத்தையும் இந்தியாவையும் ஆட்டிப் படைக்கின்றனர்.

இந்த நிலையில், வள்ளுவநெறியில் தமிழகமும் வாழுமாறில்லை; பாரதநாடும் உய்யுமாறில்லை.

திருவள்ளுவரின் கருத்துக்கள் உள்ளது உள்ளபடி இங்கு முன்வைக்கப்படுகின்றன. இவை கசப்பு மருந்துதான். திருவள்ளுவர் நெறிப்படி வாழ்ந்தால்,

திருக்கோயில்களில் நிதியே கூடாது.

வழிபாடு, நல்வழிப்படுதலேயாக நேரும்.

இடைத்தரகுப்பணி, கோயில்களை விட்டு வெளியேற நேரும்.

இராசி பலன் – பொதுப்பட – தாளிகைகள் எழுதுவதும் புதுப்புது சோதிட இதழ்கள் வெளிவருவதும் தடை செய்யப்பட நேரும். தனியே கணியம் பார்ப்பது அவரவர் விருப்பம். கொள்ளையடிக்க வழிகாட்டுவதும், கொலை செய்யத் தூண்டுவதும் போன்றவை இப்பொதுப்பலன், பரிகாரம் பற்றியவை. இராசிபலன் என்று, பொதுப்பலன் எழுதுபவர்களைத் தண்டிக்க வேண்டும். தனித்தனியே பார்ப்பது அவரவர் விருப்பம்.

வேள்வி, ஹோமம் செய்வன தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும். செய்வோரும் செய்யப் பணம் செலவழிப்போரும் சிறை செல்ல வேண்டும். இவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்க வேண்டும்.

துறவு வேடச் சாமியார்கள் – எந்தத் திருமடமாயினும் – போலி மகாசுவாமிகள் முதலாக அனைவர்தம் . மடங்களும்

நாட்டுடைமையாக்கப்படவும், அவர்களைத் 'துறந்தார்க்கு இவ்வுடம்பும் மிகை' எனக் கோவணத்தொடு வாழும் உண்மைத் துறவிகளாக ஆக்க வேண்டும். அவர்கள் குவித்திருக்கும் செல்வத்தை அரசு கைப்பற்றி, மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

இவையும் இவை போல்வனவும் நடக்கக் கூடியனவா? வள்ளுவத்தைப் படிக்கலாம்; ஒப்பிக்கலாம்; உரை எழுதலாம்; சொற்பொழிவாற்றலாம்.

ஆனால், இன்றைய சுற்றுச்சூழல் முழுவதும் வைதிகமாம் — இந்துமத வெறிகளாலும் சாதிசமயச் சழக்குகளாலும் சீரழிந்து கிடக்கிறது.

எந்த வைதிகம் புத்த சமண சமயங்களை விரட்ட, திராவிட சிசுவெனப் பட்ட திருஞானசம்பந்தர் முதலாகத் தமிழைப் பயன்படுத்திக் கொண்டனரோ, அதே வைதிகர்களே அச்சமயங்களை விரட்டிய மறுகணமே, தங்கள் வேத வைதிகம், வருணாகிரம தருமம், யக்ஞம், ஹோமம் என அனைத்து நிலைகளிலும் தமிழையும் தமிழரையும் நஞ்சூட்டி அழிப்பது போல் அழித்து வருகின்றனர்.

எந்த வைதிகம் தமிழைக் காட்டி, தமிழ்ப் பண்பாட்டை ஏற்பதுபோல் நடித்ததோ, அதே வைதிகம் இன்று தமிழை நீசபாஷை என்கிறது. அதே வேத வைதிக ஆசாமிகள், ஏனைய அனைவரையும் இழி குலத்தவர் ஆக்கி, தங்களைத் தொட்டுவிடாமல் பார்க்கும் 'தீண்டாமையை' இன்றும் கடைப்பிடிக்கின்றனர்.

எம்.ஆர். இராதா தமது நாடகங்களில் அடிக்கடி சொன்னதுபோல, அழுக்கடைந்த குட்ட ரோகிகள் நம்மைத் தொடாமல் இருப்பதும் நல்லதே. இன்றும் அவர்களைப் போல் நாம் உண்ண முடியாது என்பதால், தனியே 'பிராமண போஜனம்' நடப்பதும் நல்லதே. ஆயினும், இவர்களை மாற்றினாலன்றித் தமிழையும் தமிழனையும் வாழவிடமாட்டார்கள்.

ஆனால், திருக்குறள் நெறியில் நாமும் வாழப் போவதில்லை; அவர்களும் திருக்குறளை வாயால் போற்றி ஒழியட்டும் என்று நம்மை வேடிக்கை பார்ப்பார்களே தவிர, அத்தூய நெறியில் நம்மை வாழவிடமாட்டார்கள். 1947க்கு முன்பு நாம் ஆங்கிலேயர்களுக்கு, அடிமை; பின்பு வடநாட்டவர்க்கு அடிமை. இது தீரப்போவதில்லை. மானமுள்ள தமிழர் நூறாயிரம் பேராவது திரளினல்லால், தமிழும் தமிழரும் இன்னும் இரு குடிவழிப் பரம்பரைக்குப் பிறகு அடையாளம் இழக்க நேரலாம்.

# 4. திருக்குறள் மூலபாடத்தைச் சிதைப்பது கொடுமை

திருக்குறள் மூலத்தைச் சிதைக்கும் முயற்சி, காட்டுத்தீ போலப் பரவி வருகிறது. பெரியவர்களும் வேறு வகையில் புகழ் பெற்றவர்களும் குறுக்கு வழியில் பதவி ஏறியவர்களும் இகழைப் புகழாக நினைப்பவர்களும் இத்தீங்கைச் செய்ய முற்படுகின்றனர்.

திருக்குறட் சான்றோர் பேரவைகளும், திருக்குறட் கழகங்களும், திருக்குறள் தோன்றல்களும், மற்றும் ஆள்வோர் முதல் அனைவரும் அறிந்தோ, அறியாமலோ இதை அணிந்துரை தந்தும் பரிசும் பாராட்டும் கொடுத்தும் ஆதரிக்கின்றனர்.

இதனால் ஒவ்வொரு மூடத்தமிழ் மகனுக்கும், திருக்குறளைத் தான் நினைத்தவாறு திருத்தும் உந்துதல் ஏற்படுகிறது; ஊக்கம் பிறக்கிறது. காலப்போக்கில் இது காத்தையா திருக்குறளா, ஆமா சாமியார் திருக்குறளா, அறஞ்சாரார் வகுத்த குறளா, மாதவன் முப்பாலும் கலந்து தந்த குறளா, ஆனந்தனின் உண்மைக் குறளா என்ற தடுமாற்றம் ஏற்படும்.

ஒரு கட்டுரை எழுதுபவன் போடும் குறள் எண், இவற்றுள் எதுவென்று அறிய முடியாத குழப்ப மேற்படும். திருவள்ளுவர் எழுதிய மூலத்திருக்குறள் – இதே நிலை நீடித்தால் – மறைய நேரும். இவர்கள் திருவள்ளுவர் பெயரை மறைத்துத் தங்கள் பெயர் விளங்கட்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

புரட்சிக் கவிஞரின் இம்மன்றக் கூட்டத்தில் நீதியரசர்கள், தொழில் அதிபர்கள், மானமிகு தமிழறிஞர்கள் என நூற்றுக்கணக்கானவர் வந்துள்ளீர்கள். இதை நான் எதிர்பார்க்கவில்லை. மேடை ஏறினால், உண்மை சொல்ல நேருமே என எண்ணியிருந்த என்னை, மன்றத்தலைவர் வரதராசன் மேடை ஏற்றிவிட்டார். அதனால் ஓர் இன்றியமையாச் செய்தியை இங்குக் கூறிவிட விழைகின்றேன்.

திருக்குறளை ஆராயலாம்; விமரிசனம் செய்யலாம்; குறட் கருத்துக்கள் சில இக்காலத்திற்கு ஏற்புடையன அல்ல என எழுதலாம்;

பெண்ணியம் பேசுவோர், சில குறட்பாக்களை மறுக்கலாம்; பகுத்தறிவாளர் தமக்கு ஒவ்வாதன எனச் சில குறள்களை எடுத்துரைக்கலாம்.

மேலும், திருக்குறளுக்கு இதுவரை, கிடைத்துள்ள பழைய உரைகள் பத்துத் தவிர, புதிய உரைகள் பல நூற்றுக்கணக்கின தோன்றுகின்றன; தோன்றிக் கொண்டே இருக்கின்றன. யான் அடிக்கடி குறிப்பிடுவது போல் திருவள்ளுவர், 'தேடல்' உத்திக்கு வழிவகுத்துள்ளார். இன்னும் உரைகள் தோன்றும். திருக்குறளை ஆழ்ந்து படிப்பவனுக்குத் தானும் ஓர் உரையெழுதத் தோன்றுகிறது. சிலர் உரைகளால் புதிய ஒளிவீச்சுக் கிடைக்கிறது என்பதும் உண்மையே.

ஆனால், திருக்குறள் மூலத்தைத் தத்தம் விருப்பத்திற்கு ஏற்பத் திருத்த இடம் தரக்கூடாது. திருக்குறள் தமிழ் மறை; தமிழர்களின் வேதம். அதில் கைவைத்தல் கடுங்குற்றம். இக்குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இந்த நூல்களின் பெயர்களையும் மூலத்தில் கைவைத்த தீயவர்களின் பெயர்களையும் குறிப்பிட விரும்பவில்லை. இந்த நூல்கள், இவற்றை எழுதியவர்களாலேயே, எரித்துச் சாம்பலாக்கப்பட வேண்டியவை. மக்களிடையே பரவாது தடுக்கப்பட வேண்டியவை. புறக்கணிக்கப்பட வேண்டியவை.

மறைமலையடிகள், பாவாணர், பெருஞ்சித்திரனார், முத்தமிழ்க் காவலர் போல்வார் இன்றில்லை. இன்று திருக்குறட் செல்வர் பலர் இதையும் ஆதரித்து, திருக்குறள் மூலம் சிதைக்கப் படுவதை வரவேற்று – முகத்தாட்சணியத்திற்கு ஒருத்தி, சூலான கதையாக யாவும் நடக்கின்றன. இவ்வாறு இச்சொல் வேறு செயல் வேறு பட்டவர்கள் நடந்து கொள்கின்றனர். முத்தமிழறிஞர் கலைஞர், தாம் எழுதிய உரையில் மூலத்தைச் சிதைக்கவில்லை. தம் கருத்தை, வள்ளுவர் கருத்தாகத் திணிக்கத் தாம் துணியவில்லை என்றே குறிப்பிடுகிறார். இதுவரை முற்காலத்திலேயே திருக்குறளில் சிற்சில பாட வேறுபாடுகள், குறள்வரிசை வேறுபாடுகள் தோன்றவில்லையா என்று கேட்கின்றனர்.

மணக்குடவர் முதல் பரிமேலழகர் வரை தோன்றிய, பழைய உரைகளில் இவ்வாறு பாட வேறுபாடுகள் உள. இரண்டாயிரம் ஆண்டுகளாக வாயால் உரைக்கப்பட்டும், செவி வழியாகக் கேட்கப்பட்டும் நினைவில் வைத்தே கடந்த காலங்கள் பல. பிறகு ஏடுகளில் பலரால் பல நிலைகளில் படியெடுக்கப்பட்ட காலங்களும் பல.

இத்தகைய நீண்டநெடிய காலத்தையும் தாண்டி, இன்றும் முழுக் கட்டமைப்போடு திருக்குறள் மூலம் கிடைத்துள்ளது. சிறுசிறு பாட வேறுபாடுகள் தோன்றியிருப்பது, உடம்பில் அழுக்குகள் படிவன

போன்றது; உடையில் தூசிகள் படிவன போன்றது. இவை களையப்பட்டு, உண்மையான மூலத்தைக் கண்டறிவதும், அதனை இன்றைய அச்சுக்கலை, கணினிக்கலை வடிவில் காப்பதும் எளிது. ஆயினும், இன்று சிலர் செய்வன, உடம்பை வெட்டி ஒட்டுவது போன்றன. காலை வெட்டிக் கையிருக்க வேண்டிய இடத்தில் வைப்பதும், கையை வெட்டிச் சிதைப்பதும் போலும் செயல்கள் இவை.

முன்பு குறையில்லையா என்று கேட்பவர்களுக்கு ஒன்று கூறலாம். குறைகண்டால், அதைத் திருத்திச் செம்மைப்படுத்த வேண்டுமே தவிர, மேலும் மேலும் குறைகளைப் பெருக்குவது முறையாகுமா? பழைய உரைகள் பத்தினையும் ஒப்பிட்டு, ஏடுகளின் அடிப்படையில் தமிழறிஞர் குழு ஒன்று கூடிச் செம்மைப்படுத்தலே அறநெறி; சிதைப்பதற்குக் காரணம் காட்டுவது கொடிய பிழைநெறி.

மூலத்தைச் சிதைப்பது, குறள்களை இடம் மாற்றுவது, இயல்களை இடம் பெயர்ப்பது, அதிகாரங்களை மாற்றுவது, அதிகாரப் பெயர்களை மாற்றுவது, இன்னோரன்ன கொடுஞ்செயல்களைச் செய்பவர்கள், கொலைக் குற்றவாளிகள்; இவர்களை ஆதரிப்பவர்கள் கொலைக்கு உடந்தையானவர்கள்; மேலும் பலர் கொலை செய்யத் தூண்டுபவர்கள். இவர்களைப் பற்றித் திருவள்ளுவர் தீர்ப்பு இது.

> கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர் (550)

உண்மையிலேயே திருக்குறளைத் தமிழ்மறை என நம்புபவர்கள், இதில் கருத்து வேறுபட மாட்டார்கள். இவர்கள் என்ன மணக்குடவரை விட மேலானவர்களா? பரிமேலழகரை விடப் புத்திசாலிகளா?

ஆயிரம் உரை வேறுபாடு காட்டி எழுதுங்கள்; ஆயிரம் விதத்தில் விமரிசனம் செய்யுங்கள். அதில் தடையில்லை. திருக்குறளைப் பல கோணத்தில் மறுத்து ஆராய்ந்து எழுதுங்கள். மூலத்தில் கைவைக்க நீங்கள் யார்? திருக்குறள் மூலத்தையே மாற்றுமளவு நீங்கள் அறிவாளிகளா?

> வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
> உடையம்யாம் என்னும் செருக்கு (844)

தான் மட்டுமே அறிவாளி என எண்ணும் ஆணவம் உடையவனே, முட்டாள்களில் சிறந்த முட்டாள் என்பதுதான், உண்மையான 'திருவள்ளுவம்.'

ஆண்டாள் நாச்சியார் தமது திருப்பாவையில், 'தீக்குறளைச் சென்றோதோம்' என்று பாடியது, திருக்குறளைப் படிக்காதீர் என மறுத்துப் பாடியதுதானாம். திருக்குறளை ஆண்டாள் 'தீக்குறள்' என்று கூறி விட்டாராம். முன்னைய காஞ்சிமடத்துப் பெரியவருக்கும் இதுவே கருத்தாம்.

'தீக்குறளைச் சென்றோதோம்' என வரும் ஆண்டாள் பாவைப் பாடல் இங்கே சுட்டத்தக்கது.' 'தீக்குறள் என ஆண்டாளால் குறிக்கப்படுவது, திருக்குறளைத்தான் என்பது காஞ்சி சங்கராசாரியாரின் கருத்து. அதுவே சரி.'

இவ்வாறு எழுதும் தமிழறிஞருக்குத் தமிழ் இலக்கண அறிவு இல்லை என்று கூறமுடியாது. முன்பு சங்கராசாரியார் சொன்னபோது, என் மாணவப் பருவத்தில் நாடெங்கும் எதிர்ப்புக் கிளம்பியது. போராட்டத்தில் ஈடுபட்ட அன்றைய என் உள்ளம், மீண்டும் 'பூதம்' புறப்படக் கண்டு திடுக்கிடுகிறது. இன்று எதிர்ப்பவர் இலர் என்பதோடு, பாராட்டல்லவா குவிகிறது?

மர்ரே பதிப்பில், 'தீக்குறளை சென்றோதோம்' என்றே காணப்படுகிறது. அனைத்துப் பதிப்பிலும் 'ச்' ஒற்று, இடையில் இல்லை. இரண்டாம் வேற்றுமை உருபு விரிந்ததானால், தீக்குறளைச் சென்று ஓதோம் – என 'ச்' ஒற்று வரும். இங்குக் குறளை – என்பது, ஒரு சொல். அதன் பொருள் பொய், புறங்கூறல் என்பது. மற்றவரைப் பற்றிக் 'கோள்' கூறி, பொய் சொல்லி வாழமாட்டோம் என்பதே பொருள். அதனால்தான் 'ச்' ஒற்று இடப்படவில்லை.

மேலும், ஆழ்வார்களுக்கோ, ஆண்டாளுக்கோ திருக்குறள் மறுப்புச் சிந்தனை எங்குமே இல்லை. மேலும்,

நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம், மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்று ஓதோம்

எனவரும் பாடலின் கருத்துச் சூழல் (Context) படி இங்குப் பொய் கூறோம் எனும் நோன்பு மட்டுமே பேசப்படுகிறது. இது கூடவா தெரியாது என்று கேட்காதீர்கள்! இதனைச் சான்றோர் பேரவையோ, திருக்குறட் பேரவையோ, திருக்குறட் கழகங்களோ மறுக்க வேண்டாமா? விடை வேண்டாம். 'மருந்தோ' மற்று ஊனோம்பும் வாழ்க்கை?' – வினவுகிறது, திருவள்ளுவம்.

'குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின்' (1019) என்பதும், 'தீயவனேயன்றி, அவன் சுற்றமும் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்' என்பதும் (166) 'பேதை பிறந்த குடிமடியும் தன்னினும் முந்து' என்பதும் (603) இவை போல்வனவும் ஒருவனது தீய பண்பாலும், செயலாலும் மன்பதைச் சமுதாயம் கெடும் என்பதை விளக்குவன. அத்தீயவனே அன்றி, அவன் குலமும் குடியும், சுற்றமும் ஏன் அழிய வேண்டும்? இக்கொடியவர்களால் ஒரு மன்பதையே கெடுதலால், அத்தீயவனின் சுற்றம், குலம் அனைத்தும் அழிந்து ஒழியும் என்று 'சாபம்' விடுகின்றதுபோல், கடிகின்றது, 'திருவள்ளுவம்.' இத்தகைய திருக்குறளையே ஒடித்தும், சிதைத்தும், மடித்தும் பதிப்பித்து வெளியிட்டுப் பணம் சேர்ப்பதும், ஒரு 'சமுதாயக் குற்றமே' எனில், மறுப்பாருண்டோ?

வ.உ.சி.யே சில பாட வேறுபாடுகளைப் புகுத்தவில்லையா என்று கேட்கின்றனர். அவரைச் 'செக்கிழுத்த செம்மல்', 'விடுதலைப் போராட்ட மறவர்' எனப் போற்றிய உலகம், அவர் செய்த குறட் குற்றங்களைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டது.

இரசிகமணி டி.கே.சி., கம்பனின் இராமாயணத்தில் பல திருத்தங்கள் செய்து, கம்பனே இப்படித்தான் பாடினான் எனத் தம் விருப்பத்திற்கேற்பப் புதிய டி.கே.சி இராமாயணம் வெளியிட்டார். பலர் அதனை ஏற்கவில்லை. எனினும், தமிழின் அழிவையே நோக்கமாகக் கொண்டு, செயற்படுகிறவர்கள் அவரை ஆதரித்தனர்; கண்டிக்க முன்வரவில்லை.

பாவேந்தர் பாரதிதாசன் தமது தமிழியக்கத்தில், இதனைக் கொடிய செயல் எனக் கண்டித்தார். இவ்வளவிற்கும் அன்று கம்பராமாயணத்தை எரிக்க வேண்டும் என்று போராடிய காலம், கதையை வைத்துக்கொண்டு கதைப்பவர்களைத் தாக்குவதற்குத் தயங்காத காலம்; பேரறிஞர் அண்ணா 'கம்பரசம்' என எழுதிய காலம். இந்தச் சூழ்நிலையில்தான், ஒரு தமிழ்ப் பெருங்காப்பியத்தை, அறிஞரெனப் பலரால் மதிக்கப்பட்ட ஒருவர் திருத்தியதைப் பாவேந்தரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இன்று திருக்குறள் மூலத்தைச் சிதைத்து அலங்கோலப் படுத்தும் 'அறிஞர்'களைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ ஒரு குரல் கூடக் கேட்கவில்லை.

இன்றைய தமிழறிஞர்கள் எல்லோரும் 'காக்கை' பிடிப்பவர்களாக மாறிவிட்டனர். எந்த நேரமும் யாருக்குப் பின்பாட்டுப் பாடினால், என்ன கிடைக்கும் என்பதிலேயே நாட்டமுடையவர்களாகத் தமிழறிஞர் பலர் தரம் தாழ்ந்து போயினர்.

சங்கப் புலவர்களிடம் பொன்னும், பட்டமும், பரிசும் தேடி வந்தன. வறுமையில் வாடியபோதும் அவர்கள், 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்' என்றனர்.

அரசர்களுக்கு இடித்துரை கூறி, அறிவுறுத்தி, நன்னெறிப்படுத்தும் ஆளுமையுடன் திகழ்ந்தனர். ஆனால், இன்றைய புலவர்களோ தமக்குத்தாமே சக்கரவர்த்திகள், மாமன்னர்கள் எனப் பட்டம் சூட்டிக் கொள்கின்றனர்.

தங்கள் வாழ்நாளில் கிடைக்கும் சில நன்மைகளுக்காகத் தமிழைக் கைவிட்டு விடுகின்றனர். அன்று அத்தகைய தீய செயல்களைச் செய்தவர்களைக் கடிந்ததோடு, அவற்றை எதிர்க்காத புலவர்களையே கூடுதலாகச் சாடினார் பாவேந்தர். அவர்கள் முகத்தில் அறைவதுபோல் பாடினார்.

கம்பனார் பதினோரா
யிரம்பாட்டில் முக்காலும்
கழித்துப் போட்டு
நம்பினால் நம்புங்கள்
இவைதாம் கம்பன் செய்யுள்
என அச்சிட்டு
வெம்புமாறு அளிக்கையிலும்
மேவாத செயலிதனைச்
செய்ய இந்தக்
கொம்பன்யார் எனக்கேட்க
ஆளில்லையா புலவர்
கூட்டந்தன்னில்?

என்று கேட்டார் பாவேந்தர். இன்று திருக்குறள் மூலத்தைச் சிதைப்பவர்களை, இந்தக் 'கொம்பன் யார்' எனக்கேட்க முன்வராதது மட்டுமன்றிப் பாராட்டவும் துணிகின்றனரே?

திருவள்ளுவர் புகழ் என்ற அதிகாரத்தைப் பாடியது, தப்பாகப் போயிற்று என்பது, பேரறிஞர் மு.வ. அவர்கள் கருத்து. இன்று முற்றும் துறந்தவர்களே 'புகழ்' போதையில் மிதக்கத் தொடங்கி விட்டனரே? பாவேந்தர் இன்று இருந்தால், நெளிவு சுளிவு கருதி, அந்த அந்த இடத்திற்குத் தகுந்தவாறு பேசி, வாழும் தமிழறிஞர்கள் என்போரை, என்ன சொல்லிப் பாடுவாரோ, யாம் அறியோம்.

திருக்குறளை ஓர் ஆங்கிலேயன் திருத்திக் கொண்டு வந்து, தமிழ்ப் பெருங்கோமகன் பாண்டித்துரைத் தேவரிடம் – நான்காம் சங்கம்

கண்ட ஆளுமை மிக்க நம் தலைமகனிடம், தான் செய்த 'அற்புதமான' செயலை விவரித்தான். தேவர் கோமான் வேறு எதுவும் பேசவில்லை. 'எத்தனை படிகள் அச்சிட்டீர்' என்றுதான் கேட்டார். அவன் கூறியபடி, அத்தனை படிகளையும் விலைக்கு வாங்கிக் கொண்டார். ஒரு குழி தோண்டச் சொல்லி, அத்தனை படிகளையும் அப்படியே போட்டு எரித்தார். பிறகு அந்த ஆங்கிலேயனிடம், 'இவ்வாறு திருக்குறளைத் திருத்துவது கூடாது' என அறிவுரை கூறி, அனுப்பி வைத்தார்.

அன்று வள்ளல்களிடம் இருந்த மான உணர்வுகூட, இன்று புலவர்களிடம் காணப்படாது போயினமை நமது தீயூழேயாகும்.

தமிழறிஞன் என்பவன் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். உண்மையை அஞ்சாது சொல்ல வேண்டும். இடத்திற்குத் தகுந்தவாறு பேசும் நழுவலும் வழுவலும் தவிர்க்கப்பட வேண்டும். நமக்குப் பட்டமும் பரிசும் கிடைக்காதே என்று, பின்வாங்கக் கூடாது. அறிவுரை கூறுமிடத்தில் இருக்க வேண்டும்.

அன்று ஒரு மாணவனிடம் – மழலை வகுப்பில் படிப்பவனிடம் Sixty Seven என்றால் என்ன என்று கேட்டேன். அமெரிக்காவில் இருந்து வந்த அச்சிறுவன், 'அறுபத்தேழு' என்றான்; நம் ஊரில் எட்டாயிரம் ரூபாய் கொடுத்து, மெட்ரிக் பள்ளியில் சேர்க்கப்பட்டு, இரண்டாம் வகுப்புப்படிக்கும் சிறுமியால் விடை கூறமுடியவில்லை. அச்சிறுமியின் தாய், 'முதல் வகுப்பில் என் மகளுக்குத் தமிழில் பத்து வரை தெரியும்; இப்போது இரண்டாம் வகுப்பில் இருபது வரை சொல்லி விடுவாள்; நீங்கள் கேட்பது அறுபதுக்கு மேலிருப்பதால், இவளுக்கு அது தெரியாது' என விளக்கினார்!

இவ்வாறு தமிழகத்தில் பல கோடிப் பிள்ளைகள் தமிழ் எழுத்துத் தெரியாமல், எண் தெரியாமல், சொல் தெரியாமல், நிறப்பெயர் – காய்கறிப் பெயர் – சுற்றுச்சூழல் பெயர் – உறவுப் பெயர் எதுவும் தெரியாமல் வளருகின்றனர்.

இவர்கள் பெற்றவர்களாக வளரும் தலைமுறையில், தமிழ் என்ன ஆகும்? இன்று இருப்பவர்கள், ஆள்பவர்கள் செத்தொழிந்த பிற்பாடு – என்னையுட்பட நாம் மறைந்த பிற்பாடு, தமிழ் கலப்பட மொழியாகுமா?

'சீரிளமைத் திறம் சிதைந்து அழிந்து ஒழிந்து' போகுமா? கடந்த 40 ஆண்டுகளாக இந்த 'முள்மரம்' வளர்ந்து காடாகி விட்டது. இதுதான் 'மக்கள் விருப்பம்' என்று நீதிமன்றம் சொன்னாலும், அரசே கூறினாலும் அது தவறுதானே?

மதுரை, புரட்சிக் கவிஞர் மன்றம் – (11–2–2007)

# 5. தமிழர் திருமறையைச் சிதைப்பது அறமாகுமா?

**பழம் பண்டிதர்களும் புதுப் பேரறிவாளர்களும்**

திருக்குறள் போலும் செவ்வியற் காலச் சிறப்புமிகு நூலைச் சிதைக்காதீர் என்றால், 'பழம் பண்டிதர்கள் புதுமையை வரவேற்க மாட்டார்கள்' என்பதே பலருடைய புலம்பலும் ஒப்பாரியுமாகும்.

தமிழைச் சிதைக்கும் தமிழ் மொழியறிவில்லாதார், இப்படிப் பாடித் தாம் பேரறிவாளர் எனக் காட்டிக்கொண்டு விடலாம் என நம்புகின்றனர். ஒரு சிற்பிக்குத் தான் பயன்படுத்தும் கல் பற்றிய அறிவு முதல், கருவிகளைப் பற்றிய அறிவும், கையாளும் திறனும் வேண்டும். எந்தத் தொழிலாயினும் அத்தொழில் பற்றிய அறிவும் திறனும் முன்னதாக வளர்த்துக் கொள்ளப்பட வேண்டும். ஆனால், தமிழில் எழுதுவோர் மட்டும் மொழி பற்றிய சிறிதளவு அறிவு பற்றிக் கூடக் கவலைப்படக் கூடாது; கருத்திற் கொள்ளவும் கூடாது என்று முழங்குகின்றனர்.

ஏனெனில், இவர்கள் பிறவியிலேயே கவிஞராக, எழுத்தாளராக, படைப்பாளியாகப் பிறந்து விட்டவர்கள். அதில் செம்பாதி உண்மையே; ஆயினும், மறுபாதிப் புலமையும் அமையப் பெற்றால்தான் முழுமை பெற முடியும். ஆங்கிலத்தில் இதில் அக்கறை இருப்பதை அவர்களின் நூல்கள், படைப்புகள் வழி அறிவதால், பிறமொழி சார்ந்த ஆங்கிலங் கற்றவர்களும் அவ்வடிப்படை மரபுகளை மீறுவதில்லை.

தமிழில் மட்டும்தான் இந்த நகையாடல். யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் மொழிச் செப்பத்தைச் சிதைக்கலாம். இன்றேல், தொடங்கிவிடும் 'பழம் பண்டிதர்கள்' பாட்டு. இவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இது ஒரு கருவியாகிவிட்டது.

**வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை**
**உடையம்யாம் என்னும் செருக்கு (844)**

அறிவின்மை என்பது எது தெரியுமா? 'நான்தான் அறிவுடையவன்' என எண்ணும் செருக்கு, ஆணவம்.

வ.S.

**திருக்குறள் கட்டமைப்பு**

தொல்காப்பியர் தம் முதல் நூற்பாவில்,

எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப --------- என்றார்.

திருவள்ளுவர், 'அகர முதல' என்று தொடங்கி, 'கூடி முயங்கப்பெறின்' என்று முடித்தார். தமிழ் நெடுங்கணக்கின்படி 'அ'வில் தொடங்கி, 'ன'கர மெய்யில் ஏன் முடிக்க வேண்டும்?

திருவள்ளுவரே தமது நூலை, ஒரு கட்டமைப்புடன் எழுத எண்ணினார்; இன்றுள்ளது அவரமைத்த கட்டமைப்பே என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

> "அதிகாரப் பகுப்புச் செய்தவர் வள்ளுவரே; அதிகாரப் பெயர்களிலும் அவற்றின் அடைவிலும் பெரும் மாறுதலின்றி எல்லா உரைகாரர்களும் ஒரு படித்தாகக் கொண்டிருப்பதனால், இவை ஆசிரியரால் தரப்பட்டவை என்று துணிய இடமுண்டு."
>
> "கவிக் கூற்றாகிய அதிகாரத்து எனப் பரிமேலழகர் சொல்லும் உரைக் குறிப்பினால், அதிகாரப் பெயர்கள் எல்லாம் ஆசிரியர் திருவள்ளுவரால் இடப்பெற்றவை என்பது நன்கு தெளிவாம்."

**மு. சண்முகம்பிள்ளை**, திருக்குறள்
அமைப்பும் முறையும், சென்னைப்
பல்கலைக் கழகம், 1972
பக். 20, 21.

"இவ்வகையான இடைச்செருகல்கள் எதுவும் குறளில் நேர இடமில்லாதபடி அதிகாரத்திற்குப் பத்தாக ஆசிரியர் திருவள்ளுவரே பாடல்களை அமைத்துச் சென்றுவிட்டார். அதோடு உரைகாரர் பலர் திருக்குறளைப் போற்றி உரை வரைந்தமையும், ஏனைய புலவர்களும் இந்நூலை மதித்துப் போற்றியமையும், ஓரளவு இந்நூல் பெருஞ்சிதைவிலிருந்து தப்ப ஏதுவாயின எனலாம்."

மு. சண்முகம் பிள்ளை தமது 'திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்' எனும் நூலில், 'குறள் நூலின் நிலைபேறு' எனும் தலைப்பில் எழுதியிருப்பன கருதற்பாலன. திருக்குறளில் தோய்ந்த

புலமையுடைய அவர், தம் நூலை முடிக்கும்பொழுது, முன்னையவற்றையெல்லாம் ஒப்பு நோக்கி,

"எல்லாரும் ஒருப்படும் வகையில் ஒரு மூலபாடப் பதிப்பை அறிஞர் குழாம் கொண்டுவரும் காலமும் இனி நேரலாம். இனிமேலும் குறளில் பாடவேறுபாடுகள் நிகழவிடக் கூடாதல்லவா?"

என்று ஒரு கேள்வியுடன் நிறுத்தியுள்ளார். இதையே நாம் மீண்டும் வற்புறுத்துகிறோம். தமிழக அரசு மௌனம் சாதிப்பது, இச்சிதைவுகளுக்குச் சம்மதம் தெரிவிப்பதுபோல் ஆகிவிடாதா?

## திருவள்ளுவர் 'மேசைச் சிந்தனையாளியா'?

"திருவள்ளுவர் தம் திருவள்ளுவத்தை உருவாக்கிய போது மக்களிடம் பழகி நடை முறைச்சிக்கல்களை நேரில் கவனித்துத் தம் நூலுள் தெரிவித்தவராகத் தோன்றவில்லை. ஊன்றிக் கவனித்து உரிய தீர்வுகளைத் தொலைவில் இருந்து சொல்லும் ஒரு சிறந்த மேசைச் சிந்தனையாளியாகவே திருவள்ளுவர் தோன்றுகிறார்."

(க.ப. அறவாணன், திருவள்ளுவம், 2006.பக்.10)

உமா சங்கர் ஜோஷி – என்ற பெரியவர், காந்தியடிகளின் அடியொற்றி வாழ்ந்தவர். நீண்ட நெடிய தோற்றம்; தாள் தொடு தடக்கை எனப் பெருந்திருவுருவுடைய சான்றோர். சாகித்திய அகாதெமியில், ஆண்டுதோறும் நடைபெறும் 'சம்வத்சர லெக்சர்' (ஆய்வுச் சிறப்புப் பொழிவு), என்ற நிகழ்வில், மூன்றுநாள் சொற்பொழிந்தார். தலைப்பு ; "இந்திய இலக்கியம் என்ற கருத்தாக்கம்" (The Idea of Indian Literature). புதுதில்லி, அக்காதெமிக் கட்டிடம் – இரவீந்திர பவன் – சுமார் நூறு பேர் அமர்ந்து கேட்கக் கூடிய குளிர்மை அரங்கம். நானும் தீபம் பார்த்தசாரதியும் உடனிருந்து, அவரது ஆங்கிலப் பொழிவைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்திய இலக்கியத்தில் தமிழிலுள்ள தொல்காப்பியம் தொட்டு அனைத்தையும் பற்றி அவர் தொட்டுத் துலக்கிப் பேசியது வியப்பை அளித்தது. (அப்பேச்சை அக்காதெமி சிறு நூலாக வெளியிட்டுள்ளது.)

அவர் தம் பேச்சினிடையே திருக்குறளின் சிறப்பைச் சுட்டி, மூன்று குறள்களின் ஆங்கில ஆக்கத்தை நிறுத்திப் படித்தார். ஒவ்வொரு குறளின் முடிவிலும், அனைவரும் கையொலி எழுப்பி, ஆரவாரித்தனர். எங்கள் இருவரைத் தவிர அனைவரும் பிறமொழியாளர்கள். நம்மைவிடக் கவிதைகளைச் சுவைத்து ஆரவாரிக்கும் இயல்புடையவர்கள். அவர் கூறிய குறள்களை நீங்களும் எண்ணிப் பாருங்கள்.

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது (1041)

உங்களைச் சில நாள்களுக்கு அன்னந்தண்ணீரில்லாமல் விட்டால்தான், இக்குறளின் பொருள் முழுமையாய் விளங்கும். பசித்துத் துடிக்கும் வறுமையைவிடக் கொடியது யாதென்றால், அவ்வறுமையாம் வறுமையே இன்னாதது. பிறவற்றுக்கெல்லாம் உவமை சொல்லியவருக்கு, இதற்கு உவமை கிடைக்கவில்லை.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் (1073)

தேவர்களைப் பற்றிய கற்பனை என்ன? அங்குக் கற்பக மரம், காமதேனு எல்லாமிருப்பதால், நினைத்தன எல்லாம் நினைத்தவுடன் கிடைக்கும். எனவே, அவர்கள் தாம்தாம் நினைத்தபடி வாழலாம். இவ்வுலகில் வாழும் கயவர்களும் அவ்வாறு வாழ்வதால், இவர்களை அத்தேவர்களைப் போன்றவர்கள் எனலாம். (அவையில் எழுந்தது சிரிப்பொலி) இஃது எவ்வளவு நடைமுறைத் திருக்குறள் என்பதைத் தாம் நினைத்தபடி திருக்குறளைத் திருத்துபவர்கள் எண்ணிப் பார்க்கலாம்.

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல் (839)

அறிவிலிகளோடு நட்புக்கொள்வது மிகமிக இனிது; ஏனெனில், அவர்களைப் பிரிய நேரும்பொழுது, எவ்விதத் துன்பமும் ஏற்படுவதில்லை. (இதைக் கேட்டதும் எழுந்த சிரிப்பும் ஒலிப்பும் சில மணித்துளிகள் நீடித்தது.) இருபத்து இரண்டு இந்தியப் பிறமொழியாளர்களுக்கும் திருவள்ளுவர் மக்களிடம் பழகியறியாதவர்; நடைமுறைச் சிக்கல்களை நேரில் கவனித்தறியாதவர்; தொலைவிலிருந்தே எழுதிவிட்டுப் போன ஒரு 'மேசைச் சிந்தனையாளி' என்று தோன்றாமல் போனது, அவர்கள் தமிழர்களாகப் பிறக்காததனாலேயே என எண்ணலாம்.

## தீக்குறளா? திருக்குறளா?

க.ப. அறவாணன் சிறந்த பல நூல்களை எழுதியவர். தொல்காப்பியம், நன்னூல் பற்றிய நூல்களில் அவரும் தாயம்மாள் அறவாணனும் எழுதிய புள்ளி விவர ஆய்வுகளை, யான் மேற்கோள் காட்டியுள்ளேன். அவர் இந்நூலை ஐந்தாண்டு உழைத்து, அரிய நூலாகத் தந்துள்ளமை, நடுவு நிலையுள்ள ஆய்வுரையாக மட்டும் இருந்திருந்தால்

பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் சிதைத்ததுடன், அதிலும் சறுக்கியுள்ளார்.

"ஆண்டாள் 'தீக்குறளை' எனத் திருப்பாவையில் பாடியிருப்பது, திருக்குறளையே; திருக்குறளை ஓதுதல் கூடாது. இதுவே காஞ்சி சங்கராசாரியார் கருத்து. அதுவே சரி." இவ்வாறு திரும்பத்திரும்ப எழுதியுள்ளார்.

ஆழ்வார்களுக்கு எங்கும் திருக்குறள் மறுப்புச் சிந்தனை இல்லை. மாறாகத் திருக்குறள் சொல், தொடர், கருத்தை எடுத்தாண்டுள்ளனர். திருப்பாவை, நோன்புச் சடங்கு பற்றியது.

தீக்குறளை என்னாமல் திருக்குறளை என்றே பாடி இருக்க வாய்ப்புண்டு. குறளை ஒரு சொல். புறம் கூறல், பொய்பேசல் என்பது பொருள். இன்று 'குறளி' பேசுவதாகக் கூறுவர். பெரியாழ்வாரும் ஆண்டாளும் உலக வழக்குச் சொற்களைப் பயன்படுத்தக் காணலாம். 'அச்சோ அச்சோ', அப்பூச்சி காட்டுதல், இவ்வாறு இருவர் பாடல்களிலும் நிரம்பக் காட்டலாம். பிறரிடம் செவிக்குள் பொய்யை மறைவாகக் குரலைத் தாழ்த்திச் சொன்னால், 'என்னடா, ஓதுகிறாய்!' என்பர். 'அங்கே போய் ஏதாவது ஓதியிருப்பான்' என்பர். ஒரே சொல் இப்படித் தாழ்வான பொருளிலும் வழங்குவது, தமிழில் காணப்படுவதே. 'சென்று ஓதோம்' என்பதைக் கருதுக. 'உய்த்து உரைத்தலான்' (1076) என்ற குறள் நடையை ஒத்தது இது. அதாவது ஒருவர் கேளாதே, இவனே போய் வலிய ஓதுவது இது. திருக்குறளைக் கருதியிருந்தால் 'சென்று ஓதோம்' என வந்திராது.

நெய் உண்ணோம் பால்உண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்று ஓதோம்.

இப்பாடலின் கருத்துச் சூழற்படி (Context), பொய் கூறோம் என்னும் பொருளே பொருந்தும். குறளைக் கருதியிருந்தால், 'குறளைச் சென்றோதோம்' என 'ச்' ஒற்று வரவேண்டும். எந்தப் பதிப்பிலும் 'ச்' ஒற்று இல்லை. அறவாணர் 'ச்' ஒற்றுப்போட்டிருப்பது, எந்தப் பதிப்பு என்று தெரியவில்லை.

இன்றைய நர்சரிப் பள்ளிகளாலும் மெட்ரிக் பள்ளிகளாலும் தமிழ் மொழி, இன்னும் இரண்டு தலைமுறைக்குப் பிறகு அழியக் கூடிய நிலையில், இன்று வேர் பட்டுக்கொண்டு வருகிறது. வடமொழி போல், செத்தொழிந்த செவ்வியலாகிவிடும். தொலைநோக்குடையார் இதை உணர்வர். பிறகு திருக்குறளும் சிதைவதால் யாருக்கு, என்ன கவலை?

# 6. எந்தத் திருக்குறளை இந்தியத் தேசிய நூலாக்குவது?

திருக்குறளை இந்தியத் தேசிய நூலாக்கவேண்டும் என்று போராடி வருகின்றோம். ஏனெனில், இந்திய நூல்களிலேயே, சமயம் சாராது – சாதிவருணம் பேசாது – இந்தியப் பண்பாட்டைப் 'பொதுமை' நோக்கில் யாவரும் பின்பற்றக் கூடியதும் உலகிற்குப் பெருமையோடு அறிவிக்கக் கூடியதும் திருக்குறள் ஒன்றே என்று, பற்பல சான்றுகளுடன் நாம் வாதாடி வரும் காலம் இது.

இச்சூழலில் நமக்குள்ளேயே ஒரு குழப்பம் தோன்றிக் காட்டுத்தீ எனப் பரவத்தொடங்கிவிட்டது. திருக்குறளைப் பொதுநூல், பொதுமறை எனப்பறை சாற்றுவது தவறு; பொதுமைப் பண்புள்ள திருமறை – தமிழ்மறை எனல் வேண்டும் என்று வ.சுப. மாணிக்கம், தமது 'வள்ளுவம்' எனும் நூலில் கூறுகின்றார். நாட்டில் பொது இடம், பொது மடம், பொது நூலகம் என எதுவாயினும், அவை மக்களால் படுத்தப்படும் பாடு நாம் அறிந்ததே. திருக்குறளும் இத்தவறான பார்வையால் படும் பாடு பெரிது.

திருவள்ளுவர் ஒன்றேமுக்காலடியில் எழுதி, நினைவில் தங்கும்படியான யாப்பு வடிவில் – அதற்கேற்ற உத்தித்திறன்களுடன் எழுதினார். ஒரு சட்டப் புத்தகம் போன்ற அதனைப் பலரும் 1330 குறளையும் எண்மாறாது ஒப்பிப்பதற்கும் எந்தஇடம் எந்த எண் எனச் சொன்னதும், அந்தக் குறளை உடனே சொல்வதற்கும் அவரவர் நினைவாற்றல் திறன் மட்டுமன்றித் திருக்குறலின் கட்டமைப்பும் செம்பாதி காரணமாகும்.

திருவள்ளுவர், 'நவில் தொறும் நூல்நயம் போலும்' என நட்புக்குச் சொன்னதுபோல், திருக்குறளும் புதுப்புதுச் சிந்தனைக்கு வழிவகுக்கின்றது. 'மறை' என்றால் – உட்பொருள் பலவும் பூமியிற் சுரங்கக் கனிமம் போலப் பொதிந்து, மறைந்துகிடப்பது. அதைக் தேடிக் கண்டுகொள்ளும் உத்திக்கு வழிவகுத்துவிட்டார் திருவள்ளுவர். இதனால் முன்னரும் பல உரைகள் தோன்றின; இன்றும் பல உரைகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

அடுத்ததாகத் திருக்குறள் ஒரு சமயநூலாக இல்லாததால், அதைப் பற்றிக் கடுமையான விமரிசனங்கள் சொல்லப் படுகின்றன.

திருவிவிலியத்தையோ, திருக்குரானையோ, பகவத் கீதையையோ, திருத்தியும் சிதைத்தும் சென்னை 'பஷையில்' உரை எழுதியும் இவ்வாறு தத்தமக்குத் தோன்றியவாறு கண்டபடி இழிவுபடுத்தினால், இவர்களை மக்கள் சும்மா விடுவார்களா? அவ்வச் சமயம் சார்ந்தவர்கள் தடியெடுத்துக் கொண்டு புறப்பட்டு விடுவார்கள் என்ற அச்சம் இவர்ளை எச்சரிக்கும். திருக்குறள் ஒரு சமயம் சாராதது என்பதாலேயே அதைச் சிதைக்க, சீரழிக்க, கேலிகிண்டல் செய்து நகையாட நினைக்கலாமா? அப்படி நினைப்பவர்களையும் எழுதுபவர்களையும் நாம் கண்டிக்காது விட்டுவைக்கலாமா?

'உரை எழுதுவதுகூட, ஒரு 'தொற்றுநோய்' போல மாறலாமா? திருக்குறளுக்கு உரையெழுதுபவனுக்கும் திறனாய்பவனுக்கும் தொல்காப்பியம், சங்க இலக்கியம் போலும் பழந்தமிழ் நூலறிவும், தமிழ்ப் பண்பாடு, மானுட உளவியல் போலும் பலதுறை அறிவும் வேண்டும் — ஆனால், இன்று அந்த நிலை இல்லை. இஃது அவரவர் உரிமையாகிவிட்டது.

பேரா. மு.வ. அவர்கள், ஒரு புது முறையில், திருக்குறளைப் பரப்பும் நோக்குடன் குறளும், குறளுக்கு நேரே சிறு தெளிவுரையும் என எழுதினார்கள். அந்நூல் பல நூறாயிரம் படிகளாகப் பரவியதுடன், இன்று அதனைப்போல ஓராயிரம் சிறு தெளிவுரை, கருத்துரைப் பதிப்புகள் வந்திருக்கக் கூடும். அஃதாவது ஒருவரைப் பின்பற்றி ஒருவர், ஒருவரைப் பார்த்து ஒருவர் என எழுதுவது தமிழரிடையே வழக்கமாகி விட்டது.

இந்நிலையில் 'திருக்குறள் மரபுவழி மூலபாட நூல்' பற்றிச் சிந்திக்கவேண்டும். இன்றேல், சிலர் செய்யும் தவறும் இதுபோல பரவிவிடும். திருக்குறள் ஆய்வாகத் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' (மு.வ.) திருவள்ளுவர் கண்ட நாடும் வீடும், திருவள்ளுவரின் தத்துவக் கோட்பாடு என வரும் நூல்கள் பற்றி இங்குக் குழப்புவது தவறு. இங்குச் சிந்திக்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான்.

திருக்குறள்
உரையுடன்
சோமன் சுப்பையா
திருக்குறள்
செம்பதிப்பு
ஆமாம்சாமி

என்று இவ்வாறு போட்டுக் கொண்டு, உள்ளே பழைய மரபு வழி மூலபாடக் கட்டமைப்பைத் தமக்குத் தோன்றியவாறு மாற்றலாமா என்பதுதான்.

கு.ச. ஆனந்தன், 'திருக்குறளின் உண்மைப் பொருள்' என்று தலைப்பிட்டுக் கொண்டு, ஓர் ஆய்வுநூல்போல் எழுதி, ஒருவித மயக்கத்திற்கு இடம் தந்துவிட்டார். அவர் தம் விருப்பத்திற்கு ஏற்ப மூல பாட நூலைப் புதிய ஐந்து இயல்களாகப் பகுத்து, உள்ளே குறளெண்களை மாற்றிப் பரிமேலழகர் குறள் எண் இது; உண்மைப் பொருள் வரிசை எண் இது எனத் தந்திருப்பது, இருவகை எண்வரிசையால் எதிர் காலத்தில் குழப்பத்தையே விளைவிக்கும். அவர் வரிசைப்படி 'அகரமுதல' என்ற முதற்குறள், 1080 ஆம் குறளாகிறது. ஏதோ புத்தகத் தலைப்பால், தப்பிக்கும்படியுள்ள அந்நூல், மிகவும் கண்டிக்கத் தக்கதாகும்.

திருவள்ளுவம் – எனும் பெயரால் க.ப. அறவாணனும் அதே செயலை அதே முறையில் மேற்கொண்டுள்ளார். இவர் தம் விருப்பப்படி 14 இயல்களாகப் பகுத்து அதிகார வரிசை, குறள் வரிசை யாவற்றையும் மாற்றியுள்ளார். இவருடைய நூலில், 'அகர முதல' என்பது, 1041ஆம் குறளாகும். இவரும் ஆனந்தனைப் போலவே பரிமேலழகர் குறள் எண், அறவாணர் குறள் எண் என 1330 குறளுக்கும் வரிசை நிரல் தந்துள்ளார். (அகரமுதல – பரிமேல். எண் 1; ஆனந்தன் 1080; அறம். 1041)

இப்போது எந்தக் குறள் எந்த எண் என்பதில், இவர்கள் இருவருமே வேறுபடுகின்றனர். 'திருக்குறள் என்று கொட்டையெழுத்தில் போட்டு, மாதவன் என்பவர் என்னிடம் ஒரு நூல் தந்தார். 'முப் பாலையும் கலந்து போட்டுள்ளேன்; படித்துப்பாருங்கள்' என்றார். அதில் ஒவ்வொரு பக்கத்திலும் அறத்துப்பாலில் ஒருகுறள் பொருட்பாலில் ஒரு குறள், காமத்துப் பாலில் ஒரு குறள் என உள்ளது. நூல் முழுவதும் இவ்வாறுளது. மூன்று பாலையும் சரி சமமாகக் கலக்க முடியாததால், அவர் தமக்குத் தோன்றியவாறு கலந்துள்ளார்.

அ.மா. சாமி, 'என்னுடைய முயற்சி இதற்கு முதற்படியாக இருக்குமென நம்புகிறேன்' என எழுதியிருப்பது முழு உண்மையாகும். அவருடைய செம்பதிப்பில் அவர், திருவள்ளுவரே தாம் திருத்தியதுபோல்தான் எழுதினார் என அறுதியிட்டுக் கூறுகிறார். இப்போது கீழ்க்கண்டவை சிந்திக்கற்பாலன.

1. எத்தனையோ நூற்றாண்டுகளாக வாய் மொழியாகவே உரைக்கப்பட்டும், பிறகு ஓலைகளில் பல நூற்றாண்டுகள் ஒருவர் ஏட்டை ஒருவர் பார்த்து

எழுதியும் வந்த இப் பழந்தமிழ் நூல்களில், 'பாட வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன என்பது பெரும் சிதைவன்று. 'மிகலே' என்பதை 'மிகவே' என்பது போலவோ 'ஆகலான்' என்பதை ஆதலான் என்பது போலவோ எழுதிவிடுவதுண்டு. இவை தவிர்க்க வேண்டியன; தவிர்க்கக் கூடியன.

பழைய உரையாசிரியர்கள் பதின்மர் என ஒரு குறிப்புக் கிடைத்துளது. அவற்றுள் மணக்குடவர் முதல் உரையாசிரியர் என்றும், பரிமேலழகர் பத்தாம் உரையாசிரியர் என்றும் அறியப் பெற்றது. இவர்களுள் பரிமேலழகர் மூலபாடம் பழைய பத்து உரைகளையும் ஒட்டியதே. அவர் பின்பற்றிய முறையையே, கடந்த நூறு ஆண்டுகளாக எல்லோரும் பின்பற்றி வருகிறோம். அவருடைய உரையில், கருத்து வேறுபடுபவர்களும், மூலத்தை மாற்றவில்லை.

2. அச்சு வடிவம் கிடைத்த பிற்பாடு, மூலபாடம் நிலை பெற்றது என்றே கூறலாம்.

3. வ.உ.சி. சில மாற்றம் செய்யவில்லையா — என்று கேட்பது தவறு. அவரைச் செக்கிழுத்த செம்மல், விடுதலைப் போராட்ட வீரர் எனப் போற்றுகிறோமே தவிர, அவர் செய்த திருக்குறள் மாற்றத்தை யாரும் ஏற்கவில்லை.

4. அச்சு வடிவம் ஏறும் முன் ஏற்பட்டவை எளிதிற்களையக் கூடியவை. இப்போது இவர்கள் செய்வன கையைக் காலை வெட்டி, இடம் மாற்றி ஒட்டுவன போன்றவை. திருக்குறளின் மூல வடிவத்தையே சிதைப்பன.

மதுரையிலிருந்த ஸ்காட் எனும் பாதிரியார் சுகாத்தியர் எனும் தமிழ்ப் பெயருடன், திருக்குறளைத் திருத்தி அச்சிட்டாராம். அதனைப் பார்த்த பாண்டித்துரைத் தேவர், அவர்பால் சீற்றங் கொண்டு, அவர் வெளியிட்ட நூற்படிகள் அனைத்தையும் தீயிலிட்டுக் கொளுத்திவிட்டார். இன்று அதுபோலத் தமிழையும் திருக்குறளையும் காக்கவேண்டிய பொறுப்பு, ஆள்வோருடையது அல்லவா?

இரசிகமணி டி.கே.சி., கம்பராமாயணத்தைத் திருத்தி வெளியிட்ட காலத்தில், பாவேந்தர் பாரதிதாசன் கொதித்து எழுந்தார்.

கம்பனார் பதினோரா
யிரம்பாட்டில் முக்காலும்
கழித்துப் போட்டு
நம்பினால் நம்புங்கள்
இவைதாம் கம்பன் செய்யுள்
என அச்சிட்டு
வெம்புமாறு அளிக்கையிலும்
மேவாத செயலிதனைச்
செய்ய இந்தக்
கொம்பன்யார் எனக் கேட்க
ஆளில்லையா புலவர்
கூட்டந் தன்னில்? (தமிழியக்கம்)

இன்றும் தமிழுணர்வாளர்களிடம், இதைத்தான் நாம் கேட்க விரும்புகிறோம்.

5. முன்பு அவர் சிதைக்கவில்லையா? இவர் மாற்றவில்லையா? என்று கேட்பது தவறு. ஒருவர் காமத்துப் பாலைத் திருவள்ளுவர் பாடவில்லை என்று கூறுவதோ, ஒருவரது விளக்க நூலில், இன்பத்துப் பால் என எழுதியிருப்பதோ இங்குக் கேள்விஇல்லை. ''நம்பினால் நம்புங்கள்'' என்று ''இதுதான் திருக்குறள் – செம்பதிப்பு'' என்பது போல, உருமாற்றிச் சிதைப்பன அனைத்தையுமே கண்டிக்க வேண்டும்என்று கூறுகிறோம். பெரியவர்களே இப்படிச் செய்யும்போது, நாமும் செய்தால் என்ன என்று பலருக்கும் தூண்டுணர்வும் நெஞ்சழுத்தமும் ஏற்பட்டுவிடும். இன்று ஆயிரக் கணக்கான உரைகள் தோன்றுவனபோலத் திருக்குறள் மூலபாடச் சிதைவுநூல்கள் பெருகிப் பல்கிவிட வாய்ப்புளது.

முன்பு குறையிருக்கிறது; முன்பும் பலர் சிற்சில மாறுதல்கள் செய்துள்ளார்களென்றால், அவற்றை நீக்கி, மேன்மை நோக்கிய செம்பதிப்புக் கொண்டுவருவதன்றோ நேர்மை? முன்பு பலர் செய்யவில்லையா என்று கேட்பது, பின் வருவோர் இவர்களைக் காட்டிச் சிதைவைப் பெருக்க வழிசொல்வதுபோல உளது.

தமிழக அரசு உடனடியாக, ஒரு புலவர்குழுவை அமைத்துத் தக்கதொரு செம்பதிப்பை வெளியிட்டு, இனியாரும் திருக்குறள் மூலபாட அமைப்பைச் சிதைக்கக் கூடாது எனத் தடை செய்வதே இன்றியமையாக் கடமையாகும். இன்றேல், 'எந்தத்திருக்குறளை இந்தியத் தேசிய நூலாக்குவது? – என எதிர்த்துக் கேள்வி எழுப்ப நாமே இடந்தந்ததாகிவிடும்.

# 7. கீதை நம் வழிகாட்டி நூலாகுமா?

தமிழர்களாகிய நாங்கள் கீதையை எங்கள் வழிகாட்டி நூலாகவோ, வாழ்வுநெறி நூலாகவோ ஒருநாளும் ஏற்கமாட்டோம். அதில் எங்களை வழிவழி, கொத்தடிமைகளாக்கும் செய்திகளே கூறப்பட்டுள்ளன. அவற்றை எங்கள் அடிமனத்திலிருந்து வெறுக்கிறோம். அறியாமையால், கீதையைத் தங்களுக்குரிய நூல்போலும் என்று நம்புகின்ற, நம்பவைக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு, அந்நூலால் இன்றளவும் நாங்கள் அடைந்துள்ள தீமைகளையும் அடிமைத்தனங்களையும் எங்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். இது எங்கள் கருத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை – மேலும் இது எங்கள் பிறப்புரிமை.

கீதை யாருக்காகக் கூறப்பட்டதோ, யாருக்கு நன்மைதரச் செய்யப்பட்டதோ அவர்கள் அதைப் போற்றட்டும். அத்தீமையினின்றும் விடுதலை பெற எங்கள் மக்களுக்கு, அறிவு விளக்கம் தர நாங்கள் எடுத்துரைப்பன, அந்'நூலுக்கோ' – அதன் நன்மை அடைபவர்களுக்கோ எதிரானதல்ல. அந்நூலும் அதை நம்புகிறவர்களும் என்றென்றும் இருப்பார்கள். தங்கள் சுய இலாபத்தை தன்னலத்தை எவர்தான் கைவிடுவர்? அதற்காக எங்கள் வழியில் நாங்கள் செல்வதை வெறுத்தலாகாது; தடுத்தலாகாது.

திருக்குறளே உலகப் பொதுமறை; இந்தியத் தேசிய நூலாகும் தகுதி திருக்குறளுக்கே உண்டு. திருக்குறள் தேசிய நூலானால்தான் இந்தியா சிறப்படையும்; உலகில் தலை நிமிர்ந்து வாழும். இவை எங்கள் நம்பிக்கை. இதை இந்திய நாட்டு நாகரிகப் பண்பாட்டுக்குப் பெரும் பங்காற்றிய, தமிழினத்தவராகிய நாங்கள் சொல்வது, இப் பாரத நாட்டின் நன்மை கருதியேயாகும்.

இங்குக் கீதையை நாங்கள் ஏன் ஏற்க மறுக்கிறோம் என்று காரணங்கள் தொடர்புபடத் தரப்படுகின்றன. இது கீதை – மகாகவி பாரதியார் மொழிபெயர்ப்பு, கோரக்பூர் 'ஸ்ரீமத் பகவத்கீதா' நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்களைத் தருகிறது.

சிந்தனைச் செம்மல் தலைவர் வீரமணியின், 'கீதையின் மறுபக்கம்' எனும் நூல் வெளியீடு, அறிமுக விழாக்களில் மதுரையிலும் சென்னையிலும் நான் கலந்துகொண்டேன். சென்னை, அண்ணாமலை மன்றத்தில், நாவலர் நெடுஞ்செழியன் தலைமையேற்று ஆற்றிய ஏறத்தாழ இரண்டுமணி நேர உரையை, ஒலிப்பேழைப் பதிவிருந்தால், இன்றைய ஆளும் கட்சியினரும், ஆர்த்தெழும் காகிதப் புலிகளும், போட்டுக் கேட்க வேண்டும். இச் சிறுகட்டுரையில், கோரக்பூர் கீதைப் பதிப்பை அடிப்படையாக வைத்துக் கீதையில் வரும் பகுதிகள் தொகுத்துத் தரப்பெறுகின்றன. இடையிடையே தொடர்புடைய மேற்கோள்களும் உள்ளன.

கீதை உயர்ந்த 'ரஹஸ்யங்கள்' பொதிந்த நூல்.
இதில் எல்லா வேதங்களின் ஸாரமும் திரட்டிக்
கொடுக்கப்பட்டிருக்கிறது. (கோரக்பூர். பக். 13)

"உனக்குக் கூறப்பட்ட இந்த ரஹஸ்யமான
கீதோபதேசத்தை ஒரு போதும் தவம்
இல்லாதவனுக்குச் சொல்லக் கூடாது. பக்தி
இல்லாதவனுக்கும் சொல்லக் கூடாது. கேட்க
விரும்பாதவனுக்கும் சொல்லக் கூடாது. எவன்
என்னிடம் குறை காண்கிறானோ, அவனுக்கு ஒரு
பொழுதும் சொல்லக் கூடாது! (பக். 1008)

கண்ணை மூடிக்கொண்டு நம்ப வேண்டும் என்கிறார் பரந்தாமன் (பக் 1013). எங்களையும் நம்பச் சொல்பவர்களுக்கு, நாங்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு' (423)

என்னும் அறிவுடைமை வழிச்செல்லும் நாங்கள், கீதையை ஏற்க இயலாது. எனவே, எங்களுக்கு எந்த மாமடங்களும் கீதோபதேசம் செய்ய வேண்டாம். எங்கள் மக்கள் விழிப்படைந்து வருகிறார்கள்.

தமிழர்கள் மட்டுமன்றி, தாழ்த்தப்பட்ட, அழுத்தப்பட்ட, இழிவுபடுத்தப்பட்ட இந்திய மக்கள் அனைவரும் வெறுத்து ஒதுக்கித் 'தூ' வென்று வெறுக்கக் கூடிய அளவு வாசகங்கள் கீதையில் காணப்படுகின்றன. இதனைச் சுவாமி சித்பவானந்தாவும் மகாகவி பாரதியாரும் எவ்வளவு நயப்படுத்த முடியுமோ, அவ்வளவு முயன்று மொழிபெயர்த்துள்ளார்கள். அவற்றைக் கோரக்பூர் கீதைப்பதிப்புடன் ஒப்பிடும் முறையில் கீழே காண்போம்.

'விதிக்கப்பட்ட தொழிலை நீ செய்" (3 – 8) பாரதியார்

"நீ சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட கர்மங்களை ஆற்று வாயாக. ஏனெனில், கர்மங்கள் செய்யாமல் இருப்பதைக் காட்டிலும், கர்மங்களை ஆற்றுவது சிறந்தது!.

(இங்கு வர்ணம், ஆசிரமம் — மனிதனுக்கு விதிக்கப் பட்டபடி ஸ்வதர்மமாகச் செய்தல் வேண்டுமாம். பிராமணன் படிக்கலாம்; மலம் அள்ளுபவன் தன் சுயதருமம் தான் செய்யவேண்டும். சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட கருமம் என்பது அதுதான்) – கோரக்பூர்.

"வேள்வியின் பொருட்டென்று செய்யப்படுவது தவிர மற்றைத் தொழில் மனிதருக்குத் தளை ஆகிறது. ஆதலால், குந்தி மகனே, பற்றைக் களைந்து (வேள்வித்) தொழில் செய்துகொண்டிரு" (3 – 9) – பாரதியார்.

யாகத்தின் பொருட்டுச் செய்யப்படுகின்ற கர்மம் தவிர, வேறு செயல்களில் ஈடுபடுவதனாலேயே இம் மனித ஸமுதாயம் கர்மங்களால் பந்தப்படுகிறது. தன் 'கர்மத்தை' விட்டு, எல்லோரும் படிக்கப் போக, சமுதாயம் கெட்டுவிட்டதென்பதே கருத்து. – கோரக்பூர்.

முன்பு பிரமதேவன் வேள்வியுடனே உயிர்க்குலத்தை ஒருமிக்கப் படைத்துச் சொல்லினான் :

'இதனால் (வேள்வியால்) பல்குவீர்கள்! நீங்கள் விரும்பும் விருப்பங்களையெல்லாம் உங்களுக்கிது கறந்து தரும். (3 – 10) – பாரதியார்.

(கல்பத்தின் ஆரம்பத்தில் ப்ரஜைகளின் தலைவரான ப்ரம்ம தேவன் யாகங்களுடன் மக்களைப் படைத்துவிட்டுக் கூறினார்: 'நீங்கள் இந்த வேள்வியின் மூலம் பல்கிப் பெருகுங்கள். இந்த வேள்வி உங்களுக்கு நீங்கள் விரும்பிய போகத்தைத் தருவதாக அமையட்டும்) – கோரக்பூர்

'இதனால் தேவர்களைக் கருதக் கடவீர்; அந்தத் தேவர்கள் உங்களைக் கருதக் கடவர்... வேள்வியில் பாவனை செய்யப்பட்ட தேவர் உங்களுக்கு விரும்பிய போகங்களை யெல்லாம் தருவர். அவர்களுக்குக் கைம்மாறு செலுத்தாமல் அவர்கள் கொடுப்பதை உண்போன் கள்வனே யாவன் (3 – 11 – 12) பாரதியார்.

'இந்த வேள்வியினால் தேவதைகளை வளரச் செய்யுங்கள். அந்தத் தேவதைகள், உங்களை வளரச் செய்யட்டும். தன்னலம் கருதாத

தன்மையுடன் ஒருவர் மற்றொருவரை வளரச் செய்து, நீங்கள் மேலான நன்மையை அடைவீர்களாக' (கோரக்பூர்) இவ்விதம் அவர்களுக்கு அர்ப்பணம் செய்யாமல் எவனொருவன் அனுபவிக்கிறானோ, அவனே திருடன்'' (மேலது)

''வேள்வியின் மிச்சத்தை யுண்ணும் நல்லோர், எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிறார்கள்'' (3 – 13) – பாரதியார்

'படைப்பின் தொடக்கத்திலிருந்தே மனிதன் வேள்விகள் மூலம் தேவதைகளைத் திருப்திப் படுத்திவருகிறான். தேவர்கள் மனிதர்களுக்கு இஷ்ட போகங்களை அளித்துக்கொண்டு வருகிறார்கள் (கோரக்பூர் உரைவிளக்கம்). வேள்வியில் எஞ்சிய உணவை உண்கின்ற சான்றோர்கள், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். ஆனால், எந்தப் பாவிகள் தம் உடலைப் பேணுவதற்காகவே உணவைச் சமைக்கிறார்களோ, அவர்கள் பாவத்தையே உண்கிறார்கள்'' – (கோரக்பூர்)

வேதம் ஓதினால், ஓதவைத்தால், தட்சிணை தந்தால் செய்த பாவம் நீங்குமாம். வேள்வியும் ஹோமமும் பிராயச் சித்தமாகுமாம். இப்படித்தான் அத்தனை சோதிடர்களும் 'இராசிபலன்' எழுதி, நாடெங்கும். ஹோமங்கள் நடைபெறுகின்றன. எங்கு பார்த்தாலும் எதற்கும் கணபதி ஹோமம், சுதர்சனஹோமம், ஆயுஷ் ஹோமம் – இதனால் செய்பவன் நன்மை அடைகிறானோ இல்லையோ, பிராமணர்களுக்கு வருமானம் மலைபோல் குவிகிறது.

ஹோமம், அருச்சனை, அபிடேகம், குடமுழுக்கு – எல்லாம் இப்போது 'வழக்கு மன்றத்தில்' – 'முன்சாமீன்' பெறுவது போல ஆகிவிட்டது. செய்த பாவம் முதல், செய்யப் போவது வரை 'முன்சாமீன்' கிடைப்பதால், நாட்டில் 'ஊழல்' ஒரு கீதா தருமமாகிவிட்டது. பகவானே சொல்வதைப் பாருங்கள்.

'வேள்வியில் மிஞ்சிய அமுதையுண்போர்
என்று முளதாகிய பிரமத்தை எய்துகிறார்கள்.
வேள்வி செய்யாதோருக்கு இவ்வுலகமில்லை.
அவர்களுக்குப் பரலோகம் ஏது." (4 – 31)

"சோமமுண்டார் பாவமகன்றார். மூன்று
வேத மறிந்தார், என்னை வேள்விகளால்
வேட்டு வானுலகுதர வேண்டுகின்றனர்.
அவர்கள் புண்ணிய ஸ்தானமாகிய தேவேந்திர

லோகத்தை எய்தி, வானுலகில் திவ்யமான
தேவ போகங்களைத் துய்க்கிறார்கள்" (9 – 20)

– பாரதியார்

இப் 'பிராயச் சித்தத்திலும்' பல வகையுண்டு. அது சாதிக் கேற்ற பிராயச்சித்தம்; மநுஸ்மிருதி கூறுவது.

இனி நம் 'ஒயின்' கடைகளில் எல்லாம் ''சோம முண்டார் பாவமகன்றார்'' என எழுதி வைத்து, முற்பட்ட சோம பானத்தையும் உடன்வைத்து விற்பது நாட்டுக்கு நல்லது. பாவம் அகலும்.

மழைபெய்யப் பலர் வேள்வி செய்ய வேண்டும் என்று, அவ்வாறே செய்வது ஒரு சமய நம்பிக்கையாகி விட்டது. 'அன்னத்தால் உயிர்கள் சமைகின்றன. மழையால் உணவு தோன்றுகிறது. மழை வேள்வியால் ஆகிறது'' (3 – 14) என்பது கீதை. தமிழர்கள் பெண்களின் கற்புடைமையாலும், முறைதவறாத ஆட்சியாலுமே மழை பெய்யும் என நம்பினர். இங்கே நம்பிக்கை வேறுபடுகிறது.

கீதையில் நூல் முழுவதும் இழையோடுகிற 'செய்தி' மூன்று 1. வேள்வியை வற்புறுத்தல் – திரும்பத் திரும்பப்பல இடங்களில் வருவது காணலாம் 2. வருணாசிரம தருமமும் அவ்வாறே. இன்னும் சொன்னால் ஏதோ போர்க்களத்தில், பகவான் கிருஷ்ணன், போரினிடையே அருச்சுனனுக்கு உபதேசித்ததாகக் கற்பித்துக் கொண்டு, இவ் வருண வேறுபாட்டை நிலை நிறுத்த, மிகுந்த சூழ்ச்சித் திறனோடு விளக்கங்கள் தருகிறது கீதை. அதனால், மக்களின் பக்தி எனும் 'போதை' மாத்திரையைச் செலுத்தி, இவ்வருண வேறுபாட்டு நஞ்சு, புகுத்தப்பட்டதால், தமிழினம் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டு அழிய, நல்ல 'உபாய' மாயிற்று. என்றென்றும், பார்ப்பனியம் நிலைகொள்ளவும், ஏனைய தொண்ணூற்றேழு விழுக்காட்டினரும் விழுந்து கிடக்கவும் நம் முல்லை நிலத்தெய்வ வழிபாட்டின் வளர்ச்சியான கண்ணன் கதையை நன்கு பயன்படுத்திக் கொண்டுவிட்டனர். நம் கையைக் கொண்டே நம் கண்ணைக் குத்தும் அச் சாதுரியச் சமர்த்தர்கள் பாராட்டுக் குரியவர்களே 3. பிராயச்சித்தம் அல்லது பரிகாரம்.

இவை மூன்றையும் கீதை – அதாவது வேத, உபநிடத, இதிகாச, புராணப் பிழிவான – கீதை எவ்வாறு திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறது என்பதை, நீக்கமற உணர்ந்தால், பொதுவாக வடமொழி நூல்களின் வழி செய்யப்பட்ட அநீதிகள், பாரத நாட்டையே எங்ஙனம் பாதித்தன என்பதை அனைவரும் உணரச் செய்யலாம்.

வாய்ப்பு நேரும் போதெல்லாம் யக்ஞம், ஹோமம் பற்றியும் வருணம் பற்றியும் புகுத்துவதால், கீதையின் உள்பொருள் இவையென்றே கொள்ளவேண்டியுளது.

> குரு வம்சத்தில் சிறந்தவனான அர்ஜுன! யக்ஞத்தில் எஞ்சிய அமுதத்தைப் பருகுகின்ற யோகிகள் ஸாஸ்வதமான
> பரப்ரம்ம பரமாத்மாவை அடைகிறார்கள். யக்ஞம் செய்யாதவருக்கு (மனித உலகமே) இவ்வுலகமே சுகமளிப்பதாக இல்லை. அப்படியிருக்கப் பர லோகம் எப்படிச் சுகமளிக்கும்? (4 – 31) – கோரக்பூர்

இதனைப் பாரதியார் மொழியாக்கம் செய்ததில் சிறிது நயம் தோன்ற முன்பும் பார்த்தோம். பசு, ஆடு, ஆமை, மான் முதலான உயிரினங்களை, ஆகுதியாக வேள்வித்தீயில் போடும்போது, அவை துடிதுடித்துச் சாகும். அவற்றைத் தேவர்கள் உண்பதாக நம்பிக்கை. பிறகு அது பதமாக வெந்திருப்பதைப் பிராமணர்கள் தின்றுள்ளனர். அதுவே எஞ்சிய அமுதமெனப் படுகிறது. இன்று தமிழ், தமிழினத்தின் அழிவுக்கே வலைவீசும் கல்நெஞ்சம் இவர்களுக்குவாய்த்ததற்கு, முன்பு இவர்கள் செய்த இந்த 'யக்ஞ'ப் பழக்கமே காரணம் போலும்!

> "மூன்று வேதங்களிலும் வர்ணிக்கப் பட்டுள்ள முறை களின்படி பயனை நல்கக் கூடிய கர்மங்களைச் செய்து, யாகத்தில் ஸோமம் என்ற ரஸத்தை அருந்திப் பாவங்கள் அகன்று தூய்மை பெற்றவர்கள் என்னை யாகங்களால் உபாஸித்து ஸ்வர்க்க லோகம் அடைவதை வேண்டுகிறார்கள். அவர்கள் புண்யத்தின் பயன் வடிவான அமரர் உலகை அடைந்து, தெய்விகமான – தேவதைகள் அனுபவிக்கும் போகங்களை அனுபவிக்கிறார்கள்" (9 – 20) – கோரக்பூர்.

மேலும் அப் பதிப்பில் வரும் விளக்கவுரையும் உண்மை ஒளி வீசுகிறது. 'யக்ஞங்களில் ஸோமலதையின் ரஸத்தைப் பருகுவது என்ற விதிமுறை இருக்கிறது. அந்த முறைப்படி ஸோமக் கொடியின் ரஸத்தைப் பருகுகிறவர்கள் 'ஸோமபா' எனப்படுவர். வேதங்களில் கூறப்பட்ட மேலே சொன்னயக்ஞங்களை, முறைவழுவாது செய்வதால்' – பாவம் விலகுமாம். அவர்கள் 'பூதபாபா' எனப்படுவர். 'எல்லா உருவங்களும் பகவான்தான் என்று அறியாமல் – – – – பிற உயிரினங்களைக் கொல்லும் இதை

நியாயப்படுத்துவதோடு, மூன்று வேதங்களிலும் கூறப்பட்ட விதி முறைகளை வழுவாமல் செய்பவர்கள், 'த்ரைவித்யா' என்று அழைக்கப்படுவர் என்பதைக் கோரக்பூர் பதிப்புவழி அறிகிறோம். புத்தரும் மகாவீரரும் திருவள்ளுவரும் கடுமையாக எதிர்த்த இக் கொலைவேள்வி, புனிதமானது எனப் பகவானே சொல்லியிருப்பதும், அதற்கு வலியாமலும் நலியாமலும் சொல்லும் – எழுதும் விள்க்கங்களும் படிக்கப் படிக்க, இந்த நாட்டிற்கு ஓர் அம்பேத்கர் அல்லது ஒரு தந்தை பெரியார் மட்டும் போதாது – இன்னும் ஆயிரவர் தோன்றி, இவற்றை வெளிச்சத்திற்குக் கொணர்ந்து, பாரதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று தோற்றுகிறது.

மகாகவி பாரதியார், இவற்றை ஓரளவு நல்ல தமிழில், நயப்படுத்தி எழுத முயல்வது புரிகிறது. சுவாமி சித்பவானந்தர், பரிமேலழகரைப் போல, 'கீதைக்கு நல்ல விளக்கம்' போலப் படிப்பவர்க்கு ஏற்றவாறு வலிந்து விளக்கமெழுத முயல்கிறார். கோரக்பூர் பதிப்பே உண்மையான பதிப்பு; மலிவுப் பதிப்பு.

## வேத காலம்

வேதங்களின் பிழிவே கீதை. வேதங்கள் புத்தசமண எதிர்ப்பால் தொய்வுற்றபோது, கீதையை எழுதிப் பகவானையே கூறவைத்துக் காப்பாற்றியதாகக் கூறப்படுவதுண்டு. வடமொழிபற்றிய ஆராய்ச்சிகளைப் பகுத்தறிவுச் செல்வர், தளபதி கி. வீரமணி ஏறத்தாழ முக்கியமான அனைத்தையும் தொகுத்துத் தந்துள்ளார். (கீதையின் மறுபக்கம்; இரண்டாம் பதிப்பு, 1998, திராவிடர் கழக வெளியீடு, ஈவிகேசம்பத்சாலை, சென்னை – 7)

மலேசிய இந்து சங்கம் வெளியிட்டுள்ள (2003) நூல், 'இதோ இந்து சமயம்' என்பது. அதில் கீதைக்கு முன்பே அது கூறும் நெறிமுறைப்படியான 'வேள்விகள்' யக்ஞங்கள் பற்றி அவ் வேதங்கள் கூறியவற்றையும் ஒரு சிறிது காண்போம்.

> 'யக்ஞங்களைச் (யாகம், வேள்வி) செய்வதே வேதத்தின் தலையாய நோக்கம்...
>
> கர்மகாண்டம் என்பது இக – பர சுகத்துக்கு உரிய கர்மங்கள், யாகங்கள் முதலியவற்றைச் செய்யும் முறை, அவற்றுக்கான தேவர்கள், அவர்களைத் திருப்தி செய்யும் மந்திரங்கள் ஆகியவற்றை இது கூறும்...

இந்த வேதம் (ரிக்வேதம்) செய்யுள் வடிவிலேயே இருப்பதால், இவ்வாறு அழைக்கப் பெறுகிறது. வேள்விகளில் தேவதைகளை அழைப்பதற்கு இந்த வேதம் பயன்படுகிறது.

(ரிக்வேதம் தேவதைகள் என இந்திரன், பிறஜாபதி, வருணன், அக்கினி, புருடன் எனப் பலரை அழைத்துத் தங்கள் கொலை வேள்விகளைத் தடுக்க வந்த திராவிடர்களை, 'இராட்சதர்கள்' என்று கூறி, அவர்களை அழித்துத் தங்கள் யக்ஞங்களைக் காக்குமாறு புலம்பிய பாடல்களையே மிகுதியாகக் கொண்டுள்ளது. (அரப்பாவில் தமிழர் நாகரிகம், குருவிக் கரம்பைவேலு, சிவசக்திப் பதிப்பகம், 2043, நீலா தெற்குவீதி, நாகப்பட்டினம் – 611 001. (2001)

யாகங்களில் ஏற்படும் மூன்று பலன்களைக் காஞ்சி முனிவர் பட்டியலிடுகிறார். முதலாவது இவ்வுலகில் வாழும்போதே, நமக்கும் எல்லா உயிரினங்களுக்கும் தேவர்களின் அருளினால் நன்மைகளைப் பெறுவது; இரண்டாவது இறந்தபிறகு தேவலோகத்தில் இன்பமாக இருப்பது; மூன்றாவது எந்தப் பயனையும் எதிர்பாராமல், இது நம் கடமை என்று எண்ணிச் செய்யும்போது, அது ஞானத்தைக் கொடுத்து, இறுதியில் அழியாத பேரின்பத்தை நல்கிவிடுகிறது – தெய்வத்தின் குரல் இது.

மேலும் யஜுர் வேதத்தில், 'யக்ஞங்களில் உயிர்ப்பலிக்கு இடமிருக்கிறது' என்று சொல்லப் பெற்றிருப்பதைக் காஞ்சி சங்கராசாரிய சுவாமிகளின் கூற்றின்வழி அறிகிறோம்.

## நேர்த்திக் கடன்

பண்டைத் தமிழரிடையே, கடவுளருக்கு நேர்த்திக் கடனாக உயிர்களைப் பலியிடும் வழக்கம் நிலவி வந்திருக்கிறது என்பதைச் சங்க நூல்கள் தெளிவாகவே குறிப்பிடுகின்றன. வேதங்களிலும் உயிர்கள் கொல்லப் பெற்றன; ரிஷிகளின் தொன்மையான வேள்விகளில் உண்ணத்தக்க பறவை, விலங்குகள் அவிசாகவே (தேவருணவாகவே) இருந்தனவாதலால், வேள்விகளில் உயிர்வதை செய்யலாம் என்கிறது மனுஸ்மிருதி (அத் 5 – 23)

வேதியர் குலத்தில் தோன்றியவரான – வேதத்தை நன்கு அறிந்தவரான – வேத வேள்விகளை ஆதரித்தவரான ஞான சம்பந்தப் பிள்ளையார், தம்முடைய தில்லைத் திருப்பதிகத்தில், 'பசுவேட்டு எரிஓம்பும்' என்று (1.80.2) ஒளிவு மறைவு இன்றிக் குறிப்பிடுகின்றார். (பசுவைக் கொன்று யாகத்தைச் செய்கின்ற என்பது பொருள்)

## அருள்வாக்கு

'சாத்விகமான வாழ்க்கை முறைக்கென்று ஏற்பட்ட பிரிவினரிடையே உயிர்களை வதை செய்யும் அம்சம் இருப்பதாகத் தோன்றும் யாகங்களை வேதங்கள் விதித்திருக்கின்றன என்றால், அதில் நியாயம் இல்லாமல் இருக்குமா? என்று கூறி, யாகங்களில் உயிர்கள் பலியிடப் பெறுவதற்கு நியாயம் கற்பிக்க முயல்கிறார் சங்கராசாரிய சுவாமிகள்.

'யக்ஞப் பலியால் (யாகத்திற்காக மேற்கொள்ளப் பெறும் உயிர்ப்பலியால்) சில தேவ சக்திகள் திருப்தியடைந்து, உலகத்திற்கு நல்லது செய்கின்றன; பலியாகும் பிராணியும் நல்ல கதியை அடைகிறது' இது அவர் கற்பிக்கும் நியாயம்.

(தெய்வத்தின் குரல் பக். 335)

வேள்விக்குப் பயன்படுத்துகிற கொடி, மரம், பசு, விலங்கு, பட்சிகள் போன்றவை, பின்னர் மேலான கதியை அடைகின்றன என்கிறது மனுதர்ம சாஸ்திரம் (அத். 5.40) கீதையும் இதை வற்புறுத்துவதை முன்பே கண்டோம். (3.11.12)

## பரஞ்சோதி முனிவர்

திருவிளையாடற் புராணத்தில், மாணிக்கம் விற்ற படலத்தில் வரும் செய்தி இது. 'உயிர் செகுத்த – ஆவாய், வேதம் பணித்திடும் வபையை வாங்கிப் படர்எரி சுவைமுன் பார்க்கக் குணித்த வானாடர்க்கு ஊட்டிக்,கோதிலா வேள்வி செய்தான்'. (34)

'வபை' என்பது, வெண்துகில் போன்ற நிணப்பகுதி. மிகச் சுவையாக இருக்கும். பசுவின் வபையை, அக்கினி உருசி பார்த்துப் பிறகு, தேவர்களை உண்பித்த குற்றமற்ற வேள்வி.

பசுவை எப்படிக் கொன்றனர்? 'வாயைப் புதைத்து உயிர் படங்க வீட்டி மாய்த்தனர்' (வாயைப் பொத்தி, மூச்சு அடங்கக் கொன்றனர்). இது திருவிளையாடற் புராணம்.

இது தர்மத்தைக் காக்கும் ஹிம்ஸை என்கிறார், பெரியவர். தர்மத்துக்காகச் செய்யவேண்டியது, எப்படியிருந்தாலும் பண்ணவேண்டும். ஹிம்ஸை என்று பார்க்கக் கூடாது – காஞ்சிப் பெரியவர் கற்பிக்கும் நியாயம் இது. (தெய்வத்தின் குரல் 2, பக்.283).

வேள்விக்கென்றே பசுக்கள் பிரமனால் படைக்கப் பெற்றன. உலக நன்மையை முன்னிட்டு, நடைபெறுவனவாகிய வேள்விகள் செய்யப்படும் போது, அது பசுவதை ஆகாது. (மனுதர்மம் அத். 5. 39)

பிராமணர்கள் செய்வதில் மிக உயர்ந்த யாகமாகக் கூறப் பெறுவது வாஜபேயம். (யாகம் 21இல் அந்தணர் மற்றும் அரசர்களால் செய்யப்பெறும் யாகவகை) அந்த யாகத்தில் 23 பசுக்களைப் பலிகொடுக்கச் சொல்லியிருக்கிறது. மேலும் ஹோமம் செய்யும் பிராமணர் (ரித்விக்குகள்) இடாவதாரணம் என்பதாகப் பசுவின் இன்ன இன்ன அங்கங்களிலிருந்து இந்த அளவு மாமிசம் சாப்பிட வேண்டும் என்றும் சொல்லப் பெற்றிருக்கிறது (யாகத்தில் மிஞ்சியதை உண்ணும் மேலோர், எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகின்றனர் – கீதை 3.13)

உண்ண மறுப்பது பாவம். அது துவரம்பருப்பு அளவுக்குச் சற்று பெரிதாகத்தான் இருக்கும். அதிலும் புளிப்போ, காரமோ, தித்திப்போ சேர்க்காமல், ருசி பார்க்காமல் அப்படியே முழுங்கத்தான் வேண்டும் என்று பெரியவர் கூறுகிறார். (தெய்வத்தின் குரல் பக். 286) பிராமணர்கள் சாப்பிடுவது என்பது யக்ஞப் பிரசாதம் (ஹோமப் பிரசாதம்), என்ற மரியாதைக்காக ஒரு குன்றிமணி அளவுதான்; வயிறு புடைக்க அல்ல என்று, அவர் மேலும் சொல்கிறார்.

(சிரார்த்தத்தில் வரிக்கப்பெற்ற அந்தணன், புலால் உண்ணலாகாது என்று எண்ணி உண்ண மறுத்தால், அவன் 21 பிறவிகள் பசுவாய்ப் பிறப்பான் – மனுதர்ம சாஸ்திரம், அத் 5–35)

கீதை கூறும் யக்ஞம், வருணம், பிராயச்சித்தமாகும் பரிகாரம் – ஆகிய மூன்றும் தமிழர்க்கு ஏலாதவை; அதனால் எக்காரணத்தைக் கொண்டும் தமிழர்கள் அதை ஏற்க இயலாது என்றோம். அவற்றில் முதலிலுள்ள யக்ஞம் பற்றி மட்டுமே இதுகாறும் கண்டோம். இந்த ஒரு காரணத்திற்காகவே, தமிழர்கள் மட்டுமென்ன, பிராமணர்களே வெறுக்கவேண்டியவை இவை. தமிழர்களுக்கு மட்டுமன்றி, இந்தியர்களுக்கும் – ஏன்? உலக மானுட இனத்திற்கே ஒவ்வாதவை இவை.

புத்தரும் மகாவீரரும் இவ் வேள்வி அடிப்படை காரணமாகவே, வட நாட்டில் வைதிகத்தை எதிர்த்துப் போர்க்கொடி எழுப்பினர்; புதிய சீர்திருத்தச் சமயங்களைத் தோற்றுவித்தனர். புத்தர் வேள்வியில் பலியாக இருந்த ஆட்டுக் குட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு, அறப்போராட்டத்தில் ஈடுபட்டார்.

தெற்கே திருவள்ளுவரும் திருமூலரும் சித்தர்களும் இவ் உயிர்க்கொலை வேள்வியை எதிர்த்தனர். திருவள்ளுவர் 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று' என்றார் (259). செகுத்து என்பது சித்திரவதை செய்தல்.

மேலே உலகிலுள்ளவர்களாகிய, கண்ணுக்குத் தெரியாத தேவர்களுக்கு 'அவிசு' எனப்படும் – ஆகுதி பெய்த உணவை அக்கினிமூலம் அனுப்புவதாகச் சொல்லும் வைதிகத்தை எள்ளி நகையாடினார் திருவள்ளுவர்.

'இனைத் துணைத்து என்பதொன்று இல்லை;விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்' (87)

'பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பார் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்' (88)

கண்கண்ட மக்களுக்கு விருந்துவைப்பாயாக! அது நீ நினைக்கின்ற அத்தனை வேள்விப் பயனையும் தரும். ஏதோ மிகவும் சிரமப்பட்டுப் 'பற்றற்றேன்' என்று பதறும் போலியே, நீ இவ்வுலகில் விருந்தோம்புதலாகிய வேள்வி செய்தால், அது போதுமே,' என்று சிரிக்கவைத்து, இடித்துரைக்கிறார்.

பி.டி. சீனிவாச அய்யங்கார், தமிழர் வரலாறு பற்றிய தமது ஆங்கில நூலில், (1929),

வடநாட்டுப் பிராமணர்களால் தென்னாட்டிற்குத் துரத்தப்பட்டும் இங்குள்ள வேந்தர்களால் குடியேற்றப் பட்டும் வந்து, தமிழரோடு தமிழராய்க் குருதிக் கலப்புற்றுப் போன தமிழகப் பார்ப்பனர்கள், தங்கள் தொழிலும் வருமானமும் கருதியே தங்களின் சமற்கிருதப் பற்றுப் போன்றதும் ஹோமம், சடங்குகள் போன்றனவுமான தனித்தன்மைகளை விடாது கைப்பற்றி வாழ்கின்றனர் என்று கூறுகிறார். அவர்கள் வடவர்களால், ஒரு காலத்தில், 'பிரஹ்மராட்சதர்கள்' என்று அழைக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டுகிறார். (பக் 55 – 58)

பிராமணர்கள் எரியோம்பியே வாழ்ந்தவர்கள். அதன் செல்வாக்குக் குறைந்து, வருமானம் போனதால், இங்குள்ள மக்களின் பக்தி மார்க்கத்தைப் பற்றிக் கொண்டு வருமானத்திற்காகவே – தங்கள் கொள்கையை விட்டுக் கொடுத்து வாழ்கின்றனர் என வெளிப்படையாகவே விளக்குகிறார். (பக் 113)

அவர் கூறுவனவற்றுள் ஒன்று மட்டும் காண்போம். இதைப் படித்தாவது, இங்குள்ளவர்கள் கீதையை ஒப்புக்கொள்ள மறுப்பது நியாயமே என அவர்கள் புத்தியில் பட்டால் போதும்.

> எரியோம்பலில் (யக்ஞம், ஹோமம்) நெருப்பைப் பற்றவைத்து, அதில் பூசைப் பொருள்கள் போடப்படுகின்றன. ஆனால், ஆகாமியர் எனப்படும் தமிழர்கள் எரியோம்பலைச் செய்யாதவர்கள்; கடவுளர் முன் காணிக்கைப் பொருள்களைப் படைத்துப் பிறகு அதை எடுத்துத் தாமும் உறவினரும் நண்பர்களும் உண்டு மகிழ்வர். எரியோம்பலில் எல்லாம் இழக்கப்படுகிறது. ஆனால், படையல் செய்யும் இதில் பக்தன் எதையும் இழப்பதில்லை.
> (பக். 105)

## மக்களை மறக்கடிக்கும் இந்துமதம்

இந்துமதம் என்ற பெயரால் பிராமணர்கள், மக்களை மறக்கடிக்கும் தொழிலையே விருத்திசெய்து கொண்டனர். வேதம் முதல் கீதைவரை இதுதான் கதை. கீதை கடவுளர்களுக்கு அனுப்பு, வேள்விசெய், ஹோமம் செய், மக்களுக்குப் பயன்படும் எல்லாவற்றையும் நெருப்பில் போடு என்று, தேவர்களை உபாசிப்பதையே அடிமுதல் முடிவுவரை போதிக்கிறது.

இன்று உயிர்க்கொலை செய்வதுமட்டுமே அவர்களால் கையாள இயலவில்லை. சண்டி ஹோமம் என்று எழுபதாயிரம் செலவு வைத்த இந்தப் பிராமணர்கள் அன்று கிட்டத் தட்ட அறுபதாயிரம் பெறுமான பொருள்களை, மக்களுக்குப் பயன்படும் பொருள்களை நெருப்பில் போட்டார்கள். அக்கினி பகவான், தேவர்களுக்கு அவற்றைக் கொண்டு செல்கிறாராம். அதை நுகர்ந்த தேவர்கள், இவ்வுலகிற்கு அருள் புரிகிறார்களாம்.

இதனால் பிராமணாள் பிழைப்பதென்னவோ, உண்மைதான். பிராமணர்கள் மக்களுக்குப் பயன்படும் எதுவும் அவர்களுக்குப் போய்விடாமலிருக்க, இக் கடவுளரையும் தெய்வங்களையும் மக்களின் பக்திப் பெருக்கையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள். ஏழை ஏழையாகவே இருக்க மிகச் சாதுரியமாக, அவன் தலையிலேயே மிளகாய் அரைக்கிறார்கள். ‘நடமாடக் கோயில் நம்பர்க்கு ஈவதே, ஈசனுக்கும் ஆகும்’ என்ற திருமூலர் வாக்கை, தமிழ் மூடர்கள் படிப்பதோடு சரி.

'புல்லிலை எருக்கமாயினும் போது மென்பானாம் ஈசன் – சங்கப் பாடல் சங்க காலத் தமிழ் அந்தணர் கபிலர் வாக்கு இது. 'யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை' திருமூலர். 'பூவும் நீரும் கொண்டு, 'சலம் பூவொடு மறந்தறியேன், போதொடு நீர் சுமந்தேத்தி! இறைவனுக்குப் பூவும் நீரும் போதும், வழிபட.

பூசுதல் – சுத்தம் செய்தல், பூசகர் – தூய்மைப்படுத்துபவர். கருவறையை, கோயிலைத் தூய நிலையில் வைத்திருக்கவே பூசகர் வேண்டும்.

இறைவழி பாட்டில், இடைத்தரகர் வேண்டாம். அனைத்துக் கோயில்களையும், காசி விசுவநாதர் கோயிலாக மாற்றுவோம்; எந்தக் கடவுளும் வயிரமுடி கேட்கவில்லை, தங்கத்தேர் கேட்கவில்லை, கோடிகோடியாகக் கொட்டு என்று கேட்கவே இல்லை.

அனைத்துச் செல்வமும் எழைகளின் கல்விக்கும் பசிதீர்ப்பதற்கும் பயன்படட்டும்.

இந்துமத அறநிலையத் துறையை, தமிழர் சமய அறநிலையத் துறையாக்கிப் புதுமை படைப்போம். பக்தி வாணிகம் ஒழியட்டும். ஹோட்டல் போல ரேட்டுகள் போடும் வழக்கம் ஒழியட்டும். இறைவன் திருமுன்னாவது, ஏழை பணக்காரன், உயர்சாதி கீழ்ச்சாதி வேற்றுமைகள் ஒழியட்டும். பிராமணாள் கிளப்பை, கிளப்பி ஒழித்தார் தந்தை பெரியார். இன்று பிராமணர்கள் தாங்களாகவே கோயில்களை விட்டு வெளியேறிவிடுவதுநல்லது. அதனால் மக்களின் செல்வம் எல்லாம் மக்களுக்கே பயன்படட்டும். உலக நன்மை, இறையன்பு, உண்மைப் பக்தி கருதியாவது பிராமணர்கள் கோயில்களை விட்டு வெளியேறுவதே நல்லது. கீதை கோயில்களைப் பற்றி எதுவும் கூறவில்லை. இதில் ஒன்றில் மட்டுமாவது பிராமணர்கள் பின்பற்றினால், அது பகவான் பரந்தாமனுக்குச் செய்யும் உண்மையான நன்றியறிதலாகும்.

# ஆல்பர்ட்டு சுவைட்சர்

## இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்

செருமனியைச் சேர்ந்த இப்பேரறிஞர் தம் ஆய்வுக்காக எடுத்துக்கொண்டது, இப்பொருள். செருமன் நாட்டவர் அறிவுக் கூர்மையில் மிக மேம்பட்டவர்கள். சமற்கிருத மொழிவல்லுநர்கள். இந்நிலையில் மெய்ம்மையியல் அறிஞராய், இசைப் பேரறிஞராய் விளங்கிய இவர், தென்னாப்பிரிக்க நாட்டுப் பழங்குடி மக்களுக்குத் தொண்டு செய்வதற்கென்றே, மருத்துவமும் பயின்றவர். அங்குச் சென்று, அவர்கள் தங்களுக்கு நன்மைசெய்ய வந்தவரென்ற உண்மையறியாமல் மிகவும் துன்புறுத்தவும். அதனையும் பொறுத்துக் கொண்டு, அவர்கள் நலம் சிறக்கப் பாடுபட்டார்.

இவரைப் பற்றி டாக்டர் அ. சிதம்பர நாதனார், 'மன்னுயிர்க்கு அன்பர்' என நூல் எழுதியமை குறிப்பிடத் தக்கது. இவரை மகாத்மா காந்தியுடன் அறிஞர்கள் ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.

இந்நூலில், இவர் மேலைநாட்டுச் சிந்தனையுடன், இந்தியச் சிந்தனையை ஒப்பிட முயல்கிறார். இந்தியச் சிந்தனை என்பது 'உலகையும் மக்கள் வாழ்வையும் வெறுப்புடன் பார்ப்பது' என்ற அறிஞர்களின் கருத்தை ஒப்புக் கொள்கின்றார். ஆயினும் அதனுள்ளே மானுடவாழ்வின் சிறப்பும் இருப்பதாக விளக்க முயல்கின்றார். உபநிடதங்கள், புத்தம், சமணம் பற்றி ஆராய்கிறார். பிராமணியம் பற்றியும் மனுவைப் பற்றியும் பகவத்கீதை பற்றியும் தனி இயல்களில் ஆராய்கிறார். 'கீதையிலிருந்து இன்றுவரை' என்ற தலைப்பில் எழுதிவரும்போது, ஆறு பக்கங்களில் மட்டும் திருக்குறள் பற்றி எழுதியுள்ளார். கார்ல் கிரவுள் (Karl Graul) என்பாரின் செருமன் மொழிபெயர்ப்பைப் படித்து எழுதிய இவர், திருவள்ளுவரின் 'ஆழ்ந்திருக்கும் கவி உள்ளத்தைக் கண்டு' எழுதியிருப்பதே வியப்பைத் தருகிறது. இந்தியச் சிந்தனைகளைப் பற்றி

ஓரளவு கண்டு, கற்றுத் தெளிந்த நிலையில், இவருக்குத் திருக்குறளின் பெருமை தெற்றெனப் புலனாகியுளது. தமிழர்களாகிய நாமே சொல்லத் தயங்குவனவற்றை, இவர் மிகத்தெளிவாக, வெளிப்படையாக, நடுவுநிலையோடு கூறியுள்ளார்.

இந்நூல், 1935இல் செருமன் மொழியில் வெளியிடப்பட்டு, ஆங்கிலத்தில் திருமதி ரஸ்ஸல் என்பவரால் மொழியாக்கம் பெற்றது. இதன் இந்தியப் பதிப்பு, வில்கோபதிப்பகத்தாரால் 1960இல் வெளியிடப் பெற்றது.

இந்நூல் முழுவதும் தமிழில் வெளிவரின் மிகவும் பயன்படும்.

## ஆல்பர்ட்டு சுவைட்சர் கருத்தின் சாரம்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டினதாகிய திருக்குறளில், அறக் கருத்துகள் கூறப்பட்டுள்ளன. 1330 குறள்களில், அனைத்துமே திருவள்ளுவரே தந்தவை என்பதனிலும், தொன்மையான அக்கால மக்களின் கருத்துக்களையும் அவர் தொகுத்தளித்துள்ளார் எனலாம்.

சிறிய யாப்புவடிவ இந்நூல், திராவிடர்கள் சிந்தனையாகும்; ஆரியர்களுடையதன்று; அவரது வரலாறு தெரியவில்லை. திருவள்ளுவர் வாசுகி கதை ஒன்று வழங்குகிறது.

மனுநீதிக்கும் திருக்குறளுக்கும் எத்துணை வேறுபாடு! மனுஸ்மிருதியில் பிராமணிய உணர்வு மேலோங்கியதால், உலகையும் வாழ்வையும் விருப்புடன் பார்ப்பதென்பது, வெறுப்புடன் பார்ப்பதனுள் அடங்கிப் போகிறது. திருக்குறளில் உலகை வெறுப்புடன் பார்ப்பதென்பது, தூரத்து மேகம் போல் சிறிதளவே உளது. 250 குறள்களைக் கொண்ட காமத்துப்பாலில், உலகக் காதல் பெருமைப் படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், இதனை உயிருக்கும் இறைவனுக்குமுள்ள காதலை, உருவகமாக விளக்குவதெனச் சிலர் விளக்கம் தருவர். இது போன்றது மேலை நாட்டிலும் உண்டு.

மனுஸ்மிருதி போல்வன நல்லன செய்வதால் புண்ணியம் உண்டு, மோட்சம் கிடைக்குமெனவும் மறு பிறப்பு நன்கமையும் எனவும் போதிக்கின்றன. திருக்குறளிலோ, இக் கருத்து பிராமணியம், புத்தம் பகவத்கீதை போன்றவற்றில் கூறப்படுவனபோல, அத்துணை அழுத்தமான கருத்தாகக் கூறப்படவில்லை. நல்லதை நல்லதற்காகவே செய்யவேண்டு மென்பது திருக்குறள். 'மேலுலகமே இல்லை என்றாலும் ஈகையே நல்லது' என்பது குறள்.

பகவத் கீதை குறுகிய பார்வையில் மிகக் கீழாக, ஒருவன் நல்லவனாக வாழ்வதற்கு ஓர் எதிர்பார்ப்பைக் கூறக் குறளோ, உலகிற்காக – மக்களுடன் கூடி வாழ்வதற்காக நல்லவனாக இரு என்று போதிக்கிறது. எத்துணை முன்னேற்றமான கருத்து!

பகவத் கீதையில் சாதிக்கு ஏற்ற கடமைகள் கூறப்பட்டுள்ளன. அவ்வாறன்றி நல்லனவற்றை எல்லோரும் செய்யலாம் என்பது குறள்.

உலகவாழ்வில் ஏற்படும் மகிழ்ச்சியைக் கூறும் குறளைப் பார்க்கும் போது, இந்திய உதடுகளில் எதனிலிருந்தும் இத்தகைய கருத்து வெளிப்பட்டதாக எண்ண இயலவில்லை.

குறள் கூறுபவை மிகஉயர்ந்தவை; மிகச் சிறந்த நல்லவை. உலக இலக்கியங்களில், இத்துணை அறிவு வளம் நிறைந்த கருத்துகளின் தொகுதியைக் காண்பதரிது. புத்தமதத்தில் பிற உயிர்களைக் கொல்லத்தான் கூடாதே தவிரப் பிறர் கொன்றன போன்றவற்றை வாங்கி உண்ணலாம் என்றிருப்பதைக் குறள் மறுக்கிறது.

மிகமிக நல்ல கருத்துகள் பொதிந்துள்ளன. பிறர்யாரும் கூறாச் சிந்தனைகளாக இவை விளங்குகின்றன. தீர்த்தமாடுவதால், புற உடல்தான் தூய்மைப்படும்; பாவத்தைக் கழுவ முடியாது: மனத்தூய்மை, வாய்மை பேசுவதால் மட்டுமே அமையும்.

இவ்வாறு நம் கிறித்தவக் காலப்பகுதியின் தொடக்கத்தில் இந்திய மக்களிடையே, இத்தகைய இயல்பான, அறவழிப்பட்ட, உலகையும் மானுட வாழ்வையும் விருப்புடன் பார்த்து வாழவைக்கின்ற கருத்துத் திகழ்ந்துளது. ஆயின் இத்தகைய சிந்தனை போன்ற எதனையும்

பிராமணியத்திலோ, புத்தத்திலோ, பகவத் கீதையின் இந்துத்துவத்திலோ காண இயலாது.

இத்தகைய கருத்துகள் 'இந்துத்துவ'ச் சிந்தனையிலும் சிறிதுசிறிதாக ஊடுருவின. கீழ்க்குலத்தார் என்று ஒதுக்கப் பட்டவர்களிடமிருந்து, மிகச் சிறந்த சமயச் சான்றோர்கள் தோன்றி, அவர்கள் மக்களுடன் மக்களாக வாழ்ந்து, பழகி, அவர்களின் உணர்வு வழிப்பட்டு இத்தகைய சிந்தனைகளைப் பரப்பினர்.

(ஏறத்தாழ 35 குறள்களையும் கருத்துக்களையும் தந்துள்ள சுவைட்சரின் கருத்தோட்டம், திருக்குறளுக்கு உயிரோட்டம் தரவல்லதாகும். ஒரு புதிய பார்வையை, ஒப்பியல் நோக்கில், வெளிநாட்டவர் சொல்லியிருப்பதால், இது மேலும் வலுவுடையதாகிறது.)

# ALBERT SCHWEITZER

## INDIAN THOUGHT AND ITS DEVELOPMENT
## THIRUKKURAL

That the idea of active love did arise in the popular ethics of India in fairly ancient times we know from many stories we meet in her literature and especially through the ethical maxims found in the kural, a work which probably belongs to the 2nd century A.D.

The kural is a collection of 1330 maxims in distich form, attributed to the weaver Thiruvalluvar. In the matter of authorship it is probable that not all the maxims are Thiruvalluvar's own, but that he also versified some which were ancient possessions of the people.

Kural means short strophe. Thiruvalluvar is really not a name, but a title borne by the religious teachers who work among the lower castes in the south of India.

The work is written in the Tamil language. This, like Canarese, which also belongs to the south of India, is an indigenous Indian language (Dravidian), not Indo-Aryan.

We know nothing certain about the life of Thiruvalluvar.

Legend reports that he was married, and that when a man inquired of him which is the right thing to do. to live as father of a family or as a hermit, he demonstrated the answer. He called his wife who happened to be at the spring. She left her water-jar hanging in the water and hurried to ask him what he wanted. When, according to Tamil custom, she set before him at breakfast cold rice left over from supper, he declared it was burning his tongue. She immediately blew on it to cool it.

At midday he let something fall and called for a light to pick it up by. She straightway brought a lamp. Thereupon the inquirer said,"I have the answer! If so excellent a woman falls to one's share, the practice of domestic virtue is more excellent; otherwise it is better to become a hermit."

What a difference between the Kural and the Laws of Manu, which originated some four centuries before it! In the latter, under the dominance of the Brahmanic spirit, world and life affirmation is still just tolerated alongside world and life negation. In the Kural world and life negation is only like a distant cloud in the sky. In 250 maxims - they form the concluding part of the work - earthly love is lauded. Later times, because they cause offence, interpret them allegorically as concerning the love of the soul to God.

Christinanity similarly interprets the Song of Solomon, a love-song probably originally sung at weddings and later absorbed into the Old Testament, as if it described the relations of the soul to its heavenly Redeemer.

In the ethics of the Kural, as in those of the Laws of Manu, the idea of reward has a place. The way of virtue is recommended because it leads to a better reincarnation or to liberation from re-birth. Along-side of this is found also the naive view which is so conspicuous in Chinese ethics that moral behaviour results in earthly welfare and immoral in misfortune. Nevertheless, ethics in the Kural are not so entirely dominated by the idea of reward as in Brahmanism, Buddhism and the Bhagavad-Gita. We already find here the knowledge that good must be done for its own sake. It shines out from various maxims.[1]

"Even though one should say, `There is no higher world,' it is still good to give" (222). - "True liberality asks

**[1]The quotations are from the German translation ``Der Kurral'' by Karl Graul, D.D., Leipzig 1856 (Derfling and Franke) and London 1856 (Williams and Norgate) (Bibliotheca Tamulica).**

nothing in return. What does the world give in return to the cloud that gives it rain?" (211).

Whilst the Bhagavad-Gita in a forced and chilly manner gives as a motive for remaining in active life that it is in accordance with the order of the Universe, the Kural justifies it - what an advance! - by the idea of ethical activity. Work and profit place a man in a position to do good.

"All staying at home and waiting on the house-hold have for their end hospitality and alms-giving" (81). - "All property gained by industrious toil is there for good men in order that they may practise well - doing" (212).

According to the Kural, duty is not confined, as in the Bhagavad-Gita, to what the caste calling involves, but consists in general in "all that is good."

Maxims about joy in activity, such as one would not expect from Indian lips, bear witness to the strength of the world and life affirmation present in the Kural.

"Even if fate did not permit of success : the striving in itself rewards the exertion of one's body" (619). - "If one accepts the burden as joy, there emerges a splendour for which even one's enemies are eager" (630).

Like the Buddha and the Bhagavad-Gita, the Kural desires inner freedom from the world and a mind free from hatred. Like them it stands for the commandment not to kill and not to damage.[1] It has appropriated all the valuable ethical results of the thought of world and life negation. But in additon to this ethic of inwardness there appears in the Kural the living ethic of love.

"The loveless man takes everything for himself; the man full of love gives even his own bones to others" (72). - "The life of a soul without love is like the sprouting of a dried up tree on stony ground" (78). - "What help can all the outer

**[1]In opposition to the Buddha, the Kural decides that one may not eat meat even when one is quite innocent of the slaughter of the animal.**

limbs give. if the inner limb of the body, love, is wanting?" (79). - "If one weighs the value of the good deed done without consideration of the advantage : its kindness is greater than the ocean" (103). - "TO assuage the deadly hunger of the poor is the treasury of the rich" (226). - "Wealth in benevolence is the wealth of wealths. Wealth in possessions the mob has also" (241).

With sure strokes the Kural draws the ideal of simple ethical humanity. On the most varied questions concerning the conduct of man to himself and to the world its utterances are characterised by nobility and good sense. There hardly exists in the literature of the world a collection of maxims in which we find so much lofty wisdom.

"If a kind man inherits property, it is as if a fruit-tree bears ripe fruit in the middle of a village" (216). - "The child 'Mercy' born of love lives by the care of the well-to-do nurse 'Well-being'" (757). - "The wealth of him who gives nothing to the poor is as if a very fine lady grows old in solitude" (1007).

"The gift is not the measure of the gift: its measure is in the magnanimity of the receiver" (105).

"Better than spending with a happy heart is to carry on sweet speech with a happy face" (92). - "For those who do not understand how to be friendly, the great wide world, even in bright daylight, lies in darkness" (999).

"Among all treasures that may be gained none can compare with attaining to freedom from envying any man" (162).

"To forget good is not good; immediately to forget what is not good is good" (108). - "Holy as a penitent is he who forgets bitter speech from the lips of one who is excited" (159).

"Self-control leads to the immortals; want of self-control rushes into thick darkness" (121). - "He who is not eager for pleasure, but knows that pain is natural, will remain free from distress" (298).

"Those who are considerate and forbearing without letting their duty suffer: the world gladly gives itself to such" (578). - "The world rests on the excellence of the good prince who knows how to change enmity into friendship" (874).

"Even if they are highly placed, those who are not hightminded are not high; even if their station be humble, those who are not low-minded are yet not low" (973).

"If thou dost harm to thy neighbour in the morning, harm comes of itself to thee in the afternoon" (319).

"Asking the way, happiness goes of itself to him who is undaunted in spirit" (594). - "Whoever says, 'I will work for my family', before him there goes at once the goddess of good fortune, her robe well girded-up (i.e. as fellow-worker)" (1024).

"Take no pleasure, even if thou shouldst win, in gambling. Even winning is as if a fish swallows the metal hook" (931).

"The friendship of well-conducted men waxes like the new moon : the friendship of fools wanes like the full moon" (782).

"Husbandmen are the axle-pin on the wagon of the world : they give support to all who, not caring for husbandry, are engaged in other work" (1032).

So a natural and ethical world and life affirmation of this kind was present among the people of India at the beginning of our era, although nothing of it can be found in Brhmanism, Buddhism and Bhagaved-Gita Hinduism. It gradually penetrates into Hindu thought through the great religious teachers who had sprung from the lower castes and lived among and felt with the people.

**(Thanks to the Wilco Books, Mumbai)**



தமிழண்ணல்

✧ சிவகங்கை மாவட்டம், நெற்குப்பையில் 12.8.1928 இல் பிறந்த இவர், உயர்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் 42 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய, ஒரு தமிழ் மாணவர்.

✧ சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, செவ்வியல் இலக்கியத் தொடர்பான நூல்கள் பல எழுதியவர்.

✧ பேரா. மு.வ. மூலம் 'அறிவுருவும்', அறிஞர் அண்ணா மூலம் 'உணர்வுருவும்' இளம் அகவையிலேயே இவரிடம் பதிவாயின.

✧ மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை, தாய் மொழியாம் தமிழ் ஒன்றே பாடமொழியும் பயிற்று மொழியும் ஆதல் வேண்டும்; பல்கலைக்கழக உயராய்வுப் பட்டங்கள் வரை– மருத்துவம், பொறியியலுட்பட – தமிழுக்கு, ஆங்கிலத்திற்கு நிகரான, 'மொழிச் சமநீதி' தரப்படவேண்டும்; தமிழை முழுமைபெறக் 'கல்வி மொழி' ஆக்க வேண்டுமெனப் போராடி வருபவர்.

✧ தமிழக அரசின் பொற்கிழிப் பரிசு, திரு. வி.க. விருது, சிறந்த நூற் பரிசு, நல்லாசிரியர் விருதுடன், தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் துணைத் தலைவர் – என்பதையும் பெற்றவர். தமிழக முதல்வர் கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' – நூலை வெளியிடும் வாய்ப்புப் பெற்றவர்.

✧ குன்றக்குடித் திருமடம்: கணக்காயர் பட்டம், மதுரைத் திருவள்ளுவர் கழகம்: தொல்காப்பியச் செம்மல், கோவிலூர்த் திருமடம்: அருந்தவச் செம்மல், ம.கா. பல்கலைக் கழகம்: தமிழ்ச் செம்மல், ச. மெய்யப்பர் பவள விழா விருது: தமிழியக்கச் செம்மல் என்பன சில இவர் பெற்றவை.

✧ 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை உடையவர். நிலத்தில் யார்க்கும், தம் கொள்கையை, உணர்வை, உறுதியை விட்டுக்கொடுக்க விரும்பாத நெறியை விரும்பிப் போற்றி வாழ்பவர்.

✧ இதனால் இவர் இழந்தவை பல; எனினும் மனத் தளர்ச்சிகள் கடுகளவும் இல! ஒவ்வொரு கணமும் இளமையையும் வலிமையையும் தந்து கொண்டிருப்பது இவர் கற்ற தமிழ்!